www.alhasanath.org மே 2010 ஜுமாதா அல்ஊலா – ஜுமாதா அல்ஆகிரா 1431 மலர்: 36 இதழ்: 05





# அல்ஹஸனாத்

الحسنات إسلامية شهرية تصدرها الجماعة الإسلامية السريلانكية

## அல்ஹஸனாத் 40 வருட நிறைவு விழா நினைவுகள்...









# After A/L's What's Next?

edexcel
INTERNATIONAL

# BTEC HND in Business ( IT )

Leading to the Final Year BSc (Hons) from a Leading UK University




We will help you to Boost up your Career with

## A World Class Qualification..

### Why BTEC HND at Institute of Business Studies ?

- The Fastest route to Complete a Recognized Business Management or IT Degree
- Highly Qualified & Experienced Lecturers
- Special Scholarships based on O/L Results
- Flexible Lecture Schedules
- Flexible mode of payments
- The Course is designed to meet Industry Challenges
- 10% Comprehensive Discount on Full Payment
- Awarded by Edexcel International - UK

**Duration 18 Months**




**HOTLINE 011 2729557**

# INSTITUTE OF BUSINESS STUDIES

# 67, Kawdana Road, Dehiwala. Tel: (011) 5522188, 5522488, 2729557 Fax: 011 2712149
Kandy Campus: 524/1/1, Peradeniya Road, Kandy. Tel: (081) 2200588, 5636377
Negombo Campus: 464, Main Street, Negombo. Tel: 0315677288
Email: info@ibslanka.com Web : www.ibslanka.com

بسم الله الرحمن الرحيم

"காலத்தின் மீது சத்தியமாக! நிச்சயமாக மனிதன் நஷ்டத்தில் இருக்கின்றான். ஆயினும், எவர்கள் ஈமான் கொண்டு ஸாலிஹான (நல்ல) அமல்கள் செய்து, சத்தியத்தைக் கொண்டு ஒருவருக்கொருவர் உபதேசம் செய்து, மேலும் பொறுமையைக் கொண்டும் ஒருவருக்கொருவர் உபதேசிக்கின்றார்களோ அவர்களைத் தவிர (அவர்கள் நஷ்டத்திலில்லை)." (103: 1-3)


மலர்: 36 இதழ்: 05

மே 2010, ஜு.அல்ஊலா - ஜு.அல்ஆகிரா 1431

ISSN : 1391 - 460X


**விலை விபரம்:**

**உள்நாடு**

தனிப் பிரதி : ரூபா 40.00

வருட சந்தா : ரூபா 600.00

ஆறு மாதம்: ரூபா 300.00

**வெளிநாடு**

இந்தியா, பாகிஸ்தான், மாலைதீவு, சிங்கப்பூர் : 1100.00

மத்திய கிழக்கு நாடுகள் : 1400.00

இங்கிலாந்து, நியூசிலாந்து, அவுஸ்திரேலியா, மலேஷியா, ஜப்பான், கொரியா : 1500.00

ஐக்கிய அமெரிக்க நாடுகள் : 1800.00

• • •


**வெளியீடு:**

**இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி**

**தொடர்புகளுக்கு:**

அல்ஹஸனாத்

77, தெமடகொட வீதி, கொழும்பு-09, இலங்கை

தொலைபேசி :(011) 2689324, தொலைநகல் :(011) 2686030

மின்னஞ்சல்: alhasanath@gmail.com

இணையதளம்: www.alhasanath.org



அல்குர்ஆன் விளக்கம்

**காலத்தின் மீது சத்தியமாக!** | 4-5

அஷ்ஷெய்க் தாஹிர் எம். நிஹால் (அஸ்ஹரி)

அல்ஹதீஸ் விளக்கம்

**அண்ணலார் ஓர் உளவள ஆலோசகர்** | 6-8

அஷ்ஷெய்க் எச்.எம். மின்ஹாஜ் (இஸ்லாஹி)

த'வா களம்

**சமூகத்தைக் கூறுபோட்டிருக்கும் 'குறுகிய இஸ்லாம் வாதங்கள்'** | 9-10

உஸ்தாத் ரஷீத் ஹஜ்ஜுல் அக்பர்

சூடான் அதிபராக உமர் அல்பஷீர் | 12-13

உலமாக்கள், தாஇகள் மீது தாக்குதல் | 14-15

அல்லாஹ்வை நோக்கிய பயணத்தில்... | 16-17

மறுமைப் பயணத்தில் டாக்டர் இஸ்ரார் அஹ்மத் | 22-23

பஹ்ரைன் இஜ்திமா | 34-35

இஸ்லாமிய வேடத்தில் மோசடிக்காரன்! | 36-38





**இஸ்லாம் உயர் தரம்**

**அந்நிஸா**


இது யார் செய்த குற்றம்?! | 22-23

ஒரு நிமிடத்தில்... | 26

பாசமிகு மனைவியை மகிழ்விப்பது எப்படி? | 27



அல்ஹஸனாத் இதழுக்கு சந்தாக்கள் அனுப்ப நாடுவோர் குறிப்பிட்ட தொகைக்கு ALHASANATH என்ற பெயருக்கு Money Order எடுத்து தபாலகம் DEMATAGODA எனக் குறிப்பிட்டு அனுப்பவும்.

Diploma in

# Spoken English

FREE TUTES & CD

## Our Coaching Method




Duration 3 Months

For three levels **8500/-**

| Basic | Intermediate | Advanced |
|---|---|---|
| ↓ | ↓ | ↓ |
| 1 Month | 1 Month | ?1 Month |

*01 Course*
*03 Certificates*

100% ஆங்கிலப் பேச்சுப் பயிற்சி பெற வெற்றிகரமான பாட நெறி

Diploma in

# Mobile Phone Repairing

## Hardware and Software Solution

தமிழ் மொழி மூலம்

**9500/-**

- காலம் : 12 நாட்கள் (உங்கள் வசதிக்கேற்ற நேரசூசி)
- Mobile Phone Technician ஆக உள்ள விரிவுரையாளர்கள் மூலமே இப்பயிற்சி நெறி நடாத்தப்படும்
- 100% செய்முறைப் பயிற்சியும் தனிப்பட்ட அவதானமும்
- Chinese Phone உட்பட அனைத்து Phone வகைகளுக்குமான செய்முறைப் பயிற்சி
- Software and Hardware க்கு வெவ்வேறான விரிவுரையாளர்கள்

Mobile Phone Repair துறையில் ஆர்வம் உள்ளவர்களுக்கும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பகுதிநேர தொழில் வாய்ப்பை பெற நாடுபவர்களுக்குமான சிறந்ததோர் பயிற்சிப்பாசறை

வதிவிட வசதி செய்து தரப்படும்

Diploma in தமிழ்மொழி மூலம்

# Air Conditioning & Refrigeration

- காலம் : 3 மாதங்கள் (வாரத்தில் இரண்டு நாட்கள்)
- உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் 20 வருடம் அனுபவம் வாய்ந்த விரிவுரையாளர்
- தனிப்பட்ட அவதானமும் 100% செய்முறைப் பயிற்சியும்.
- வெளிநாட்டில் அதிக தொழில் வாய்ப்பை பெற்றுத்தரும் சிறந்த பயிற்சி நெறி

**12500/-**

# GOLDEN COLLEGE

Institute of Engineering & Management Studies

**No.23, Suduhumpola Rd, (Off Peradeniya Rd) Kandy**
**(Near Girls' High School) Tel:081 2205544 /081 2234905**
**Mobile: 0777 912597/071 8032967**

# எமக்கொரு பணி காத்திருக்கிறது!

*"மனிதர்களுக்காக தோற்றுவிக்கப்பட்ட மிக்க மேன்மையான சமுதாயமாக நீங்கள் இருக்கின்றீர்கள்; நன்மையான காரியங்களை நீங்கள் ஏவுகின்றீர்கள்; தீமையை விட்டும் நீங்கள் விலக்குகின்றீர்கள்; மேலும் நீங்கள் அல்லாஹ்வை விசுவாசிக்கின்றீர்கள்..." (3: 110)*

இது அல்லாஹுத் தஆலா எம்மைப் பார்த்து பெருமிதப்படும் ஒரு கூற்று. இது அல்லாஹுத் தஆலா எமக்கு விடுக்கும் ஒரு கட்டளை. இதனை எடுத்து நடக்கும் காலமெல்லாம் நாமே மேன்மக்கள் என்பது இறைவனின் வாக்குறுதி.

இன்று எமது நாட்டில் தலைவிரித்தாடும் ஒரு தீமையான இருப்பது மதுப் பாவனையாகும். ஒவ்வொரு வீட்டிலும் இந்த மது அரக்கன் நர்த்தனமாடுகின்றான்; குடும்ப வாழ்வை சிதைக்கின்றான்; குடும்ப பொருளாதாரத்தை சீர்குலைத்து பிள்ளைகளைப் பட்டினி போட்டு வாட்டுகின்றான்; ஒழுக்க விழுமியங்களை சந்திக்கிழுத்து அம்பலமாக்கி ரசிக்கின்றான்.

இதனைப் பார்த்துக் கொண்டு நாம் இதுவரை காலமும் வாளாவிருக்கின்றோம். மற்ற சமூகங்கள் இதனால் சீரழிந்து போகும் போது கையைக் கொண்டு தடுத்து நிறுத்த வேண்டிய நாம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கின்றோம். 'தீன்' வந்தால் எல்லாம் சரியாகி விடும் என எம்மையே திருப்திப்படுத்திக் கொள்கிறோம். ஆனால் அந்த மது அரக்கனோ எமது சமூகத்துக்குள்ளும் புகுந்து விளையாடுகின்றான். இதனை நம் கண் முன்னே பார்த்துக் கொண்டு நாம் எமது பணியை சமுதாய வட்டத்திற்குள் வரையறுத்துக் கொள்கிறோம். இறுதியில் வெறும் 'பயான்' களில் எமது பணி முற்றுப் பெற்று விடுகின்றது.


இந்த நாட்டை நாம் நேசிக்கின்றோம் என்றால்... எமது 'தீனை' நாம் ஆராதிக்கின்றோம் என்றால்... எமது இந்தப் பணி பன்முகப்படுத்தப்பட்ட, பரந்த திட்டமாக மிளிர வேண்டும். இந்த மது அரக்கனுக்கெதிராக நாம் போர்க்கொடி தூக்கி, மதுவினால் பாதிக்கப்பட்ட பிற இன மக்களையும் அரவணைத்துக் கொண்டு வீடுவீடாக கிராமம் கிராமமாகச் சென்று குரல் கொடுக்க வேண்டும். மதுவை இந்த நாட்டின் பிரதான பிரச்சினையாகக் கருதி, ஊடகங்களின் நிகழ்ச்சிநிரலாக மாற்ற வேண்டும். பாராளுமன்றத்திலே கடுமையான சட்டங்களை விதிக்குமளவுக்கு எமது பிரசாரப் பணி விரிவுபடுத்தப்படல் வேண்டும். மது தீமைகளின் திறவுகோல் என்பதை நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) எமக்குக் கற்றுத் தந்துள்ளார்கள்.

இந்தப் பணியை நாம் இவ்வாறு முன்னெடுக்கும்போது பல்வேறு நன்மைகளை அல்லாஹுத் தஆலா நமக்களிக்கின்றான். முஸ்லிம்களின் சிந்தனை 'தம் சமூகம்' என்ற குறுகிய வட்டத்துக்குள்ளிருந்து நாடளாவிய பரந்த சிந்தனையாக மாற்றமடையும். நன்மையை ஏவும் கட்டத்திலிருந்து தீமையைத் தடுக்கும் சக்தியாக எமது பணி விரிவடையும். ஆலிம்களிடம் சரணடைந்துள்ள இஸ்லாமியப் பணி ஒவ்வொரு முஸ்லிமையும் தட்டியெழுப்பும்; சுறுசுறுப்பாக இயங்கச் செய்யும். ஏனைய சமூகங்களின் நன்மதிப்பை இது எம் சமூகத்துக்குப் பெற்றுத் தரும். இதனால் தஃவாவின் வாயில்கள் தானே திறந்து கொள்ளும். எமக்குள் இருக்கும் குத்துவெட்டுக்கள் மதிப்பிழந்து எமது சமூகத்திற்கோர் இலட்சியத்தை-வாழ்வின் நோக்கத்தை வரையறுத்துக் கொடுக்கும். சீர்குலைந்துள்ள குடும்ப வாழ்வு சீர்பெறும்.

இப்படி இன்னோரன்ன நன்மைகளை ஈட்டித்தரக் காத்திருக்கும் இப்பணியை நாம் ஆரம்பிப்பதன் மூலம் எமது இறுதி இலக்கை நோக்கி நகர்வது மிக இலகுவாகவும் நம்பிக்கையூட்டக்கூடியதாகவும் அமையும். அல்லாஹ்வின் வாக்குறுதியும் நிறைவேறும்.

இது இன்றைய இலங்கை முஸ்லிம்களின் ஜிஹாதாக மாற வேண்டும். இதற்காக எமது சிந்தனை சக்திகளையும் ஒன்றுதிரட்டி களத்தில் இறங்க முடியுமானால், நிச்சயமாக இந்த நாட்டை, இங்கு வாழும் சமூகங்களை இறையன்பைப் பெற்ற சமூகமாக மாற்றியமைக்க முடியும், இன்ஷா அல்லாஹ்.

# காலத்தின் மீது சத்தியமாக!



"காலத்தின் மீது சத்தியமாக! நிச்சயமாக மனிதன் நஷ்டத்தில் இருக்கின்றான். ஆயினும், எவர்கள் ஈமான் கொண்டு ஸாலிஹான (நல்ல) அமல்கள் செய்து, சத்தியத்தைக் கொண்டு ஒருவருக்கொருவர் உபதேசம் செய்து, மேலும் பொறுமையைக் கொண்டும் ஒருவருக்கொருவர் உபதேசிக்கின்றார்களோ அவர்களைத் தவிர (அவர்கள் நஷ்டத்திலில்லை)." (103: 1–3)

அஷ்ஷெய்க் தாஹிர் எம் நிஹால் (அஸ்ஹரி), அதிபர், இஸ்லாமிய பெண்கள் உயர் கல்லூரி, வடதெனிய

1400 வருடங்களுக்கு முன்னர் புனித அல்குர்ஆன் மரப் பலகைகளிலும் மரப் பட்டைகளிலும் ஈச்சமர ஓலைகளிலும் மிருகத் தோல்களிலும் தட்டையான கற்களிலும் எழுதப்பட்டிருந்த அக்கால கட்டத்தில் புனித அல்குர்ஆனை முழுமையாக மனனம் செய்தும் படித்தும் பயன் பெறுவதற்கான கால நேரம் அக்கால மக்களுக்கு தாராளமாக இருந்தது. ஆனால் இன்று தொழிநுட்பத்தின் உதவியோடு புனித அல்குர்ஆனும் அதன் மொழிபெயர்ப்புகளும் விளக்கவுரைகளும் கணனி மயப்படுத்தப்பட்டிருப்பதோடு, புனித அல்குர்ஆன் அச்சு வடிவில் தாராளமாகக் கிடைக்கும் இக்கால கட்டத்தில் ஒரு நாளைக்கு ஒரு வசனத்தையாவது படித்து, ஓர் அத்தியாயத்தையேனும் ஓதிப் பயன் பெறுவதற்கான கால நேரம் எம்மில் பலருக்கு போதாமலேயே உள்ளது. வீடுகளில் உள்ள புனித அல்குர்ஆன் பிரதிகளில் படிந்திருக்கும் தூசைக்கூட துடைப்பதற்கு நேரமில்லாத சிலரும் எம்மில் இல்லாமலில்லை.

ஸுன்னாவை ஒன்றுதிரட்டுவதில் இமாம் புகாரி போன்ற மேதைகள் எவ்வளவு தூரம் சிரமப்பட்டார்கள் என்பதனை வார்த்தைகளால் வர்ணித்துவிட முடியாது. ஒரு ஹதீஸைப் பெற்றுக் கொள்வதற்காக கால் நடையிலும் ஒட்டகைகளிலும் பாலைவனங்களைக் கடந்து பல நாட்கள் பயணம் செய்துள்ளனர். இவ்வாறு பல சிரமங்களுக்கு மத்தியில் ஒன்றுதிரட்டப்பட்ட ஸுன்னாவை நவீன தொழிநுட்பத்தின் உதவியோடு ஓரிரு நிமிடங்களில் பெற்றுக் கொள்ளும் வசதி வாய்ப்பு இருந்தபோதிலும் அதன் மூலம் பயன் பெறுவதற்கான கால நேரம் எம்மில் பலருக்கு இல்லை.

அன்று கல்விக்காக பல மாதங்களை, பல வருடங்களை பயணத்தில் கழிக்க வேண்டியிருந்தது. ஆனால் இன்று குளிரூட்டப்பட்ட அறைகளிலிருந்து கொண்டே இணையதள வலையமைப்பினூடாக முழு உலகையும் ஓரிரு நிமிடங்களில் வலம் வந்து பயன்பெறும் வாய்ப்பிருந்தும் இதனை ஆக்கபூர்வமான முறையில் பயன்படுத்திக் கொள்வற்கான நேரம் எம்மில் பலருக்கு இல்லை.

சில தசாப்தங்களுக்கு முன் தொலைபேசி வசதி இருக்காததால் ஒருவரின் மரணச் செய்தியை நேரில் சென்றே தெரிவிக்க வேண்டியிருந்தது. இருப்பினும் ஜனாஸாவின் இறுதிக் கடமைகளில் முழுமையாக பங்கேற்பதற்கு அவர்களுக்கு கால நேரம் இருந்தது. ஆனால் இன்றோ ரூஹ் பிரிந்து அடுத்த நிமிடமே செய்தி கிடைத்தாலும் கூட ஜனாஸாவின் இறுதிக் கடமைகளில் முழுமையாக பங்கேற்பதற்கு எம்மில் பலருக்கு கால நேரம் போதாதுள்ளது.

அன்று நகரத்திற்கு ஒரு தொலைபேசி இருந்தால் போதுமென்ற நிலை இருந்தது. பின்னர் கிராமத்திற்கும் தொலைபேசியின் தேவை உணரப்பட்டதோடு தேவை நின்று விடவில்லை. குடும்பத்திற்கு ஒரு தொலைபேசி போதாததால் குடும்ப அங்கத்தவர்கள் ஒவ்வொருவரும் கையடக்கத் தொலைபேசியை வைத்திருக்க வேண்டியதன் தேவை உணரப்பட்டதோடு தேவைகள் நின்றுவிட்டதாக இல்லை. ஒவ்வொருவரும் ஒன்றுக்கு மேற்பட்ட கையடக்கத் தொலைபேசிகளை வைத்திருக்க வேண்டிய தேவையும் சம காலத்தில் உணரப்பட்டுள்ளது. அத்தியவசிய பொருட்களையும் ஆடம்பர பொருட்களையும் பிரித்தறிய முடியாத ஒரு யுகத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

நவீன தொழிநுட்பத்தினை பயன்படுத்தி நாம் எதனை சாதித்துள்ளோம்.? அன்று ஸஹாபாக்கள், தாபிஈன்கள் அவர்களுக்குப் பின் வந்த அறிஞர்கள் சாதித்ததைப்

போன்று ஏதாவது செய்துள்ளோமா? எதற்கெடுத்தாலும் நேரமில்லை, வேலைப்பளு எனக் கூறிக் கொள்ளும் பெரும்பாலான மனிதர்களிடம் நாள் முடிவின்போது என்ன வேலைப்பளு? எதனை சாதித்தீர்கள்? என்று வினவப்பட்டால் எதுவும் இல்லை எனும் பதிலைத்தான் பெற்றுக் கொள்ள முடியும்.

மனிதனின் பொன்னான கால நேரம் வீணாகாது நேர முகாமைத்துவத்திற்கு உதவுவது நவீன தொழிநுட்பத்தின் பிரதான இலக்குகளில் ஒன்றாகும். இவ்விலக்கை நவீன யுகம் அடைந்து கொண்டுள்ளதா? எனும் கேள்விக்கு இல்லை எனும் பதிலே மிகவும் பொருத்தமானதாக இருக்குமென நினைக்கின்றோம். நவீன தொழிநுட்பத்தினை பெரும்பாலானவர்கள் பயன்படுத்தும் விதம் இதற்கு சான்றாக உள்ளது. உதாரணத்திற்கு இணையதள வலையமைப்பினூடாக ஐந்து நிமிடங்களில் பயன் பெறவும் முடியும்; ஐந்து மணித்தியாலங்களை வீணாகக் கழிக்கவும் முடியும். பெரும்பாலானோர் நவீன தொழிநுட்பத்தினை தவறான வழிமுறைகளில் பயன்படுத்தி பொன்னான காலத்தை வீணாக்கி நஷ்டமடைகின்றனர். இக்கருத்தினை வலியுறுத்தும் விதமாகவே இங்கு நாம் விளக்கத்திற்காக எடுத்துக் கொண்டுள்ள அத்தியாயம் அமைந்துள்ளது.

''சிந்திப்பவர்களுக்கு இவ்வத்தியாயம் மாத்திரம் போதுமானதாகும்'' என இமாம் ஷாபிஈ இவ்வத்தியாயத்தின் சிறப்பினை குறிப்பிடுகின்றார். புனித அல்குர்ஆனின் போதனைகளை இவ்வத்தியாயம் உள்ளடக்கியிருப்பது இக்கருத்துக்கான காரணமாகும். இதனாலேயே ஸஹாபிகளில் இருவர் சந்தித்து விடைபெற்றுச் செல்லும்போது இவ்வத்தியாயத்தை ஒருவர் மற்றவருக்கு ஓதிக் காண்பித்து ஸலாம் கூறியே விடைபெறுவார் எனும் அறிவிப்பு தபரானியில் பதிவாகியுள்ளது

மனிதனின் ஈடேற்றத்திற்கும் வெற்றிக்குமான பாதை இவ்வத்தியாயத்தின் தலைப்பாக அமைந்துள்ளது. இவ்விரு இலக்குகளையும் அடைந்து கொள்வதற்கான வழிமுறைகளை அல்லாஹ் நான்கு வகைப்படுத்தியுள்ளான். அவையாவன:

1. ஈமான்
2. அல்அமலுஸ் ஸாலிஹ் ( நற்செயல்கள்)
3. தஃவா
4. பொறுமை

ஈடேற்றத்திற்கும் வெற்றிக்குமான பாதையை மனிதன் தவற விடும்போது நிச்சயம் நஷ்டமடைந்து விடுகின்றான். இக்கருத்தினை புனித அல்குர்ஆனின் பல இடங்களில் நாம் கண்டுகொள்ள முடியும்.

"இன்னும் இஸ்லாம் அல்லாத (வேறு) மார்க்கத்தை எவரேனும் தேடினால் (அது) ஒருபோதும் அவரிடமிருந்து ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. மேலும் அ(த்தகைய)வர் மறுமை நாளில் நஷ்டமடைந்தோரில்தான் இருப்பார்." (3: 85)

"எவருடைய (நன்மைகளின்) எடைகள் இலேசாக இருக்கின்றனவோ, அவர்கள்தாம் தங்களையே நஷ்டப் படுத்திக் கொண்டவர்கள். அவர்கள்தாம் நரகத்தில் நிரந்தரமானவர்கள்." (23: 103)

''ஆகவே, (மறுமை நாளில்) அல்லாஹ்வைச் சந்திப்பதைப் பொய் என்று கூறியவர்கள் நிச்சயமாக நஷ்டம் அடைந்தவர்களாகி விட்டனர். அவர்களிடம் மறுமை நாள் திடீரென வரும்பொழுது உலகில் நாங்கள் அலட்சியமாய் இருந்ததற்காக எங்களுக்கு ஏற்பட்ட கை சேதமே என்று கூறுவார்கள். மேலும் அவர்கள் தங்கள் (பாவச்)சுமைகளை தங்கள் முதுகுகளின் மேல் சுமப்பார்கள். அவர்கள் சுமப்பது மிகவும் கெட்டது என்பதை அறிந்து கொள்ளுங்கள்." (6: 31)

"இன்னும் மனிதர்களில் (ஓர் உறுதியும் இல்லாமல்) ஓரத்தில் நின்று கொண்டு அல்லாஹ்வை வணங்குகிறவனும் இருக்கின்றான். அவனுக்கு ஒரு நன்மை ஏற்படுமாயின் அதைக் கொண்டு அவன் திருப்தியடைந்து கொள்கிறான். ஆனால் அவனுக்கு ஒரு சோதனை ஏற்படுமாயின், அவன் (தன் முகத்தை) அல்லாஹ்வை விட்டும் திருப்பிக் கொள்கிறான். இத்தகையவன் இம்மையிலும் மறுமையிலும் நஷ்டமடைகிறான். இதுதான் தெளிவான நஷ்டமாகும்." (22: 11)

அல்லாஹ்வின் ஆற்றலுக்கும் வல்லமைக்கும் அத்தாட்சிகளுக்கும் சான்றாக இருக்கும் காலத்தைக் கொண்டு அல்லாஹ் சத்தியம் செய்துள்ளான்.

"இன்னும் சிந்திக்க விரும்புபவருக்கு அல்லது நன்றி செலுத்த விரும்புபவருக்கு அவன்தான் இரவையும் பகலையும் அடுத்தடுத்து வருமாறு ஆக்கினான்." (25: 62)

'அல்அஸ்ர்' எனும் சொல்லை விளக்கும் அல்குர்ஆன் விளக்கவுரையாளர்கள் இது நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் காலத்தை, அவரது சமூகத்தின் காலத்தை, இரவு- பகலை, அஸர் தொழுகை நேரத்தை, மனிதனின் ஆயுளைக் குறிக்கும் சொல் எனக் குறிப்பிட்டுள்ளனர். இக்கருத்துக்கள் அனைத்தையும் காலம் எனும் சொல் உள்ளடக்கி உள்ளது. தனி மனிதனின் காலம் அவனது ஆயுள் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. ஆயுள் ஒவ்வொரு மனிதனுக்கும் கொடுக்கப்பட்ட அருட்கொடையாக இருப்பதோடு அவனது மூலதனமாகவும் உள்ளது. மனிதனின் மூலதனமாகிய ஆயுள் நாளடைவில் குறைந்து கொண்டே செல்கின்றது. இதனைப் புரிந்து செயற்படுவோர் நிச்சயம் வெற்றி பெறுவர். இதனைப் புரியாது செயற்படுவோர் நிச்சயமாக நஷ்டத்தில் இருக்கின்றார்கள்.

# அண்ணலார் ஓர் உளவள ஆலோசகர்



அஷ்ஷெய்க் எச்.எம். மின்ஹாஜ் (இஸ்லாஹி)
விரிவுரையாளர், இஸ்லாஹிய்யா பெண்கள் அரபுக் கல்லூரி

அபூ உமாமா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஒரு இளைஞர் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களிடம் வந்து "அல்லாஹ்வின் தூதரே! விபச்சாரம் செய்வதற்கு எனக்கு அனுமதி தாருங்கள்" எனக் கேட்டார். உடனே அங்கிருந்தவர்கள் அவரை நோக்கி "போதும்! போதும்! இத்தோடு நிறுத்திக் கொள்ளுங்கள்" என்று வன்மையாகக் கண்டித்து அவரைத் தடுத்தனர். அப்போது நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் "அவரை என்னிடம் நெருங்கி வரச் சொல்லுங்கள்" என்றார்கள். உடனே அவர் அண்ணலாரை நெருங்கினார். "அமர்ந்து கொள்வீராக!" என நபியவர்கள் கூறினார்கள். உடனே அவர் அமர்ந்து கொண்டார். பின்னர் அண்ணலார் "உமது தாயுடன் விபச்சாரம் செய்ய விரும்புவீரா?" எனக் கேட்டார்கள். "அல்லாஹ் என்னை உங்களுக்கு அர்ப்பணிப்பானாக! அல்லாஹ்வின் மீது ஆணையாக! அவ்வாறு நான் செய்ய விரும்ப மாட்டேன்! மனிதர்கள் யாரும் தங்களது தாய்மாருடன் துர்நடத்தையில் ஈடுபடுவதற்கு விரும்ப மாட்டார்கள்" என அந்த வாலிபர் கூறினார்.

"உமது பெண்பிள்ளையுடன் நீர் துர்நடத்தையில் ஈடுபடுவதற்கு விரும்புவீரா?" என நபியவர்கள் கேட்டார்கள். "அல்லாஹ் என்னை உங்களுக்கு அர்ப்பணிப்பானாக! அல்லாஹ்வின் மீது ஆணையாக அவ்வாறு நான் செய்ய விரும்ப மாட்டேன்! மனிதர்களில் யாருமே தங்களது பெண்பிள்ளைகளுடன் துர்நடத்தையில் ஈடுபடுவதற்கு விரும்ப மாட்டார்" என அந்த வாலிபர் கூறினார். "உமது சகோதரியுடன் துர்நடத்தையில் ஈடுபடுவதற்கு நீர் விரும்புவீரா?" என ரஸூலுல்லாஹ் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) கேட்டார்கள். "அல்லாஹ் என்னை உங்களுக்கு அர்ப்பணிப்பானாக! அல்லாஹ்வின் மீது ஆணையாக! அவ்வாறு நான் செய்ய விரும்ப மாட்டேன்! மனிதர்கள் யாரும் தங்களது சகோதரிகளுடன் துர்நடத்தையில் ஈடுபடுவதற்கு விரும்ப மாட்டார்கள்."

"உமது தந்தையின் சகோதரியுடன் விபச்சாரம் செய்ய நீர் விரும்புவீரா?" என மீண்டும் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கேட்டார்கள். "அல்லாஹ் என்னை உங்களுக்கு அர்ப்பணிப்பானாக! அல்லாஹ்வின் மீது ஆணையாக! அவ்வாறு நான் துர்நடத்தையில் ஈடுபட விரும்ப மாட்டேன். மனிதர்களில் யாரும் தங்களது தந்தையின் சகோதரிகளுடன் துர்நடத்தையில் ஈடுபடுவதற்கு விரும்ப மாட்டார்" என அந்த இளைஞன் கூறினார். பின்னர் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் "உமது தாயின் சகோதரியுடன் விபச்சாரம் செய்ய விரும்புவீரா?" எனக் கேட்டார்கள். "அல்லாஹ் என்னை உங்களுக்கு அர்ப்பணிப்பானாக! அல்லாஹ் வின் மீது ஆணையாக! அவ்வாறு நான் செய்ய மாட்டேன். மனிதர்களில் யாரும் தங்களது தாயின் சகோதரிகளுடன் துர்நடத்தையில் ஈடுபட விரும்ப மாட்டார்" என அந்த இளைஞன் கூறினார். உடனே நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அவர் மீது கையை வைத்து "யா அல்லாஹ்! இவரது பாவங்களை மன்னித்தருள்வாயாக; இவரது உள்ளத்தைப் பரிசுத்தப்படுத்துவாயாக; இவரது கற்பைப் பாதுகாப்பாயாக" எனப் பிரார்த்தித்தார்கள். அதன் பின்னர் அந்த இளைஞர் எந்தவொரு துர்நடத்தையின் பாலும் திரும்பிப் பார்த்ததே இல்லை. (முஸ்னத் அஹ்மத்)

**ஓர்** இளைய ஸஹாபியின் உள்ளத்தை நிர்மாணிப்பதில் அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் எடுத்துக் கொண்ட பிரயத்தனம் இந்த ஹதீஸில் தெளிவுபடுத்தப்படுகின்றது. ஒரு நபித் தோழருக்கான வெறும் மார்க்க உபன்னியாசமல்ல இது. மாறாக, அண்ணலார் வழங்கிய உளவள ஆலோசனையாகும்.

வாலிப வசந்தம் கொழிக்கும் பருவத்தில் தனது உணர்ச்சிக் கொந்தளிப்பு வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் அண்ணலாரின் முன்னிலையில் விபச்சாரம் செய்வதற்கான அனுமதியை ஒருவர் கோருகிறார். இது ஒழுக்கமற்ற, நாகரிகமற்ற செயலாகக் கருதப்பட்டு அவர் கண்டிக்கப்படுகிறார். ஆனால் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஒரு வித்தியாசமான நிலைப்பாட்டை எடுக்கின்றார்கள். அவரை ஒரு நோயாளியாகக் கருதி பாதிக்கப்பட்ட உள்ளத்திற்கு பரிகாரம் காண விழைகின்றார்கள். இடிந்து நொறுங்கிக் கிடந்த உள்ளத்தை மெல்லக் கட்டியெழுப்புகின்றார்கள். இதுவே இன்றைய உலகில் 'உளவள ஆலோசனை' என்ற பிரயோகத்தில் குறிக்கப்படுகின்றது.

நோயினால் உடல் பாதிக்கப்படுவதைப் போல உள்ளமும் பாதிப்புறுகின்றது. நோயுற்ற உள்ளத்தை அதிர்ச்சி வைத்தியம் செய்து குணப்படுத்த முடியாது. கடும்போக்கு, பலப்பிரயோகம், இறுக்கமான, பொருத்தமற்ற அணுகுமுறைகள் இவ்விவகாரத்தில் எதுவித பயனையும் தரப் போவதில்லை. எனவேதான் நபியவர்கள் இளைய ஸஹாபியை தனக்கருகே நெருங்கி வருமாறு அன்புக் கட்டளையிட்டார்கள். ஒரு வைத்தியர் நோயாளியை தனக்கருகே அமரவைத்து விசாரிப்பதைப் போல அண்ணலார் அந்த நபித்தோழரிடம் தர்க்கரீதியாக வினாத்தொடுத்து அவரை ஆற்றுப்படுத்தினார்கள். திருமணம் முடிப்பதற்கு ஹராமாக்கப்பட்ட மஹ்ரமிய்யத்தான உறவுகளை ஒவ்வொன்றாக அவரது மனக்கண் முன் கொண்டுவந்து நிறுத்தினார்கள். இத்தகைய உறவினர்களான பெண்களுடன் துர்நடத்தையில் ஈடுபடுவதற்கு மனித இயல்பு ஒருபோதும் விரும்புவதில்லை என்ற நியாயமான பதிலை அவரது நாவினாலேயே மொழியச்செய்து நொறுங்கிக் கிடந்த உள்ளத்தை மீள்நிர்மாணம் செய்தார்கள்.

இன்றைய பரபரப்பான, ஆரவாரமான, அவசரமான உலகில் பொதுவாக மனிதர்கள் மன அழுத்தங்களுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவசரமாக பணம் சம்பாதித்தல், காதல் முறிவு போன்ற இன்னோரன்ன காரணங்களினால் மனநெருக்கடிக்குள்ளாகி மனிதர்கள் மனநோயாளியாக மாறிவிடுகின்றனர். எப்போதும் டென்ஷனுடன் காலம் கழிக்கின்ற குடும்பங்களை எமது சமுதாயத்தில் நாம் அவதானிக்க முடிகின்றது. அங்கு சமாதானத் தென்றல் வீசுவதற்குப் பதிலாக எரிமலை குமுறிக் கொண்டிருக்கிறது. பொருத்தப்பாடும் இணக்கப்பாடும் எட்டப்படாத நிலையில் "சேர்த்து வைத்து விட்டார்கள்; வாழ்ந்துதானே ஆக வேண்டும்" என்ற மனப்பாங்குடன் இரு துருவநிலையில் வாழுகின்ற கணவனாலும் மனைவியாலும் குடும்பத்தில் சுதூகலத்தை உருவாக்க முடியுமா?

இத்தியாதி குடும்பங்களில் மன அழுத்தம் தனது வகிபாகத்தை கனகச்சிதமாகவே வழங்கிக் கொண்டிருக்கிறது. இறுதியில் இறைவன் வெறுக்கின்ற ஹலாலாகிய மனமுறிவே முடிவான விளைவாக அமைகின்றது. பிள்ளைகளின் ஒளிமயமான எதிர்கால வாழ்வில் இருள் கவ்விக் கொள்கின்றது.

சமுதாயத்தின் முதுகெலும்புகள் என சிலாகித்துப் பேசப்படுகின்ற இளைய தலைமுறையினர் இன்று வெகுவாக மன அழுத்தங்களினால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களது உள்ளங்களில் அரக்கனைப்போல குந்தியிருக்கின்ற வெறுமை அவர்களை சல்லடையாக்குகின்றது. பெற்றோரின் பிழையான பொருத்தமற்ற அணுகுமுறைகளினால் வளரிளம் பருவம் கருகிச் செல்கின்றது. இப்பருவத்தில் உடலில் ஏற்படுகின்ற மாற்றங்களைப் போல சிந்தனையிலும் உணர்விலும் உணர்ச்சியிலும் நடத்தையிலும் பாரிய மாற்றங்கள் ஏற்படுகின்றன என்பதனை இனங்கண்டு கொள்ள முடியாத நிலையில் வாழுகின்ற தந்தைமாரின் இறுக்கமான வைராக்கிய வழிப்படுத்தலினால் ஏற்பட்டு வரும் சீர்கேடுகள் எண்ணிலடங்காதவை.

டீன் ஏஜ் வயதை அடைந்து விட்ட மகனையும் மகளையும் இன்னும் சிறுபிள்ளையாகக் கருதி வழிப்படுத்தச் செல்வதனால் இவர்களால் ஒரு வன்முறையாளனையே சமூகத்திற்கு கொடுக்க முடியுமாக உள்ளது. ஒரு மகன் தனது உளக்கிடக்கைகளையும் மன நெருக்கடிகளையும் தனது எதிர்பார்க்கைகளையும் கொட்டுவதற்குத் தகுதியான இடம் தனது குடும்பம் அல்ல என்ற முடிவுக்கு வந்துவிடுகிறான். எனவே, அவற்றை தனது நண்பர்களிடம் கொட்டி ஆறுதலடைய முயற்சிக்கின்றான். தனது பெற்றோர் மேலதிகச் சுமை என்ற முடிவுக்கு வந்து விடுகின்றான். எனவே, இந்த மகனின் வாழ்வைத் தீர்மானிப்பது பெற்றோரல்ல. மாறாக தெருவோரத்து சகவாசமே.

குடும்பத்தில் தனது உள்ளத்தை மீள்நிர்மாணம் செய்து கொள்ளக் கூடிய அரிய வாய்ப்பை இழந்த பிள்ளை பாடசாலைச் சூழலிலும் அதனை இழந்து நிற்கிறது. வகுப்பறைகள் தகவல் கூடங்களாக மட்டுமே தொழிற்படுகின்றன. ஆசிரியர்-மாணவர் தொடர்பாடல் பெரும்பாலும் ஆரோக்கியம் இழந்து காணப்படுகின்றது. வளரிளம் பருவத்தின் இயல்பான உணர்வலைகளைப் புரிந்து கொண்டு கற்பித்தல் நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதில்லை. மாணவர்கள் பரீட்சைக்காக மட்டும் தயார்படுத்தப்படுகின்றார்கள். அவர்களது ஆன்மா, சிந்தனை, பண்பாட்டு விழுமியங்கள் தொடர்பில் பிரக்ஞையற்ற தகவல் பரிவர்த்தனை நடைபெறும் இடங்களாக வகுப்பறைச் சூழல் மாற்ற மடைந்துள்ளது. எனவே, பாடசாலைகளில் நற்பிரஜைகள் உருவாவதற்குப்

பகரமாக சட வாதிகளும் வன் முறை யாளர்களும் தெருச் சண்டைக்காரர்களும் உருவாக்கப்படுகின்றார்கள். பின்னர் இதே மாணவர்கள் ஆசிரியர்களினாலும் மூத்தவர்களினாலும் கடுமையாக விமர்சிக்கப்படுகின்றார்கள். டீன் ஏஜ் வயதினரைப் பொறுத்தவரை இது ஓர் அநாதரவான, பரிதாபகரமான நிலை யாகும்.

இவ்வாறு சமூகத் தளத்தில் மன அழுத்தத்திற்குட்பட்டு வாழுகின்றவர்களுக்கான உளவள ஆலோசனை காலத்தின் தேவையாக மாறியுள்ளது. குடும்ப வைத்தியர் இருப்பதைப்போல பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் உளவள ஆலோசகர் ஒருவர் இருக்க வேண்டும். மன அழுத்தத்திற்கு உட்பட்டும் கொடிய வெறுமை என்னும் நோயினால் பாதிக்கப்பட்டும் வாழுகின்ற ஒவ்வோர் இளைஞனும் தனக்கென ஓர் உளவளத் துணையாளனைக் கொண்டிருத்தல் அவசியமாகும்.

உளவள ஆலோசனை என்பது தனித்துறையாக இன்று வளர்ச்சி கண்டுள்ளது. இத்துறையில் மனிதர்கள் பயிற்றுவிக்கப்படுகின்றார்கள். இத்துறையில் படித்துப் பட்டம் பெற்று தொழில் புரிவோரும் உருவாகியுள்ளார்கள். ஆனாலும் அண்ணலார் முன்னெடுத்த உளவள ஆலோசனை என்பது உலகியல் நோக்கங்களுக்கு அப்பாற்பட்டதாகும்.

நாம் விளக்கத்திற்கு எடுத்துக் கொண்ட ஹதீஸில் அண்ணலார் தர்க்க ரீதியான படிமுறைப் போக்கில் அமைந்த முறையைப் பிரயோகித்து அந்த இளைய ஸஹாபியுடன் உரையாடுவதோடு மட்டும் நிறுத்திக் கொள்ளவில்லை என்பது தெளிவாகின்றது. மாறாக, அந்த இளைய ஸஹாபியின் உள்ளத்தை மீள்நிர்மாணம் செய்யும் பணியில் இறைவனின் பேருதவியை வேண்டி நின்றார்கள். ஆகவேதான் நபியவர்கள் அவருக்காக இறுதியில் பிரார்த்தித்தார்கள். அண்ணலார் அறிமுகம் செய்து வைத்த உளவள துணைக்கும் இன்று ஒரு கலையாக வளர்ந்துள்ள உளவளத் துணைக்கும் உள்ள பாரிய வேறுபாடு இதுவேயாகும்.

உளவள ஆலோசனை என்பது தொழில்சார் நடவடிக்கையாக மாற்றமடைந்தால் எதிர்பார்த்த பலனை நாம் அடைய முடியாது. அது ஒரு மனித உரிமை என்பதை துறைசார் நிபுணர்கள் கவனத்திற் கொள்ள வேண்டும்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்: "உன்னிடம் ஒரு சகோதரர் ஆலோசனை கேட்டால் ஆலோசனை கூறு."

எனவே, இன்றைய உளவள ஆலோசனைத் துறையின் முன்னோடியாக நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் திகழுகின்றார்கள் என்பது மறுக்க முடியாத ஒரு பேருண்மையாகும்.



# சமூகத்தைக் கூறுபோட்டிருக்கும் 'குறுகிய இஸ்லாம் வாதங்கள்' அல்லாஹ்வின் உதவி எங்கனம் வரும்?

உஸ்தாத் ரஷீத் ஹஜ்ஜுல் அக்பர், அமீர், இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி

ஒரு சமூகத்தை நாசப்படுத்துவதில் அச்சமூகத்தை பிளவுபடுத்தும் காரணிகளே 90% பங்கை வகிக்கின்றன. குறுகிய இலாப நோக்கம் கொண்டவர்களும் சமூகப் பிரக்ஞையற்றவர்களும் இஸ்லாத்தின் இலட்சியங்களை அறியாதோருமேதான் பிளவுக்கான காரணிகளை தூபமிட்டு வளர்க்கின்றனர்.

இத்தகையோர் சமூகத்தை பிளவுபடுத்தி சதாவும் அந்தப் பிளவுகளுக்குள் குளிர்காய்ந்து ஜீவனோபாயம் நடத்துவதற்கு இரண்டு முக்கிய காரணிகளைப் பயன்படுத்துகின்றனர்.

1. அரசியல்

2. குறுகிய இஸ்லாம் வாதங்கள்

அரசியல் மூலம் இலாபம் தேட முயற்சிப்போர் குறுகிய இனவாதத்தையும் அதனோடு இணைத்துக் கொள்கின்றனர். அரசியல் என்றாலே 'இனவாத அரசியல்' என்று கூறுமளவு இரண்டும் ஒன்றோடொன்று இணைந்தே பயணம் செய்கின்றன. இந்தப் பயணத்தால் கடந்த மூன்று தசாப்தங்களாக எமது நாடும் சமூகங்களும் அனுபவித்த அவலங்களை விபரிக்க வேண்டியதில்லை. நாட்டைப் பிளவுபடுத்தி அனைத்து சமூகங்களையும் துயரத்தில் ஆழ்த்திய மகிமை இனவாத அரசியலுக்குண்டு. இனியும் அந்த அவலம் தொடராது என்பதற்கு உத்தரவாதமில்லை.

அனைத்து சமூகங்களினது அவலங்களுக்கும் பொதுக் காரணியாக இருக்கும் இனவாதம், முஸ்லிம் சமூகத்தையும் பாதிப்படையச் செய்திருக்கிறது. இது விரிவாகப் பேசப்பட வேண்டிய ஒரு விடயமாகும். நாம் இங்கு அதனை விடுத்து, முஸ்லிம் சமூகத்தை மிக மோசமாகப் பாதிப்படையச் செய்திருக்கின்ற மற்றுமொரு பிளவுக் காரணியை இன்றைய தஃவாக் களத்தின் கருவாக எடுத்துக் கொள்கின்றோம். அதுதான் 'குறுகிய இஸ்லாம் வாதங்களா'கும்.

இதன் பொருள் ஒவ்வொரு சாராரும் இஸ்லாத்தைத் தமது வசதி கருதியோ அல்லது தமது பாட்டன், பூட்டனாரைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றியோ அல்லது தமது விருப்பத்திற்கேற்பவோ ஒரு சிறிய எல்லைக்குள் சுருக்கி வைத்துக் கொள்கிறார்கள். பின்னர் அதனை மாத்திரமே இஸ்லாம் என்றும்; தாம் வரையறைத்துக் கொண்ட எல்லைக்கு வெளியே இஸ்லாம் இல்லை என்றும் அவர்கள் வாதிடுகிறார்கள்.

இது வெறும் 'வாதம்' அல்லது 'விவாதம்' என்ற அளவில் நின்றுவிடுவதில்லை. தாம் இஸ்லாம் என்று கருதுவதற்கு அப்பாலும் இஸ்லாம் இருக்கிறது என யாராவது கூறினால் அவரை விலாசமில்லாமல் செய்யத் துணியுமளவு இந்தக் 'குறுகிய இஸ்லாம் வாதம்' சமூகத்தில் ஆதிக்கம் செலுத்துகிறது. இதற்கு அந்தக் 'குறுகிய இஸ்லாம் வாதத்தில்' சிக்கியிருக்கும் பெரியவர்களும் மௌன அங்கீகாரம் வழங்குகிறார்கள். அவர்களுக்கு இஸ்லாமோ முஸ்லிம் சமூகமோ எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை. தங்களது குறுகிய இஸ்லாம் வாதத்தைப் பாதுகாத்துக் கொள்வதுதான் அவர்களுக்கு முக்கியமாக இருக்கிறது.

இந்தப் போக்கு முஸ்லிம் சமூகத்தை எழுச்சி பெறச் செய்யவில்லை. மாறாக முஸ்லிம் சமூகம் தனக்குள்ளேயே தனது பாக்கியங்களைப் புதைத்துவிடும் அவலத்தைத் தோற்றுவித்திருக்கிறது.


இந்தக் குறுகிய இஸ்லாம் வாதத்தின் மோசமான பிரதிபலிப்புகள் அண்மைக் காலமாக அதிகரித்துச் செல்கின்றன. இதனைக் கண்டு அஞ்சிய ஜம்இய்யதுல் உலமா இதனைக் கட்டுப்படுத்த பல்வேறு முயற்சிகளை அண்மைக் காலமாக மேற்கொண்டு வருகிறது. தான் கூறுவது மட்டும் இஸ்லாம் அல்ல. ஏனையவர்கள் (அதாவது இஸ்லாமிய உம்மத்திலிருந்து வெளியேறாதவர்கள்) கூறுவதும் இஸ்லாம் என்பதை அங்கீகரிக்க வேண்டும். பிறர் கூறும் கருத்துக்களை அங்கீகரிக்க தமக்கு 'குறுகிய இஸ்லாம் வாதம்' இடம் தராது போனால் அக்கருத்துக்களைக் கூறுவோருடன் மோதி, சமூகத்தைப் பிளவுபடுத்தாமல் இஸ்லாமிய வரையறைகளைப் பேணி நடந்து கொள்ள வேண்டும். ஒருவருடைய கருத்துக்கு மாற்றமானதாக மற்றொருவருடைய கருத்து இருக்குமாயின் அப்போது பேண வேண்டிய இஸ்லாமிய வரையறைகள் இருக்கின்றன. அவற்றைப் பின்பற்றுவது எப்படி? எனும் ஒரு 'பகிரங்க அறிக்கை' யையும் ஜம்இய்யதுல் உலமா அண்மையில் வெளியிட்டு வைத்திருக்கிறது.

எனினும், 'குறுகிய இஸ்லாம் வாதம்' இந்த அறிக்கையினால் தணியவில்லை. மாறாக ஜம்இய்யதுல் உலமாவின் அறிக்கையையே மறுபரிசீலனைக்கு உட்படுத்த வேண்டும் என பல மூத்த ஆலிம்கள் பேசுமளவு இந்தக் 'குறுகிய இஸ்லாம் வாதம்' இன்றும் தனது செல்வாக்கைப்

பிரயோகித்துக் கொண்டுதானிருக் கிறது. சில பள்ளிவாசல்களில் இந்த அறிக்கையை தொங்க விடாதிருப்ப தற்கும் இந்தக் குறுகிய இஸ்லாம் வாதமே காரணமாகும். அறிக்கை யைப் படிப்பவர்கள் 'குறுகிய இஸ் லாம் வாதம்' அர்த்தமற்றது என்பதை விளங்கிக் கொள்வார்களோ எனும் பயத்தைத் தவிர அவர்களை வேறு எது ஆட்கொண்டிருக்க முடியும்?!

ஓர் ஊரில், மாற்று இயக்கத்தைச் சேர்ந்தவர்களை அடித்துத் துரத்திய ஒரு பள்ளிவாசல் சம்மேளனத் தலை வர், "ஜம்இய்யதுல் உலமா உங்களை இங்கே வரச் சொன்னாலும் நாங்கள் உங்களை இங்கே வர அனுமதிக்க மாட்டோம்" என்று கூறினார். இத்த னைக்கும் அப்படிச் சொல்பவர்கள் ஜம்இய்யதுல் உலமாவிற்கும் அதன் தலைவர்களுக்கும் மிகுந்த மரி யாதை செலுத்துபவர்கள்.

முஸ்லிம் சமூகத்தின் கட்டுக்கோப்பு மட்டுமல்ல; உள்ளங்களும் சிதறி சின்னா பின்னமாகியிருக்கின்றன. ஒற்றுமை என்ற வார்த்தையே பலருக்கு கசப்பாக இருக்குமளவு இந்தப் பிளவு ஆழமாகி விட்டது. மேடைப் பேச்சுக்களை அலங்கரிக்கும் சொல்லாக 'ஒற்றுமை' இருக்கின்றதே தவிர, உள்ளத்தில் வாழும் உயிர்த் துடிப்புமிக்க ஒரு கொள்கையாக ஒற்றுமை இல்லை. இந்த நிலையில் அல்லாஹ்வின் அருளும் உதவியும் எம் சமூகத்துக்கு எப்படிக் கிட்டும்?!



முஸ்லிம் சமூகம் ஏன் இன்று பல வீனப்பட்டிருக்கிறது? ஏன் அது அல் லாஹ்வின் அருளிலிருந்தும் உதவி யிலிருந்தும் தூரமாக்கப்பட்டிருக் கின்றது? என்பதற்கான காரணத்தை குர்ஆன், ஸுன்னாவில் தேடிப் பாருங் கள். அது தனக்குள் பிளவுபட்டுச் சிதறிக் காணப்படுகிறது என்பதைத் தவிர வேறு காரணிகள் எதனையும் நீங்கள் அங்கு காண மாட்டீர்கள்.

முஸ்லிம் சமூகத்தின் கட்டுக் கோப்பு மட்டுமல்ல; உள்ளங்களும் சிதறி சின்னாபின்னமாகியிருக்கின் றன. ஒற்றுமை என்ற வார்த்தையே பலருக்கு கசப்பாக இருக்குமளவு இந்தப் பிளவு ஆழமாகி விட்டது. மேடைப் பேச்சுக்களை அலங்கரிக் கும் சொல்லாக 'ஒற்றுமை' இருக்கின் றதே தவிர, உள்ளத்தில் வாழும் உயிர்த் துடிப்புமிக்க ஒரு கொள்கை யாக ஒற்றுமை இல்லை. இந்த நிலை யில் அல்லாஹ்வின் அருளும் உதவி யும் எம் சமூகத்துக்கு எப்படிக் கிட் டும்?! அல்லாஹ் கூறுகின்றான்:

**"(பிணக்குகள் நிறைந்த) இழு பறி நிலைகளை நீங்கள் ஏற்படுத்திக் கொள்ள வேண்டாம். நீங்கள் தோல்வி யடைவீர்கள்; உங்களது பலம் போய் விடும்." (8: 46)**

தோல்வி, பலவீனம் என்பவற்றிற் கான காரணத்தை அல்லாஹ் இந்த வசனத்தில் தெளிவாக கோடிட்டுக் காட்டுகிறானல்லவா? இதனையே அருமைத் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் இப்படிக் கூறினார்கள்:

"அல்லாஹ்வின் கரம் கூட்ட மைப்போடு இருக்கிறது."

அதாவது, முஸ்லிம்கள் ஓர் அமைப் பாக, சிதறாமல், பிளவுபடாமல் இருப் பின் அல்லாஹ்வின் கரம் (உதவி) அவர்களுக்கு நிச்சயம் உண்டு.

முஸ்லிம்கள், 'கூட்டமைப்பு' எனும் இக்கடமையை பிணக்குகள் இன்றி, பிளவுகள் இன்றி எந்தளவு நிறைவேற்ற வேண்டும் என்பதை நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல் லம்) அவர்கள் விளக்கும்போது,

"முஃமின்கள் சமூகத்தின் நட்பு, பரஸ்பர கருணை, புரிந்துணர்வு என்பவற்றிற்கு உதாரணம் ஓர் உடல் போன்றதாகும். அவ்வுடலில் ஒரு பகுதி வேதனைப்பட்டால் ஏனைய பகுதிகள் விழித்திருந்து காய்ச்சல் காய்ந்து அந்த வேதனையைப் பகிர்ந்து கொள்ளும்" எனக் கூறினார்கள்.

இன்று, காய்ச்சல் காய்ந்து, விழித் திருந்து வேதனையைப் பகிர்ந்து கொள்ளும் பண்பை எமது சமூகத் தில் பார்க்க முடியாது. வெட்டி, அரிந்து சகோதர மாமிசத்தைச் சாப்பிடும் நிலையைத்தான் முஸ்லிம் சமூகத்தில் காண முடிகிறது. இந்தச் சமூகத்திற்கு அல்லாஹ்வின் உதவி எப்படி வரும்?!

அல்லாஹ்வின் பாதையில் உயிர், உடமைகளைப் பணயம் வைத்துப் போராடும்போது கூட, வெறும் போராட்டத்தை நேசிப்பதாக அல்லாஹ் கூறவில்லை; மாறாக...

**"ஈயத்தால் உருக்கி வார்க்கப் பட்ட அரணைப் போல் அல்லாஹ்வின் பாதையில் ஓர் அணியாக நின்று போராடுபவர்களையே நிச்சய மாக அவன் நேசிக்கின்றான்" (61: 4)** என அல்லாஹ் பிரஸ்தாபிக்கின்றான்.

ஆக, போராட்டத்தை நேசிப்பதை விட ஓரணியாக நின்று போராடுவ தையே அல்லாஹ் நேசிக்கிறான் என்பது தெளிவாகின்றதல்லவா?.

உஹதில் ஓரணி, பிளவுபட்டு இரு அணிகளாயின. அல்லாஹ் நபி களார் இருக்கும்போதே அந்த உஹ துப் போரை மிகப் பயங்கரமான முறையில் முஸ்லிம்களுக் கெதிராகத் திருப்பி விட்டான். ஸஹாபாக்கள் அணியில் ஏற்பட்ட ஒரு பிளவுக்காக நபிகளார் வாழும்போதே அல்லாஹ் இத்தகைய ஒரு பாரிய சோதனையை அவர்களுக்குக் கொடுத்தான் எனில் நாங்கள் எம்மாத்திரம்?!!

உஹுத் போரின்போது அணியில் பிளவை ஏற்படுத்த வேண்டும் என யாரும் சதித்திட்டம் தீட்டவில்லை. இங்கே எமது சமூகத்திலோ, இரவு பகலாக பிளவுகளை ஏற்படுத்துவதற்கென்றே சதித்திட்டங்கள் தீட்டிய வண்ணம் பொழுதைக் கழிப்பவர்கள் இருக்கிறார்கள். இத்தகைய சமூகம் பலம் பெறுமா, பலவீனப்படுமா, வெற்றி பெறுமா, தோல்வியடையுமா? அல்லாஹ்வின் உதவி இதற்குக் கிட்டுமா அல்லது ஷைத்தானின் தோழமை மேலும் நெருக்கமாகுமா?

அது மட்டுமல்ல, சமூகத்தைப் பிளவுபடுத்தும் சதிகளை செய்பவர்கள் மற்றுமொரு சதிக் கும்பலுக்கெதிராக சதி செய்தால் உலகக் கண்ணோட்டத்தில் அதற்கு ஏதாவது ஒரு நியாயத்தைக் கற்பிக்கலாம். சதிக்கு எதிரான சதி என அதனைக் குறிப்பிடலாம். எனினும், இங்கு நடைபெறுவதோ எந்த தர்மத்துக்கும் ஒவ்வாத சதியாகும். அது யாருக்கெதிரான சதி தெரியுமா?

முஸ்லிம் உம்மத்தை அதன் பலம்-பலவீனங்களோடு நேசிக்கின்ற... முஸ்லிம் உம்மத்தின் எதிர்கால ஐக்கியத்தை கனவாகவும் இலட்சியமாகவும் கொண்டு உழைக்கின்ற... அதற்காக அதன் தவறுகளை மன்னிக்கின்ற... அறியாமையினால் முஸ்லிம் சமூகம் செய்கின்ற தவறுகளுக்காக அதனைக் காட்டிக் கொடுத்து இலாபம் பெற முயற்சிக்காத.... முஸ்லிம் சமூகத்தின் கெடுபிடிகளால் ஏற்படும் நட்டங்களைப் பொறுத்துக் கொள்கின்ற.... முஸ்லிம் சமூகத்திலிருக்கின்ற எந்தத் தனிநபருக்கோ அல்லது அமைப்புக்கோ தீங்கு விளைவிக்க முயலாத.... அன்பையும் உயர்ந்த பண்புகளையும் அறிவையும் கலைகளையும் போதிக்கின்ற.... அனைவரதும் உலக- மறுமை வாழ்க்கை வளம் பெறுவதற்கு வழிகாட்டுகின்ற... வன்முறைகளை அறவே விரும்பாத....... சாத்வீக வழிகளைக் கையாளுகின்றவர்களுக்கு எதிராகவே அச் சதிகள் தீட்டப்படுகின்றன. அந்த சதிகளுக்கு இஸ்லாமிய முலாம் பூசி, ஆசீர்வாதம் வழங்கும் ஆலிம்(?)களும் இருக்கிறார்கள்.

அன்று முதல் இன்று வரை ஜமாஅத்தே இஸ்லாமிக்கு எதிராக நடந்த சதிகள் இந்த வகையைச் சார்ந்தவையே. அத்தகைய சதிகளை இன்றும் நாம் சமூகத்தில் எதிர்கொள்கிறோம். எனினும், அச் சதிகள் எமது சாத்வீகமான போக்கில் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை.

நபிகளாரின் (ஸீரா) வரலாற்றை வாசிக்கும் ஒருவர் அங்கும் இதனையே காண்பார். பின்னர் அவர் கேட்பார்: நபிகளார் செய்த சதி என்ன; அதற்கெதிராக அந்தக் குறைஷியரும் அறபுக் கூட்டமும் சதி செய்வதற்கு?

ஆம், நபிகளார் செய்த சதி ஒன்றிருக்கிறது. அது நல்ல சதி...! அறியாமையின் கோரப் பிடியில் மக்களை நசுக்கி வைத்துக் கொண்டு தாங்கள் நினைத்ததை எல்லாம் வெற்றிகரமாக சாதித்துக் கொண்டிருந்த ஒரு மேல்வர்க்கத்தின் பிடியிலிருந்து, பிரகாசமான அல்லாஹ்வின் பாதையை நோக்கி அன்போடும் பண்போடும் மக்களை அழைத்து வந்தமைதான் அந்தச் சதி! அந்தச் சதியை சகிக்க முடியாமல்தான் குறைஷி வம்சம் நபிகளாருக்கெதிராக சதி செய்தது.

இங்கு நபிகளார் சென்ற பாதையும் அண்ணலாரின் எதிரிகள் சென்ற பாதையும் தெளிவாகத் தெரிகிறதல்லவா? இதனைவிட, எங்களுக்கு பாதை சொல்லித் தருவதற்கு வேறு யாரால் முடியும்? நாங்கள் செல்லும் பாதை எப்படிப்பட்டது என்பதை வேறு யாரிடமும் சென்று நாங்கள் பாடம் கற்க வேண்டிய அவசியமில்லை அல்லவா? அல்ஹம்துலில்லாஹ்.

இருப்பினும் 'குறுகிய இஸ்லாம் வாதம்' எமது சமூகத்தை ஆட்டிப் படைத்துக் கொண்டுதானிருக்கிறது. அதனை அணைய விடாமல் சிலர் ஊதித் தூபமிட்டுக் கொண்டேயிருக்கிறார்கள். எனினும், அல்லாஹ்வின் பிரகாசத்தை வாயால் ஊதி அணைக்க எவரால் முடியும்? அல்லாஹ் தனது பிரகாசத்தைப் பூர்த்தி செய்தே தீருவான்!

சாய்ந்தமருது
பிரதான வீதியில்
கடைவளவு
விற்பனைக்கு உண்டு
அகலம் X நீளம் 32 X 55
தொடர்புகளுக்கு:
0672222523, 0715489159

# சூடான் அதிபராக
# உமர் அல்பஷீர்
## சர்வதேச பிடியாணைக்கு எதிரான மக்கள் ஆணை!



❑❑ ஜெம்ஸித் அஸீஸ்

**சர்வததேச** குற்றவியல் நீதிமன்றம் (ICC) போர்க்குற்றம் மற்றும் மனித நேயத்துக்கெதிரான வன்முறை முதலானவற்றுக்காக யாரை கைது செய்து சட்டத்தின் முன்நிறுத்தி தகுந்த தண்டனை வழங்க வேண்டுமென துடித்துக் கொண்டிருக்கிறதோ, அவர் தனது நாட்டு மக்களின் பெரும்பான்மை ஆணையைப் பெற்று மீண்டும் ஜனாதிபதியாக அரியணை ஏறியிருக் கிறார். அவர்தான் சூடானிய ஜனாதிபதி உமர் ஹஸன் அல்பஷீர் அவர்கள்.

கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் 68% ஆன வாக்குகளைப் பெற்று உமர் அல்பஷீர் வெற்றியீட்டியுள்ளார். தேர்தல் முடிவுகளை சூடானிய அரசு உத்தியோகபூர்வமாக வெளியிட்டதைத் தொடர்ந்து தொலைக்காட்சியில் உரை நிகழ்த்திய ஜனாதிபதி உமர் அல்பஷீர், தன்மீது நம்பிக்கை வைத்து வாக்களித்த மக்களுக்கும் தேர்தலை மிகவும் அமைதி யாகவும் எவ்வித குளறுபடியுமின்றி நடத்தி முடிப்பதற்கு பூரண ஒத்துழைப்பு வழங்கிய இராணுவம், பாதுகாப்பு படையினர் மற்றும் தேர்தல் அதிகாரிகளுக்கும் பூரண நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

மறுபுறம் எதிர்க்கட்சிக்காரர்கள் இத்தேர்தலில் மோசடி இடம்பெற்றுள்ளதாகவும் தார்பூர் பிரச்சினை தீர்க்கப்படாத நிலையில் நடைபெற்ற இத்தேர்தல் முடிவை ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் கருத்து வெளியிட்டுள்ளனர். புனர்நிர்மாணம் மற்றும் சீர்திருத்த வாத கட்சியின் தலைவர் வெளியிட்டுள்ள அறிக்கை யில், உமர் அல்பஷீர் 51% ஆன வாக்குகளைக் கூடப் பெறவில்லை. தேசிய காங்கிரஸ் கட்சிக்காரர்கள் இரா ணுவ மற்றும் பாதுகாப்புப் படையினரின் அதிகாரங்க ளைப் பயன்படுத்தி உமர் அல்பஷீரை வெற்றி பெற வைத்துள்ளனர் எனத் தெரிவித்துள்ளார்.

உமர் அல்பஷீரை எதிர்த்துப் போட்டியிட்ட முன் னணி வேட்பாளர்களுள் ஒருவரான யூஸுப் இம்ரான் தேர்தல் குறித்து கருத்து தெரிவிக்கையில், இந்த வெற்றியை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது; பலர் வாக்களிப்பதற்கு மறுக்கப்பட்டுள்ளனர். இத்தேர் தலில் 6 மில்லியன் வாக்குகளைக் கூட பெறாத அல்பஷீர் உண்மையில் தோல்வியையே தழுவியுள்ளார். சர்வதேச நீதிமன்றம் போர்க் குற்றங்களுக்காக அவரை கைது செய்ய பிடியாணை பிறப்பித்திருக்கும் நிலையில் இவரின் இந்த மோசடிகள் நிறைந்த வெற்றியை ஏற்றுக் கொள்ள மாட்டோம் எனத் தெரிவித்துள்ளார்.

**உமர் அல்பஷீர் யார்?**

உமர் ஹஸன் அஹ்மத் அல்பஷீர் 1944 ஜனவரி முதலாம் திகதி Hosh Bannage எனும் கிராமத்தில் மிக வும் எளிமையான விவசாயக் குடும்பத்தில் பிறந்தார். சிறு வயது முதல் இராணுவப் பயிற்சியில் அதிக ஈடுபாடு கொண்டதன் காரணமாக 1960 இல் அவரது 16 வயதில் சூடான் இராணுவத்தில் இணைந்தார். 1966இல் சூடான் இராணுவக் கல்லூரியில் கற்று பட்டதாரியாக அங்கி ருந்து வெளியேறினார். பின்னர் 1981இல் இராணுவ வியல் துறையில் கலைமானிப் பட்டம் பெற்றார். 1983இல் மலேசிய பல்கலைக்கழகமொன்றில் இரா ணுவத் துறையில் மற்றுமொரு கலைமானிப் பட்டம் பெற்றார். 1987 இல் நிர்வாகத் துறையில் பட்டப்படிப்பை பூர்த்தி செய்தார். எகிப்து இராணுவ அகடமியிலும் கல்வி கற்ற அவர், 1973இல் எகிப்து இராணுவத்தில் இணைந்து அதே ஆண்டில் இஸ்ரேலுக்கெதிராக எகிப்து இராணு வம் மேற்கொண்ட போரிலும் கலந்து கொண்டார்.

1980 களில் சூடான் திரும்பிய உமர் அல்பஷீர் சூடான் இராணுவத் தளபதியாக கடமையாற்றினார். 1989இல் இராணுவப் புரட்சியின் மூலம் முன்னாள் பிரதமர் ஸித்தீக் அல்மஹ்தியை பதிவியிலிருந்து வெளியேற்றி அதிகாரத்துக்கு வந்தார். அதிகாரங்களைப் பயன்படுத்தி ஷரீஆ சட்டங்களை நடைமுறைப்படுத்தினார். தேசிய பாதுகாப்புக்கான புரட்சி சபையை (Revolunationary

Command Council for National Salvation) உருவாக்கி அதன் மூலம் பிரதமர், இராணுவத் தலைவர், பாதுகாப்பு அமைச்சர், நாட்டுத் தலைவர் ஆகிய பதவிகளைப் பொறுப்பேற்றார். இதன் (National Islamic Fornt) தலைவராக ஹஸன் அத்துராபியை நியமித்தார்.

1993 ஒக்டோபர் 16 ஆம் திகதி சூடானின் ஜனாதிபதியாக பதவிப் பிரமாணம் செய்தார். 1990களில் உமர் அல் பஷீரின் அரசு சூடான் நாட்டு நாணயப் பெறுமதியை சூடான் தீனாராக மாற்றியது.

இக்காலப்பகுதியில் சூடானுக்கும் பயங்கரவாத அமைப்புகளுடன் தொடர்பிருப்பதாகவும் உஸாமா பின்லேடனுக்கு ஆதரவு வழங்குவதாகவும் கூறி ஐ.நா. சபை சூடானையும் பயங்கரவாதத்துக்கு துணை புரியும் நாடுகள் பட்டியலில் சேர்த்தது.

சூடானின் பெற்றோலிய வளங்களைச் சுரண்டிக் கொண்டிருந்த அமெரிக்காவுக்கு உமர் அல்பஷீரின் அரசு பெரும் தலையிடியைக் கொடுக்க ஆரம்பித்தது. 1997இல் சூடானில் அமெரிக்க வியாபார ஸ்தாபனங்கள் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடாது என்ற தடைச் சட்டத்தை கொண்டு வந்தது சூடான் அரசு. இதனைத் தொடர்ந்து அமெரிக்கா- சூடான் உறவில் பாரிய விரிசல் ஏற்பட்டது.

1998இல் கார்டூமிலுள்ள அல்ஷிபா மருந்து தொழிற்சாலையை அமெரிக்கா வான்வழித் தாக்குதல் மூலம் நிர்மூலமாக்கியது. அல்ஷிபா தொழிற்சாலையில் இரசாயன ஆயுதங்கள் உற்பத்தி செய்யப்படுவதாகவும் அதற்கும் அல்காயிதா அமைப்புக்கும் தொடர்பிருப்பதாகவும் கூறியே அமெரிக்க இராணுவம் இத்தாக்குதலை மேற்கொண்டது.

எனினும், சூடான் அல்ஷிபா மருந்து தொழிற்சாலை தொடர்பாக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டு எவ்வித ஆதாரமுமற்றது என்று அமெரிக்க ஆய்வாளர்களாலே நிரூபிக்கப்பட்டது.

வட சூடான்-தென் சூடான் பிரதேசவாசிகளுக்கிடையில் 19 ஆண்டுகளாக நடைபெற்று வந்த உள்நாட்டுப் போரை உமர் அல்பஷீர் 2003இல் முடிவுக்குக் கொண்டு வந்தார். அவ்வளவு காலமும் சூடானின் உள்நாட்டுப் பிரச்சினைகளுக்கு எண்ணெய் வார்த்து தமது வயிற்றை நிரப்பிக் கொண்டிருந்த மேற்கத்தேய சக்திகள் சூடானின் தார்பூர் பிரச்சினைக்கு வித்தூன்றின. மட்டுமின்றி அப்பிரச்சினையை ஊதிப் பெருப்பித்து பல்லாயிரக் கணக்கான உயிர்களைப் பலி கொள்ளவும் காரணமாயின.

**தார்பூர் பிரச்சினை**

பல குழுக்கள் தார்பூலிலுள்ள அருமையான வளங்களை உரிமை பாராட்ட முன்வந்ததன் விளைவே தார்பூர் பிரச்சினைக்கான மூலகாரணம். நடோடிகள்-விவசாயிகள்-பழங்குடிகள் முதலான கோத்திரங்களுக்கிடையில் வளங்களைப் பகிர்ந்து கொள்வதில் அடிக்கடி மோதல்கள் ஏற்பட்டு வந்தன.

சூடானின் பெற்றோலிய வளத்தைச் சுரண்ட இதனை ஒரு சந்தர்ப்பமாகப் பயன்படுத்திய சர்வதேச சக்திகள், சூடான் அரசுக்கெதிராக கிளர்ச்சியாளர்களைத் தூண்டிவிட்டு உள்நாட்டுப் போரை உருவாக்கின. மட்டுமின்றி தார்பூர்வாசிகளுக்கு ஆயுதங்களை வழங்கி பிரச்சினைகளை தீவிரப்படுத்தியதும் அச்சக்திகள்தான்.

உமர் அல்பஷீர் தலைமையிலான அரசாங்கம் தார்பூர் வாசிகள் மத்தியில் வேறுபாடு காட்டுகிறது; தார்பூர்வாசிகளின் உரிமைகளை மீறுகிறது போன்ற போலிக் குற்றச்சாட்டுகளை முன்வைத்து 2003 ஆம் ஆண்டு தார்பூரிலுள்ள சில ஆயுதக் குழுக்கள் சூடான் அரசுக்கெதிராக ஆயுதம் தாங்கின. இதற்கு முழுமையான அனுசரணையை வழங்கியது அமெரிக்காவும் அதன் நேசநாடுகளுமே.

இப் பின்னணியில் ஆறு வருடங்களைத் தாண்டியும் தலைவிரித்தாடும் தார்பூர் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வர உமர் அல்பஷீர் தலைமையிலான அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு தடையாக அமெரிக்க ஏகாதிபத்தியம் இருந்து வருகிறது.

இதன்போது தார்பூரில் நிகழ்ந்த மோசமான கொலைகளுக்கும் அவலநிலைக்கும் பின்னணியில் நின்ற அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும் தார்பூர் மனிதப் பேரவலத்துக்கு முழுமுதற் காரணமாக உமர் அல்பஷீரே இருந்தார் என்றும் அவரது ஆட்சிக் காலத்தில் நிகழ்ந்த இப்படுகொலை தொடர்பில் அவர் விசாரிக்கப்பட வேண்டும் என்று கூக்குரலிட்டு வருகின்றன. மட்டுமின்றி, சர்வதேச நீதிமன்றத்தில் பஷீருக்கு எதிரான குற்றப் பிரேரணையையும் சமர்ப்பித்து அவரைக் கைது செய்து சூடானில் அமெரிக்க சார்பு ஆட்சியைக் கொண்டு வர துடித்துக் கொண்டிருக்கின்றன.

குழப்பவாதிகளையும் அநியாயக்கார ஏகாதிபத்தியவாதிகளையும் எதிர்க்கத் துணிந்த சூடானிய அதிபர் உமர் அல்பஷீர் சர்வதேச நீதிமன்றத்தின் பிடியாணை, அமுலில் இருக்க சூடானில் ஜாதிபதித் தேர்தலை நடத்தி பெரும்பாலான மக்களின் ஆணையைப் பெற்று மீண்டும் ஏகாதிபத்திய சக்திகளின் வயிற்றில் அமிலத்தைக் கரைத்திருக்கிறார்.

கடந்த வருடம் சூடானிய அதிபர் உமர் அல்பஷீர் மக்கள் மத்தியில் உரையாற்றுகையில் கூறிய வார்த்தைகள் அவரின் துணிவைப் படம்பிடித்துக் காட்டுகின்றன. "சூடானிய மக்களே! மேற்குலகு என்னை நேசித்தால் என்னைப் புறக்கணிப்பது உங்களது பொறுப்பாகும். மேற்குலகும் அதன் அடிவருடிகளும் என்னை நேசிப்பது என்பதன் அர்த்தம் நான் சரியான பாதையில் இல்லை என்பதே!"

# உலமாக்கள், தாஇகள் மீது தாக்குதல்: நுவரெலியாவில் நடந்தது என்ன?

**எம்.எச். அப்துர் ரஷீத், தேசிய அமைப்பாளர், இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி**
*Email- rasheedrila@gmail.com*

**நாம்** நுவரெலிய பிரதேசத்தில் மேற்கொண்டு வரும் பணிகள் சம்பந்தமாக விமர்சித்து தமக்கு சிலர் புகார் செய்துள்ளதாகவும்; அதன் உண்மை நிலையை விபரித்து ஒரு சுமுகமான நிலைக்கு சமூகத்தை வழி நடத்த ஒரு திறந்த கலந்துரையாடலை தாம் நடத்த உத்தேசித்துள்ளதாகவும்; 2010 மார்ச் மாதம் 15ம் திகதி முற்பகல் 10 மணிக்கு நுவரெலிய பெரிய பள்ளிவாசலில் நடைபெறவுள்ள விஷேட கலந்துரையாடலுக்கு வருமாறும் அங்கு சிறப்பு உரை நிகழ்த்துமாறும் 11.03.2010 திகதி இடப்பட்ட கடிதம் மூலம் 'நுவரெலிய அனைத்துப் பள்ளிவாசல்களின் சம்மேளனம்' எம்மை வேண்டியிருந்தது.

இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி கடந்த சில வருடங்களாக நுவரெலிய பிரதேசத்தில் மேற்கொண்டு வந்த தஃவா பணிகளையும் அதனால் சமூகத்தில் ஏற்பட்டு வந்த நல்ல மாற்றங்களையும் விரும்பாத சிலர், ஜமாஅத்துக்கு எதிராக அவதூறுகளை பரப்புவதையும்; அப்பகுதி ஜமாஅத் ஊழியர்களை அச்சுறுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டு வந்ததையும் நாம் அறிந்தே இருந்தோம்.

பள்ளிவாசல்களின் சம்மேளனம் அழைத்திருப்பதை மதித்து நாம் அங்கு செல்லத் தீர்மானித்தோம். இது பற்றி 13.03.2010 திகதியிடப்பட்ட எமது கடிதம் மூலம் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவுக்கும் அறிவித்து இப்பேச்சுவார்த்தைக்கு அவர்களது பிரதிநிதிகளையும் அனுப்பி வைக்குமாறு கேட்டிருந்தோம். ஆனால், கால அவகாசம் போதாமையால் ஜம்இய்யதுல் உலமாவுக்கு அது சாத்தியமாகவில்லை போலும்.

பேச்சுவார்த்தைக்குச் சென்ற ஆறு பேர்களில் மூவர் ஜமாஅத்தின் மத்திய மஜ்லிஸுஷ் ஷூரா அங்கத்தவர்கள். மூவர் ஆலிம்கள்.

பேச்சுவார்த்தைக்குச் செல்லும் முன்னரே நாம் பள்ளிவாசல் சம்மேளனத் தலைவருடன் தொடர்பு கொண்டு இந்நிகழ்ச்சிக்கு ஜமாஅத்தைச் சேர்ந்த மூத்த சகோதரர்கள், ஆலிம்கள் வர இருக்கிறார்கள். எனவே, பேச்சுவார்த்தை கண்ணியமான முறையில் நடைபெற அனைத்து ஏற்பாடுகளைச் செய்வதும் வருவோருக்கு பாதுகாப்பு வழங்குவதும் தங்களது கடமையாகும் என்றும் கூறினோம். "எதனைப் பற்றியும் அஞ்ச வேண்டாம்" என அவர் எம்மிடம் உறுதியளித்தார்.

பேச்சுவார்த்தை பிரதான பள்ளிவாசலுக்குள் ஏற்பாடு செய்யப்படாமல் கட்டப்பட்டுக் கொண்டிருக்கும் பள்ளிவாசலில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததை அவதானித்ததும் எமக்கு இந்த ஏற்பாட்டின் உள்நோக்கம் குறித்து சந்தேகம் ஏற்பட்டது. அதுபற்றி நாம் கேள்வியும் எழுப்பினோம். எவ்வாறோ கூட்டம் ஆரம்பித்து கிராஅத் ஓதப்பட்டுக் கொண்டிருக்கும்போதே ஒரு பெரும் கூட்டம் உள்ளே நுழைந்து எம்மையும் நுவரெலிய பிரதேசத்திலிருந்து வந்திருந்த ஜமாஅத் ஊழியர்களையும் தாறுமாறாக தாக்கத் தொடங்கியது. நாம் மூர்க்கத்தனமாக தாக்கப்பட்டோம். வீதிகளில் வைத்து கும்பல்களாக நின்றும் எம்மீது தாக்குதல் நடத்தினர். பள்ளிவாசல் சம்மேளனப் பொறுப்பாளர்கள் யாரும் இதனைத் தடுக்க முயற்சித்ததை எம்மால் அவதானிக்க முடியவில்லை.

பின்னர் பொலிஸார் வந்து எம்மை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர். அங்கு பள்ளிவாசல் சம்மேளனத் தலைவர்கள் எமக்கெதிராக பொலிஸாரிடம் கூறிய பொய்க் குற்றச்சாட்டுக்கள், இவர்கள் எம்மை பேச்சுவார்த்தைக்கு அழைக்கவில்லை; வஞ்சித்து தாக்குவதற்கே அழைத்தார்கள் என்பதை நிரூபிப்பதாக அமைந்திருந்தன.

இத்தாக்குதல் தப்லீக் இயக்கத்தின் தீர்மானத்தின்படி நடைபெற்றதாக நாம் கருதவில்லை. ஆனால் இத்தாக்குதலில் முன்னணியில் நின்றவர்கள், அதனை வழிநடத்தியவர்கள் தப்லீக் ஜமாஅத்தின் பிரமுகர்களும் ஊழியர்களும் என்பது மறுக்க முடியாத உண்மையாகும். அவர்களில் பலரை நாம் பெயர் குறித்து குறிப்பிடவும் முடியும்.

பொலிஸ் நிலையத்தில், "இது எமக்கிடையிலான மார்க்க ரீதியான பிரச்சினை. நாம் அதனை ஜம்இய்யதுல் உலமாவின் மத்தியஸ்தத்தில் தீர்த்துக் கொள்வோம்" என நாம் வாக்குமூலம் அளித்தோம். பின்னர் பொலிஸாருடனான சந்திப்பில் இது சட்டம், ஒழுங்கு சம்பந்தப்பட்ட பிரச்சினையாகவுமிருந்ததால் ஜம்இய்யதுல் உலமாவின் தலைமையிலான அத்தகைய மத்தியஸ்த முயற்சியை தாமே முன்னின்று ஏற்பாடு செய்யவும் பொலிஸார் முன்வந்தனர்.

இந்த நிகழ்வுகள் குறித்து தப்லீக் இயக்கத்தின் ஒரு முன்னணி ஆலிம் மூலம் மர்கஸின் கவனத்துக்கு கொண்டு வந்தோம். மர்கஸ் மஷுறாவில் இவ்விடயம் கருத்தில் கொள்ளப்பட்டதாக அவர் பின்னர் எமக்குத் தெரிவித்தார்.

ஜம்இய்யதுல் உலமாவின் தலைவர் ரிஸ்வி முப்தி அவர்களுக்கு இவ்விடயம் குறித்து விரிவாக விளக்கி கடிதம் எழுதினோம். கடந்த 21.04.2010ல் ஜம்இய்யாவின் தலைமையகத்தில் ரிஸ்வி முப்தி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலைத் தொடர்ந்து ஜம்இய்யதுல் உலமா இவ்விடயத்தை பேச்சுவார்த்தை மூலம் தீர்க்க ஏற்பாடு செய்வதாகவும் அதற்கான ஒரு குழு நியமிக்கப்படும் எனவும் எமக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளனர்.

இம்முயற்சி வெற்றி பெற வேண்டும் என பிரார்த்திக்கின்றோம்.

எம்மைத் தாக்கியவர்கள் தமது ஈனச் செயலை நியாயப்படுத்த எம்மைப் பற்றி பல இட்டுக்கட்டப்பட்ட பொய்களைப் பரப்பியுள்ளனர். அத்தகைய ஏதாவது பொய்க் குற்றச்சாட்டுக்கள் பற்றி விளக்கம் பெற விரும்புபவர்கள் எம்முடன் நேரடியாக தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகிறோம். தீர விசாரிக்காமல் அவதூறுகளைப் பரப்பும் விடயத்தில் அல்லாஹ்வை அஞ்சி நடந்து கொள்ளுமாறு நாம் அனைவரையும் வேண்டுகிறோம்.

"விசுவாசிகளே! தீயவன் உங்களிடம் ஏதேனும் செய்தியைக் கொண்டு வந்தால் (அதனை உடனே அங்கீகரித்து) அறியாமையால் குற்றமற்ற ஒரு சமூகத்தாருக்கு நீங்கள் தீங்கிழைத்துவிடாமலிருப்பதற்காக (தீர்க்கமாக விசாரித்து) தெளிவுபடுத்திக் கொள்ளுங்கள். (அவ்வாறு நீங்கள் செய்யவில்லையாயின்) பின்னர் நீங்கள் செய்யாதவை பற்றி நீங்களே கைசேதப்படக் கூடியவர்களாக ஆகிவிடுவீர்கள்." (அல்ஹுஜுராத்:06)

இவ்விடயத்தை தேசியமயப்படுத்தாமல் நுவரெலிய பிரதேசத்துடன் மட்டுப்பட்ட பிரச்சினையாக வைத்துக் கொள்ள வேண்டுமென்றே நாம் விரும்பினோம். இருந்தாலும் இந்தத் தகவல் யுகத்தில் செய்திகள் பரவுவது தவிர்க்க முடியாததாகும். நடந்த விடயம் பற்றி பல பிழையான தகவல்கள் பரவுவதை தடுக்கவே அல்ஹஸனாத்திற்கு இவ்விளக்கத்தை எழுத நாம் தீர்மானித்தோம்.

அல்லாஹுத் தஆலா எமது செயல்களை அங்கீகரிப்பானாக!

# ஜமாஅத்தின் இஜ்திமா தொடர் ஆரம்பம்

ஜமாஅத்தினால் வருடந்தோறும் நடத்தப்பட்டு வரும் பொது மக்களுக்கான இஜ்திமாக்களின் தொடர் கடந்த மாதம் 28ஆம் திகதி நிகவெரட்டிய அபுக்காகமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

'வணக்கத்துக்குரிய நாயனை வணங்குவது எப்படி?' என்ற கருப்பொருளிலான இவ்வருட இஜ்திமா தொடரில் பிராந்திய, உப பிராந்திய ரீதியில் 34 இஜ்திமாக்கள் நடைபெற திட்டமிடப்பட்டுள்ளதாகவும் இவற்றில் ஆண்களும் பெண்களுமாக சுமார் 50 ஆயிரம் பேர் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்ப்பதாகவும் ஜமாஅத்தின் தேசிய ஒருங்கிணைப்புப் பகுதி தெரிவிக்கிறது. நடைபெறவுள்ள இஜ்திமா தொடரில் 13 இஜ்திமாக்கள் பெண்களுக்கானவை; 5 இஜ்திமாக்கள் ஆண்களையும் பெண்களையும் இணைத்ததாக நடைபெற உள்ளன; ஏனையவை ஆண்களுக்கானவை என தேசிய ஒருங்கிணைப்புப் பகுதி மேலும் தெரிவிக்கிறது.



கடந்த 28.04.2010 புதன்கிழமை அபுக்காகமை ஜுமுஆ மஸ்ஜிதில் நடைபெற்ற இஜ்திமாவில், மௌலவி அப்துல் அஸீஸ் (அமீனி) தலைமை உரை நிகழ்த்துவதையும் ஜமாஅத்தின் அமீர் உஸ்தாத் ரஷீத் ஹஜ்ஜுல் அக்பர், உஸ்தாத் எம்.யூ.எம். ரம்ஸி, அஷ்ஷெய்க் எச்.எம். மின்ஹாஜ் (இஸ்லாஹி) ஆகியோர் பிரதான உரைகளை நிகழ்த்துவதையும் படங்களில் காணலாம்.





இஜ்திமாவில் ஜமாஅத்தின் அமீர் மற்றும் அஷ்ஷெய்க் மின்ஹாஜ் (இஸ்லாஹி) ஆகியோர் உரை நிகழ்த்துவதையும் கலந்து கொண்ட ஊழியர்களில் ஒரு பகுதியினரையும் படத்தில் காணலாம்.

அஷ்ஷெய்க் பஸ்லுல் பாரிஸ் (நளீமி)

# அல்லாஹ்வை நோக்கிய பயணத்தில்...

## ஜமாஅத்தின் தேசிய ஊழியர் இஜ்திமா (ஏப்ரல் 17, 18)

**“இஸ்லாம் அந்நியமாகவே ஆரம்பித்தது. அது மீண்டும் அந்நிய நிலைக்கு மீண்டு செல்லும்.”**

இஸ்லாம் புரிந்து கொள்ளப்படாத மார்க்கமாக இன்று மாறியுள்ளது. மார்க்கத்தின் உத்தமமான அம்சங்கள் அருகிப்போய் சம்பிரதாயங்களாக சில அம்சங்கள் எஞ்சியிருக்கின்ற சோகத்தை நடைமுறையில் கண்டு வருகிறோம்.

இது ‘இரண்டாவது அந்நிய நிலை’ என இஸ்லாமிய அறிஞர்களால் வர்ணிக்கப்படுகிறது. “அந்நிய நிலையில் வாழும் அழைப்பாளர்களுக்கு சுபசோபனம் உண்டாகட்டும்” என்ற நபியவர்களின் பொன்மொழியை தம் வாழ்க்கையாக வரித்துக் கொண்ட ஒரு குழுவின் சங்கமமே ஏப்ரல் 17, 18ஆம் திகதிகளில் புத்தளம் மண்ணில் நடைபெற்ற ஜமாஅத்தின் ஊழியர் இஜ்திமா ஆகும்.

ஆம், இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி அரை நூற்றாண்டுக்கு மேற்பட்ட தனது இலட்சியப் பயணத்தில் தடம்புரளாது, சிந்தனைத் தெளிவோடு தன் ஊழியர்களை அழைத்து வந்திருக்கிறது. பயணத்தின் சுமைகளை சுகங்களாக மாற்றீடு செய்திருக்கிறது. சோகமல்ல, சுபசோபனங்களே நிறைந்துள்ளன.

“வாருங்கள் அல்லாஹ்வின் தீனை நிலைநாட்டும் பணியில் அணிதிரள்வோம்” என்ற அழைப்பை ஏற்று, இணைந்து பணியாற்ற களத்திற்கு வந்தோரை அரவணைத்து அறிவு, ஆன்மிகப் பயிற்சிகள் வழங்கி, சோர்வில்லா ஊழியர்ப் படையை உருவாக்குவதில் அது முனைப்போடு செயற்பட்டு வருகின்றது.

அப்பணியின் தொடரில் ஏப்ரல் 17,18ஆம் திகதிகளில் ஊழியர் இஜ்திமாவும் அல்ஹஸனாத்தின் 40 ஆண்டு நிறைவு விழாவும் நடைபெறும் செய்தியை தன் ஊழியர்களுக்கு அறிவித்தது. சுட்டெரிக்கும் வெய்யில் காலப்பகுதியில் புத்தளத்தில் ஊழியர் இஜ்திமாவுக்கான ஏற்பாடுகளை நம்பிக்கையோடு ஜமாஅத் மேற்கொண்டது. அல்ஹம்துலில்லாஹ், சுமார் ஆயிரத்து 500 ஊழியர்கள் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் மிக ஆர்வத்தோடு வருகை தந்தனர்.

நிகழ்வுகள் குறித்த நேரத்தின்படி காலை 10 மணிக்கு ஆரம்பமாகின. முதல் அமர்வை எம்.ஜே.எம். மன்சூர் ஆசிரியர் அவர்கள் காஇதாக இருந்து நெறிப்படுத்தினார். அஷ்ஷெய்க் எம்.இஸட்.எம். நௌஸர் (இஸ்லாஹி) அவர்கள் இனிமையான குரலில் ஓதிய ஸூரா ‘அஸ்ஸஃப்’ ஊழியர்களின் உள்ளங்களை ஊடறுத்துச் சென்றது.

கிராஅத்தைத் தொடர்ந்து கடந்த ஐந்து வருட காலத்தில் ஜமாஅத் தனது இலக்கு நோக்கிய பாதையில் எட்டிய அடைவுகளை பொதுச் செயலாளர் டாக்டர் எம்.சீ.எம். மஹீஸ் அவர்கள் ஊழியர்கள் மத்தியில் சமர்ப்பித்தார். அல்ஹம்துலில்லாஹ், இறையருளும் ஊழியர்களின் அயராத உழைப்பும் பங்களிப்பும் ஜமாஅத்தின் வேலைத்திட்டங்களுக்கு பலமாக இருந்து வந்துள்ளது என்பதை பொதுச் செயலாளரின் அறிக்கை எடுத்துக் காட்டியது.

ஹிஜ்ரி 1431இன் ஊழியர் இஜ்திமாவின் கருப்பொருள் உரையை ஜமாஅத்தின் அமீர் உஸ்தாத் ரஷீத் ஹஜ்ஜுல் அக்பர் அவர்கள் நிகழ்த்தினார். ஊழியர்களின் உள்ளத்தில் “அல்லாஹ்வை நோக்கிய பயணம்” என்பதன் ஆழ அகலங்களை அமீர் அவர்கள் அல்குர்ஆன், அஸ்ஸுன்னாவின் வழிகாட்டலுக்கூடாக விளக்கினார்.

ஒரு முஸ்லிம் தீனை நிலைநாட்டும் (இகாமத் செய்யும்) பணியில் ஈடுபடுவதன் அவசியம், அப்பணியில் அவன் இணைந்து கூட்டமைப்பாக பணியாற்ற வேண்டியதன் அவசியம் என்பவை அமீர் அவர்களின் உரையில் வலியுறுத்தப்பட்டன.

ஒரு முஃமின் அமைதியான உள்ளத்தைப் பெறுவதோடு நீதி, நேர்மை, வாய்மை, தூய்மை மிக்க அமைதியான உலகத்தை உருவாக்குவதையே இலக்காகக் கொண்டிருப்பான். இந்த தெளிவான பயணத்தின் மூலமே மன்னிக்கும் இரட்சகனை சந்திக்க முடியும் என்ற சிந்தனையை இலட்சியத் தொனியோடு ஊழியர்கள் உள்ளங்களில் வேரூன்றச் செய்தது அமீர் அவர்களின் உரை. நெடுந்தூரப் பயணத்தின் களைப்பு, வரண்ட காலநிலை என்ற எதுவும் இவ்வுரையிலிருந்து ஊழியர்களின் கவனத்தைத் திருப்பி விட்டிருக்காது.

அமீர் அவர்களின் உரையோடு கொளுத்தும் பகல் பொழுதில் ஊழியர்கள் அனைவரும் அல்லாஹ்வின் முன்நிலையில் தமது பயணத்தின் கனதியுணர்ந்து ழுஹர் தொழுகையில் சங்கமமானார்கள்.

நிகழ்வுகள் மீண்டும் அஸர் தொழுகையோடு ஆரம்பமாகின. இவ்வமர்வை அஷ்ஷெய்க் எம்.எல். அப்துல் வாஜித் (இஸ்லாஹி) காஇதாக பொறுப்பேற்று வழிநடத்தினார். அவ்வமர்வின் ஆரம்ப உரையாக 'மக்களின் தேவையாக இஸ்லாமிய இயக்கம் மாறுதல்' என்ற கருப்பொருளில் வடமேல் பிராந்திய நாஸிம் அஷ்ஷெய்க் எம்.எச்.எம். உஸைர் (இஸ்லாஹி) உரை நிகழ்த்தினார்.

இஸ்லாமிய இயக்கம் என்பது ஒரு சிலரோடு மட்டுப்படுத்தப்பட்ட ஒன்றல்ல. அது மக்கள் இயக்கமாக, மக்கள் சக்தியாக மாற வேண்டும் என்ற கருத்தை இவ்வுரையில் அவர் வலியுறுத்தினார். நபிமார்களின் பணியில் பிரிக்க முடியாத அங்கமாக அநியாயம், மோசடி, ஏமாற்று, அராஜகம் ஆகியவற்றுக்கெதிரான போராட்டம் அமைந்திருந்தது. இயக்கம் மக்கள் மயப்பட்ட இயக்கமாக, பெரும் சக்தியாக மாற வேண்டும் என்ற கருத்தை சான்றுகளோடு அவர் முன்வைத்தார்.

அல்லாஹ்வை நோக்கிய பயணம் சிரமங்கள் பல நிறைந்தது. போராட்டங்களும் தடைகளும் இல்லாத பாதையினால் இறைவனை நோக்கி பயணிக்க முடியாது. மனோஇச்சையும் ஷைத்தானிய கெடுபிடிகளும் இப்பாதையில் அடிக்கடி குறுக்கிடும் தடைகளாகும். அதுபோலவே இப்பாதையில் பல்வேறு இன்னல்களையும் துன்பங்களையும் ஓர் அழைப்பாளன் சந்திக்க வேண்டியுள்ளது. இத்தருணங்களிலெல்லாம் வலிமை மிக்க உள்ளமும் ஆறுதல் பெறும் பக்குவமும் அவனுக்கு தேவைப்படுகிறன்றன. இதனை தெளிவாகவே உணர்ந்து வைத்திருக்கும் ஜமாஅத்தின் ஊழியர்களுக்கு, "அல்லாஹ்வை நோக்கிய பாதையில் ஆறுதலடைந்து கண் குளிர்ச்சி தருவது தொழுகை" என்ற தலைப்பில் சிறப்பானதோர் உளவள வழிகாட்டலை தனக்கேயுரிய தனித்துவமான பாணியில் உஸ்தாத் எம்.யூ.எம். ரம்ஸி அவர்கள் வழங்கினார்கள்.

இஷாத் தொழுகையைத் தொடர்ந்து முதல் நாள் நிகழ்வின் இறுதி நிகழ்ச்சியாக "மனித நலன் பற்றிய ஒரு தாஇயின் உளப்பாங்கு" என்ற தலைப்பில் அஷ்ஷெய்க் எச்.எம். மின்ஹாஜ் (இஸ்லாஹி) அவர்கள் உரை நிகழ்த்தினார்கள். இஸ்லாம் வணக்க வழிபாடுகளுக்கூடாகவும் அது நிலைநாட்ட விரும்புகின்ற ஷரீஅத் நெறிமுறைகளுக்கூடாகவும் மனித நலனையே அடிப்படையாகக் கொண்டிருக்கின்றது. ஷரீஅத்தின் முழு நோக்கமும் "ஒன்றில் மனித நலனைக் கொண்டு வருதல் அல்லது தீங்கை நீக்குதல்" என்ற கருத்தை தெளிவுபடுத்தியதோடு ஓர் இஸ்லாமிய அழைப்பாளன் தனது பணியில் எத்தகைய உளப்பாங்கை கொண்டிருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தினார்கள். மக்கள் நலன் பற்றி சிந்திக்காத, அக்கறை கொள்ளாத ஒருவர் இஸ்லாமிய அழைப்பாளனாக இருக்க முடியாது என்ற கருத்தை ஊழியர்களின் உள்ளங்களில் ஆழமாகப் பதித்தார்.

இப்பணி தொய்வில்லாது தொடர்வதற்கும் சுறுசுறுப்போடும் முனைப்போடும் ஊழியர்கள் பணியாற்றுவதற்கும் ஜமாஅத்தின் இவ்வழிகாட்டல் ஓர் ஊட்டச் சக்தியாக அமைந்தது எனலாம். "அல்லாஹ்வை நோக்கி விரைந்து வாருங்கள்" என்ற அல்லாஹ்வின் அழைப்பு ஊழியர்களைத் தொட்டழைத்தது. ஊழியர்களின் உள்ளங்களோ படைப்பாளனாகிய அல்லாஹ்வின் முன்நிலையில் "யாஅல்லாஹ்! உனது பாதையில் பயணிக்கும் சக்தியின் அளவுக்கு எங்களுக்கு பொறுமையை நல்குவாயாக; இறுதி மூச்சுவரை உன்னை நோக்கிய பயணத்தில் எமது பாதங்களை உறுதிப்படுத்தி வைப்பாயாக!" என்று கண்ணீரோடு கையேந்தி நின்றன.

### இரண்டாம் நாள்

18ஆம் திகதி அதிகாலை ஸுப்ஹ் தொழுகையோடு ஊழியர்கள் தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்ட மூன்று பள்ளிவாசல்களிலும் அஷ்ஷெய்க் அப்துல் முஜீப் (கபூரி), அஷ்ஷெய்க் என்.ஜீ. அப்துல் கமால் (இஸ்லாஹி), மௌலவி எம்.எம். தாஹிர் (ஹாமி) ஆகியோர் அல்குர்ஆன் விளக்க வகுப்புகளை நடத்தினர். அதனைத் தொடர்ந்து காலைக்கடன்களை நிறைவேற்றுவதற்கான ஓய்வு வழங்கப்பட்டது.

நிகழ்வுகளின் இடையிடையே வழங்கப்பட்ட ஓய்வுகளைப் பயன்படுத்தி இஸ்லாஹிய்யா பெண்கள் அரபுக் கல்லூரியில், அல்ஹஸனாத் இதழின் 40 வருட நிறைவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கண்காட்சியை ஊழியர்கள் கண்டு பிரமித்து நின்றனர். ஜமாஅத் அது ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் தெளிந்த சிந்தையோடும் உறுதியோடும் துணிவோடும் தன் கருத்துக்களை எப்போதும் வெளியிட்டு வந்திருக்கின்றது. இஸ்லாமிய சிந்தனையை தூய வடிவில் மக்களுக்கு எத்திவைத்து வந்திருக்கின்றது என்பதை இக்கண்காட்சி எமக்கு உணர்த்தியது.

காலை 9 மணியளவில் அல்ஹஸனாத் 40 ஆண்டு நிறைவு விழா புத்தளம் ஸாஹிரா பாடசாலையின் அஸ்வர் மண்டபத்தில் களைகட்ட ஆரம்பித்தது.

# அல்ஹஸனாத் 40 வருட

# நிறைவு விழா நினைவுகள்...




அபூ ஸய்யாப்

**"ஜமாஅத்தே** இஸ்லாமியின் கடந்த 60 வருட அழைப்புப் பணியில், இந்த நாட்டில் 40 வருடங்களாக அல்ஹஸனாத் செய்தது பணி என்பதைக் கடந்து சாதனை என்று சொல்லலாம். மனித வாழ்வில் நாற்பது வருடங்கள் என்பது ஒரு திருப்புமுனை. அல்ஹஸனாத்தும் இலங்கை வரலாற்றில் இன்னுமொரு புதிய அத்தியாயத்தை புத்தளம் மண்ணிலிருந்து இன்று ஆரம்பிக்கிறது."

ஜமாஅத்தே இஸ்லாமியின் முன்னாள் அமீரும் அல்ஹஸனாத்தின் முன்னாள் பிரதம ஆசிரியருமான மௌலவி ஏ.எல்.எம். இப்ராஹீம் (கபூரி) அவர்கள் பேசிக் கொண்டு போனார்கள்...

"அல்லாஹு அக்பர்..."

தக்பீர் முழக்கத்தினால் புத்தளம் ஸாஹிராக் கல்லூரி அஸ்வர் மண்டபம் ஆடி அடங்குகிறது...

ஆம், கடந்த ஏப்ரல் 18ஆம் திகதி காலை உதித்த சூரியன் புத்தளம் மண்ணில் அல்ஹஸனாத்தின் 40 வருட சாதனைகளை தரிசிப்பதற்கென்றே உதித்தது போலும். அன்றைய தினம் புத்தளம் ஸாஹிரா கல்லூரி மண்டபம் நாடுபூராகவும் இருந்து வந்த ஜமாஅத் ஊழியர்களால் நிரம்பி வழிய, அல்ஹஸனாத்தின் 40 வருட சாதனைத் தடங்கள் வாசிக்கப்பட்டுக் கொண்டிருந்தன.

சொன்னார்கள், சொன்னார்கள்... ஒவ்வொருவரும் சொன்ன அனுபவப் பகிர்வுகளைக் கேட்டு மெய் சிலிர்த்தது.

"ஜெய்லானி ஹஸரத் அவர்கள் ஆரம்பித்து வைத்த 'அருள் ஜோதி' அதைத் தொடர்ந்து 'வழிகாட்டி' 1970 இல் அல்ஹஸனாத் என்று அல்ஹஸனாத்தை சொல்லும் போது எப்படி என்னால் சகோதரர் மர்ஹூம் அபூ உபைதாவை மறக்க முடியும்?" ஆத்ம நண்பரின் ஞாபகம் வரவே மௌலவி இப்ராஹீம் அவர்களின் கண்கள் குளமாகின.

மூஸா நபி அல்லாஹ்வை சந்திக்க 40 இரவுகளை அல்லாஹ் வகுத்திருந்தான்...

பெரும்பாலான நபிமார்களுக்கு 40 இல் அல்லது அதன் பிறகான வயதிலேயே நபிப் பட்டம் வழங்கப் பட்டது...

40 வயதுகள் கடந்தும் ஒருவன் தீமையிலேயே திளைத்திருந்தால் அவன் நரகத்துக்குச் செல்லத் தயாராகட்டும் என ஹதீஸ் சொல்கிறது...

எனவே, 40 இற்கு வரலாற்றிலும் ஹதீஸிலும் இஸ்லாத்திலும் ஓர் அடையாளம் இருக்கிறது. இலங்கை வரலாற்றில் அப்படி ஓர் அடையாளத்தைக் கடந்த இஸ்லாமிய இதழ் அல்ஹஸனாத். எனவேதான் சொல்கிறேன்; இந்த நாட்டில் இன்றிலிருந்து புதிய தோர் அத்தியாயம் புரட்டப்படப் போகிறது...

மௌலவி ஏ.எல்.எம். இப்றாஹீம் அவர்களின் அனுபவப் பகிர்வில் எத்துணை ஆழமான உண்மைகள்?

"ஒன்றை எழுதினால் நிலைத்திருக்கும். மனனமிட்டால் மறந்துவிடும்" என்ற வாசகம் எத்துணை உண்மையானது. ஜமாஅத்தின் 60 வருட அழைப்புப் பணியை ஏற்க மறுப்பவர்கள் அல்ஹஸனாத்தின் எழுத்தாதாரத்தை என்ன சொல்லப் போகிறார்கள்?"

அவர் கேள்வி எழுப்பியபோதுதான் அல்ஹஸனாத்தின் எழுத்துப் பணியின் ஆழத்தை அந்த அரங்கு உணர்ந்து கொண்டது.

"இந்த இலட்சியக் குரல் முளைத்து கிளை பரப்பிய போது அது வேரூன்ற இடமளித்தது மண் இந்தப் புத்தளத்து மண். இந்த மண்ணிலேயே அதனது 40 ஆவது நிறைவு விழாவைக் கொண்டாடுவது உண்மையில் புத்தளத்துக்கு மான பெருமையாக இருக்கிறது" என்றார் புத்தளம் பிரதேச செயலாளர் ஏ.சீ.எம். நபீல்.

'அல்ஹஸனாத் சமூகத்தில் ஏற்படுத்திய தாக்கம்' என்ற தலைப்பில் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்ட 'ப்ரபோதய' சஞ்சிகையின் ஆசிரியர் எம்.எச்.எம். ஹஸன் அவர்கள் அல்ஹஸனாத்தின் வழியே ஒரு காலக் குகையினூடாக குழுமியிருந்தோரை அழைத்துச் சென்றார் என்றே சொல்ல வேண்டும்.

அல்ஹஸனாத் பேசியிருக்கும் பிரதான கருப்பொருள்கள், காலத்தின் தேவையாக அல்ஹஸனாத் ஒலித்த விதம் என்பவற்றை முக்கிய நிகழ்வுகளோடு தொட்டுக்காட்டி அவர் எடுத்துரைத்தபோது, அங்கு குழுமியிருந்த இளைய தலைமுறை அல்ஹஸனாத் வாசகர்கள் நிச்சயம் பிரமிப்படைந்திருப்பர், எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே!

"யாரிடம் கப்பல் இருந்ததோ அவர்கள் 19ஆம் நூற்றாண்டில் உலகத்தை வெற்றி கொண்டார்கள். யாரிடம் விமானம் இருந்ததோ அவர்கள் 20ஆம் நூற்றாண்டை வெற்றி கொண்டார்கள். யாரிடம் ஊடகம் இருக்கிறதோ அவர்கள் 21 ஆம் நூற்றாண்டை வெற்றி கொண்டவர்கள் என்ற டாக்டர் மஹாதீர் முஹம்மத் அவர்களின் கருத்துப்படி நாம் இந்த நூற்றாண்டை வெல்வதற்காக கையிலெடுத்துள்ள ஊடகம் எவ்வளவு பெரிய ஆயுதம் என்று நினைத்துப் பாருங்கள். இதனை வளர்க்க நான் என்ன செய்திருக்கிறேன் ஒவ்வொருவரும் தனிமையில் சிந்தித்துப் பாருங்கள்."

40 ஆவது வருட நிகழ்வின் காஜிதாக இருந்து நிகழ்ச்சிகளை நடத்திய சட்டத்தரணி பாரிஸ் அவர்கள் தூண்டிய சிந்தனையில் அரங்கு ஊசி போட்டால் விழும் சப்தத்தில் கிடந்தது.

மாலைதீவில் இருந்து இந்நிகழ்வின் பிரதம அதிதியாகக் கலந்து கொள்ள வந்திருந்த மாலைதீவு குடியரசின் இஸ்லாமிய விவகாரங்களுக்கான அமைச்சர் டாக்டர் அப்துல் மஜீத் அப்துல் பாரி அவர்களது விஷேட உரையில் சொன்ன ஒரு விடயமும் மஹாதீர் முஹம்மத் அவர்களின் கருத்துடன் ஒத்துப் போனதைக் காண முடிந்தது.

"ஜாஹிலிய்யக் காலத்தில் எதிரியை வெற்றி கொள்ளும் மிகப் பெரும் ஆயுதம் கவிதை. அங்கு கவிதைப் போரே நடந்தது. ஒரு குடும்பத்தில் ஒரு கவிஞன் பிறந்தால் விழா எடுத்துக் கொண்டாடினர். இன்றைய நவீன உலகின் ஆயுதம் மீடியா. இஸ்லாத்துக்கு எதிரான கருத்துக்களை முறியடிக்க ஊடகம்தான் ஆயுதம். ஊடகம் இன்றி இந்த நூற்றாண்டை நாம் வெற்றி கொள்ள முடியாது. இலங்கையில் அல்ஹஸனாத் செய்து வரும்





இந்த ஊடகப் பணியை என்னால் பாராட்டாமல் இருக்க முடியாது. இத்துடன் நின்று கொள்ளாமல் இலத்திரனியல் ஊடகத்திலும் நீங்கள் கால் பதிக்க வேண்டும்."

அவர் சொன்ன ஆலோசனை அல்ஹஸனாத்தின் செவிகளில் ஏற்கனவே விழுந்து விட்டது போலும்.

அன்றைய தினமே அல்ஹஸனாத் இணையத் தொலைக்காட்சி தனது இலத்திரனியல் ஊடகப் பயணத்தை புத்தள மண்ணில் அங்குரார்ப்பணம் செய்து வைத்தது.

அன்றைய தினம் எமது எதிர்காலத் திட்டங்கள் என்று அல்ஹஸனாத் பிரகடனப்படுத்திய, ஓர் இலத்திரனியல் ஊடகம், தமிழில் வாராந்தப் பத்திரிகை, ஆங்கிலத்தில் ஒரு பத்திரிகை, பெண்களுக்கான தனி இதழ்... என சொன்ன விடயங்கள் இன்ஷா அல்லாஹ் இதே தசாப்தத்தில் சாத்தியமாகும் என சாஹிராக் கல்லூரி மண்டபத்தில் ஓங்கி ஒலித்த 'அல்லாஹு அக்பர்' தக்பீர் ஓசை சொன்னது.

"1990 காத்தான்குடி மஸ்ஜிதில்/ தம்பியை அல்ல என்னை அறுத்துப் போட்ட/ உணர்வு தந்தது அல்ஹஸனாத்" நிகழ்வில் பஷீர் அலியால் வாசிக்கப்பட்ட கவிதை வரி சொல்வதுபோல் அல்ஹஸனாத்தின் எழுத்துப் பணி எவ்வளவு உணர்பூர்வமானது!

"அல்ஹஸனாத் எனக்கு சொல்லித் தந்தது வரலாறுகள் அல்ல; வாய்ப்பாடம்" அதே கவிதையில் வந்த வரிகள் எத்துணை உண்மையானவை என்பதை அந்த நிகழ்வில் கலந்து தமது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்ட சகோதரர்களின் கருத்துக்களில் இழையோடி இருந்ததைக் காணக் கிடைத்தது.

ஒரு விருட்சம் கிளை பரப்பும்போது, ஆழத்தில் பதியும் ஆணிவேரின் பங்களிப்பு காத்திரமானது. அல்ஹஸனாத் இன்று இப்படி கிளை பரப்பி நிழல்தர எத்தனையோ ஆணிவேர்கள் நிலத்தில் புதைந்திருக்கின்றன. அந்த ஆணிவேர்களை அல்ஹஸனாத் மறந்து விடுமா என்ன?

அன்றைய நிகழ்வில் கடந்த 40 வருடங்களாக அல்ஹஸனாத்தின் வளர்ச்சியில் தோள் கொடுத்து நிற்கும் அந்த அத்திபாரக் கற்களுக்கு நினைவுச் சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டமை முக்கிய அம்சமாகும்.

அதேபோன்று 40 வருட நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் வெற்றியீட்டிய போட்டியாளர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டமையும் 40 வருட சாதனைத் தடம் பற்றிய ஆவணப்படம் வெளியிட்டு வைக்கப்பட்டு திரையிடப்பட்டதும் முக்கிய நிகழ்வுகளாகும்.

"என்னதான் எழுதிவிட்டீர்கள்?" என்று வினாத் தொடுப்போருக்கு பதில் சொன்னது அன்றைய தினம் புத்தளம் இஸ்லாஹிய்யா பெண்கள் அரபுக் கல்லூரியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அல்ஹஸனாத்தின் கண்காட்சிக் கூடம்.

அருள் ஜோதியின் முதலாவது இதழ் தொட்டு அல்ஹஸனாத்தின் 40 ஆவது வருட இறுதியாக வெளியான அல்ஹஸனாத் வரை அத்தனை இதழ்களும் அல்ஹஸனாத்தின் சகோதர வெளியீடுகளான எங்கள் தேசம், ப்ரபோதய, அகரம், சிட்டு மற்றும் நூல்களும் அங்கு காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

"அல்ஹஸனாத்தைச் சுமந்து கொண்டு செல்கின்றீர்கள் என்றால் நீங்கள் வெறுமனே ஒரு சஞ்சிகையை தூக்கிக் கொண்டு செல்லவில்லை. நாட்டிலுள்ள பல அறிஞர்கள், எழுத்தாளர்களைச் சுமந்து கொண்டு வீடு வீடாகச் செல்கிறீர்கள் என்பதுதான் அதன் பொருள். எனவே நீங்கள் எவ்வளவு பெரிய பணி செய்கிறீர்கள்...?

ஒவ்வொருவரும் அல்ஹஸனாத்தைச் சுமந்து அதன் வளர்ச்சிக்கு உதவுவதை உங்கள் பணியாகக் கருதுங்கள்..."


ஜமாஅத்தின் அமீர் உஸ்தாத் ரஷீத் ஹஜ்ஜுல் அக்பர் அவர்கள் சொன்னபோது மண்டபம் உதிர்த்த தக்பீர் ஜமாஅத் ஊழியர்களின் பூரண அங்கீகாரத்தை வழங்கியது.

அல்லாஹு அக்பர்!

ஆளுமை

# மறுமைப் பயணத்தில்

# டாக்டர் இஸ்ரார் அஹ்மத்



மௌலவி எம்.எச்.எச்.எம். முனீர்

**14.04.2010ம்** திகதி அன்று பஜ்ர் தொழுகைக்குப் பின்னால் எனது கையடக்கத் தொலைபேசி மெல்ல அதிர்ந்தது. "இன்று அதிகாலை 3 மணிக்கு டாக்டர் இஸ்ரார் அஹ்மத் அவர்கள் இறையடி எய்திவிட்டார்கள், அன்னாரின் ஜனாஸா இன்று அஸர் தொழுகைக்குப் பின்னர் லாகூரில் அடக்கம் செய்யப்படும்" என்ற செய்தி கிடைத்ததும் மனம் பாரமாகியது. எனது உள்ளத்தில் அல்குர்ஆன் மீது ஆழ்ந்த பற்றையும் புதிய புரிதல்களையும் ஏற்படுத்திய ஓர் ஆளுமையின் இழப்பை தாங்கிக் கொள்வது கஷ்டமாகவே தோன்றியது. இருப்பினும், அடுத்த கணங்களிலேயே யதார்த்தத்தின்பால் மீண்டு அன்னாருக்காகப் பிரார்த்தித்துக் கொண்டேன்.

டாக்டர் இஸ்ரார் அஹ்மத் நவீன இஸ்லாமிய இயக்கம் தோற்றுவித்த பிரதான ஆளுமைகளுள் ஒருவராவார். 1932ம் ஆண்டு வட இந்தியாவில் பிறந்த அவர், தனது ஆரம்பக் கல்வியை அரச பாடசாலைகளில் பெற்றார். குடும்ப சூழலில் இஸ்லாமிய தர்பிய்யா பெற்றார். இந்தியா-பாகிஸ்தான் பிரிவினைக்குப் பின்னர் பாகிஸ்தானில் தனது உயர்கல்வியைத் தொடர்ந்தார். 1954ஆம் வருடம் 'கிங் எட்வெர்ட் மருத்துவக் கல்லூரியில்' எம்.பி.பி.எஸ் பட்டம் பெற்றார். 1965ஆம் வருடம் கராச்சி பல்கலைக்கழகத்தில் இஸ்லாமியத் துறையில் முதுமானிப் பட்டத்தில் முதல் வகுப்பில் தேறி தங்கப் பதக்கம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

தனது மாணவப் பருவத்திலே மௌலானா செய்யித் அபுல் அஃலா மௌதூதியின் நூல்களோடு நெருக்கமான உறவை ஏற்படுத்தியிருந்தார். மருத்துவத் துறை மாணவனாக இருந்தபோதே பாகிஸ்தான் ஜமாஅத்தே இஸ்லாமியின் மாணவர் இயக்கமான 'இஸ்லாமி ஜம்இய்யதுத் தலபா'வின் உறவைப் பெற்றார். மாணவ இயக்கத்தில் மிகத் துடிப்புடன் செயற்பட்ட இவர், சமகாலத்தில் லாகூர் ஜம்இய்யத்தினதும் பஞ்சாப் மாநில ஜம்இய்யதினதும் நாஸிமாக செயற்பட்டார். பஞ்சாப் மாநில பாடசாலைகளிலும் பல்கலைக்கழகங்களிலும் மாணவர் இயக்கம் பலமும் விரிவாக்கமும் பெற்ற காலமென இக்காலப் பகுதி வர்ணிக்கப்படுகின்றது. பின்னர் பாகிஸ்தான் இஸ்லாமி ஜம்இய்யத்துத் தலபாவின் நாஸிமே அஃலாவாக (தேசிய நாஸிம்) தெரிவு செய்யப்பட்டார். உஸ்தாத் குர்ரம் முராத் அவர்களுக்குப் பின்னர், ஜம்இய்யத்தின் நான்காவது தலைவராக தெரிவு செய்யப்பட்டார்.

இமாம் மௌதூதி காதியானிகளுக்கெதிராக 'காதமுன் நுபுவ்வத்' போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றபோது ஜம்இய்யத்தின் பங்களிப்பு மிகக் காத்திரமானதாக இருந்தது. மௌதூதியின் 'காதமுன் நுபுவ்வத்' இயக்கத்தை பாகிஸ்தானில் மூலை முடுக்கெல்லாம் எடுத்துச் செல்லும் அமைப்பாக ஜம்இய்யத் காணப்பட்டது.

"பாகிஸ்தான் இரணுவ நீதிமன்றம் இமாம் மௌதூதிக்கு மரண தண்டனை விதித்தபோது ஜம்இய்யத்தின் நாஸிமே அஃலாவாக இருந்த உங்களது நிலை எப்படி இருந்தது" என ஒரு தடவை வினவப்பட்டபோது, "அந்த நாட்களின் உணர்வுகளையும் உணர்ச்சித் துடிப்புக்களையும் போராட்ட வேட்கையையும் கூறுவதற்கு வார்த்தைகளே இல்லை. இமாம் சிறையிலிருந்து எம்மை வழிநடாத்திக் கொண்டிருந்தார்கள் என அவர் பதிலளித்தார்.

மாணவப் பருவத்திற்குப் பின்னர் பாக். ஜமாஅத் அங்கத்தவராக இருந்து சில காலம் செயற்பட்ட போதும் பின்னர் ஜமாஅத்திலிருந்து விலகிக் கொண்டார். ஜமாஅத்தின் ஜனநாயக வழி தேர்தல் அரசியல் முறையை அவர் சரி காணவில்லை.

டாக்டர் இஸ்ரார் அஹ்மத் அவர்கள் ஜமாஅத்திலிருந்து விலகி நின்றாலும் நவீன இஸ்லாமிய இயக்கவியல் சிந்தனையிலும் செயற்பாட்டிலும் மிக ஆழ்ந்த ஈடுபாட்டைக் கொண்டிருந்தார். இமாம் செய்யித் மௌதூதியின் இலட்சியவாத இஸ்லாமிய அரசு பற்றிய எண்ணக்கருவுக்கான செல்நெறிகளை சீராவின் ஒளியில் உருவாக்கினார். அவரது ஆழ்ந்த வாசிப்புக்கும் தணியாத உணர்வுகளுக்கும் இறுதி நேரம் வரை ஓயாத தொடர்ந்தேர்ச்சையான செயற்பாட்டிற்கும் பல சாட்சிகள் நிறைந்து கிடக்கின்றன.

60 உருது நூற்களையும் 9 ஆங்கில நூற்களையும்

பொதுவாக முஸ்லிம் உம்மாவிற்கும் குறிப்பாக, இஸ்லாமிய இயக்கவாதிகளுக்கும் அவர் தந்துள்ளார். இவை அனைத்திலும் இஸ்லாமி அரசு, அல்குர்ஆனின் அடிப்படைத் தூது, இறைத்தூதரின் உருவாக்கப் பணியும் இலட்சியவாத அரசும், நவீன இஸ்லாமிய இயக்கம் என்பவையே இழையோடிக் கொண்டிருக்கும்.

'நஷ்அதுஷ் ஸானியா' (இரண்டாவது தோற்றப்பாடு) என்ற பிரயோகத்தை அறிமுகப்படுத்தியதோடு அதுசார் கருத்தியலையும் அவர் விரிவாகப் பேசினார். அதற்கான செயல்வடிவத் திட்டங்களையும் உருவாக்கி அமுல்படுத்தினார். 'அன்ஜுமன் குத்தாமுல் குர்ஆன்' என்ற நிறுவனத்தையும் 'தன்ழீமே இஸ்லாமி' என்ற அமைப்பையும் உருவாக்கி ஆயிரக்கணக்கான இளைஞர்களை இஸ்லாத்தின்பால் வழி நடத்தினார். 'மீஸாக்' 'ஹிக்மத்தே குர்ஆன்' ஆகிய இரு சஞ்சிகைகளை அரம்பித்து, புத்திஜீவிகளை மையப்படுத்தி கனதியான கருத்தாடல்களை செய்து வந்தார். பாரம்பரிய இஸ்லாமிய கலைச் சொற்களுக்கும் நவீன இஸ்லாமிய இயக்கக் கலைச் சொற்களுக்கும் இடையே பொருத்தப்பாடுகளை உருவாக்குவதில் வெற்றி கண்டார்.

70 வயதுக்குப் பின்னரும் ஓர் இளைஞரைப்போல் உணர்வுபூர்வமாகவும் கருத்தாழத்தோடும் பேசக்கூடியவராக திகழ்ந்தார். உருது மொழியில் மாத்திரமின்றி, ஆங்கிலத்திலும் அவ்வாறே உரைநிகழ்த்துவார். இவரின் உரையை ஒருமுறை செயவிமடுத்த 'தக்பீர்' வாராந்த சஞ்சிகையின் ஆசிரியர் "நான் டாக்டர் அவர்களின் உரையை செவிடுமத்தபோது முற்றுமுழுதாக செய்யித் மௌதூதியின் உரையொன்றை செவிமடுத்த உணர்வையும் மகிழ்ச்சியையும் அடைந்தேன்" என சிலாகித்தார்.

அவரது அல்குர்ஆன் விளக்கவுரைகளையும் வெள்ளிக்கிழமை குத்பா பிரசங்கங்களையும் கேட்பதற்கு ஆயிரக்கணக்கான மக்கள் ஒன்று கூடுவர். மரணிப்பதற்கு முந்திய குத்பா பிரசங்கத்தில் ஸூரா ஃபாத்திஹாவின் முதலாம் வசனத்திற்கு சுமார் 45 நிமிடங்கள் விளக்கவுரை செய்யும் பாக்கியத்தையும் பெற்றார். நீண்டகாலமாக Peace TV, Quran TV மற்றும் சர்வதேச இஸ்லாமிய வானொலி நிகழ்ச்சிகளிலும் நாளாந்த, வாராந்த நிகழ்ச்சிகளை இறுதிவரை செய்து வந்தார்.

தான் 1994ஆம் ஆண்டு கனடா மெக்கிள் பல்கலைக் கழகத்தில் ஷகுபத் அஹமட் என்பவர் இஸ்ரார் அஹ்மதின் நோக்கில் இஸ்லாமிய அரசியல் சிந்தனை, என்ற தலைப்பில் முதுமாணிப் பட்டத்துக்கான ஆய்வையும் 2009ம் ஆண்டு புவாத் அலி என்பார் பெஷாவார் பல்கலைக்கழகத்தில் 'இஸ்ரார் அஹ்மத்தின் 'இஸ்லாமிய புரட்சி ஒரு பகுப்பாய்வு' என்ற தலைப்பில் முதுமாணிப் பட்டத்துக்கான ஆய்வையும் சமர்ப்பித்தமை அவரது அறிவு, ஆளுமையை கணிப்பிடும் இன்னோர் அம்சம்.

நவீனஇஸ்லாமிய இயக்கத்திற்கும் நவீன இஸ்லாமிய சிந்தனைக்கும் பெரும் பங்காற்றிய டாக்டர் இஸ்ரார் அஹ்மத் அவர்களின் மறைவை இஸ்லாமிய அறிஞர்களும் அமைப்புகளும் கல்வி நிறுவனங்களும் பெரும் இழப்பாகவே கருகின்றன. போராசியரியர் குர்ஷித் அஹ்மத் அவர்கள் தனது அனுதாபச் செய்தியில், "அன்னாரது இழப்பு பாகிஸ்தானுக்கு மாத்திரமன்றி முழு முஸ்லிம் உம்மத்தினது இழப்பாக இருக்கிறது" என்றும் "அவர் இஸ்லாத்துக்கு ஆற்றிய சேவைகளையும் குறிப்பாக அல்குர்ஆனின் தூதை சர்வதேசத்திற்கு முன்வைப்பதில் செய்த பங்களிப்புகளை அல்லாஹ் அங்கீகரித்துக் கொள்வானாக!" என்றும் தெரிவித்துள்ளார்.

அவர்களது ஜனாஸாவில் ஜமாஅதே இஸ்லாமியின் முன்னாள் அமீர் காழி ஹுஸைன் அஹ்மத், தற்போதைய அமீர் முனவ்வர் ஹஸன், பொதுச் செயலாளர் லியாகத் புலூச் மற்றும் ஜமாஅத்தின் தலைவர்களும் கலந்து கொண்டனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். வல்ல அல்லாஹ் டாக்டர் இஸ்ரார் அஹ்மத் அவர்களின் அமல்களை அங்கீகரித்து நபிமார்கள், ஸித்திக்கீன்கள், ஷுஹதாக்கள், ஸாலிஹீன்களோடு சேர்த்து வைப்பானாக!

## வாசகர்கள் கவனத்திற்கு...!

கடந்த மார்ச் மாதம் வெளியிடப்பட்ட அல்ஹஸனாத் 40 வருட சிறப்பிதழில் "ஜமாஅத் உருவாக்கத்தோடு அதன் அச்சு ஊடகத்தின் வளர்ச்சியும் ஆரம்பித்து விட்டது" என்ற தலைப்பிலான அனுபவப் பகிர்வில், இந்நாட்டில் ஊடகத் துறைக்கு பங்களிப்புச் செய்த சஞ்சிகைகளின் பட்டியலில் ஜம்இய்யது அன்சாரிஸ் ஸுன்னதில் முஹம்மதிய்யாவினால் வெளியிடப்பட்டு வரும் 'உண்மை உதயம்' இதழின் பெயர் தவறுதலாக விடுபட்டு விட்டது. தவறுக்கு வருந்துகிறோம்.

இது வேண்டுமென்றே செய்யப்பட்டதல்ல. ஜமாஅத்தின் வரலாற்று ஆவணங்களிலும் 'உண்மை உதயம்' அழியாத இடத்தைப் பிடித்துள்ளது. எமது 40 ஆண்டு நிறைவு மலரிலும் (SOUVENIR) இவ் விடயம் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

குறித்த தவறை கண்ணியமான முறையில் சுட்டிக்காட்டிய 'உண்மை உதயம்' ஆசிரியர் பீடத்துக்கு ஜஸாகுமுல்லாஹு கைரன்.

ஆசிரியர் பீடம், அல்ஹஸனாத்

# இது யார் செய்த குற்றம்?!



ஜரீனா முஸ்தபா, வெலிவிட்ட

அன்று அந்த திடீர் செய்தி நம்மை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. நம்பவும் முடியாமல் இருந்தது. விரைவாக அந்த இடத்திற்குச் சென்றோம். ஒன்றாகப் படிக்காவிட்டாலும் அவள் எனது தோழிதான்.

அவளது கணவர் ஆற்றில் விழுந்து மரணித்து விட்டதாகக் கிடைத்த செய்திதான் அது. யாராவது தள்ளிவிட்டார்களா, இவராகவே ஆற்றில் பாய்ந்து விட்டாரா என்ற விபரம் தெரியவில்லை. மரண வீட்டில் ஒவ்வொருவரும் வெவ்வேறு கருத்துக்களை தெரிவித்துக் கொண்டிருந்தார்கள். யாருக்கும் சரியான விபரம் தெரியவில்லை. முதல் நாள் மாலை வீழ்ந்தவர், மறுநாள் பகல் வரையில் எவ்வளவு தேடியும் கிடைக்கவில்லை. அவர்கள் பியகமவில் தேடிக் கொண்டிருக்க, அவரது இறந்த உடல் ஹேவாகம பகுதியில் ஒதுங்கியிருந்தது. கண்டெடுத்து பொலிஸ் விசாரணை என எல்லாம் முடிந்து அடக்கம் செய்தனர்.

மூன்றாம் நாள் ஒரு சிங்களப் பத்திரிகையில் வந்த செய்தி என்னை மேலும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. ஒரு சிங்களப் பெண் அந்த மரணம் பற்றிய வாக்குமூலம் ஒன்றை பொலிஸாரிடம் கொடுத்திருந்தாள். அதில்,

“எனக்கும் அவருக்கும் எவ்வித தவறான தொடர்பும் இருக்கவில்லை. நானும் அவரும் ஒரே இடத்தில், ஒரே விதமான வியாபாரத்தை செய்கிறோம். அதனால் அடிக்கடி சந்தித்துக் கொள்வோம்; கொடுக்கல்-வாங்கல் செய்து கொள்வோம். இதை சந்தேகித்து அவர் மனைவி அடிக்கடி சண்டையிடுவாள். அன்று ஹங்வெல்லையில் சந்தை வியாபாரத்தை முடித்துக் கொண்டு பஸ் இல்லாததால் நான் அவரோடு பைசிக்களில் வந்தேன். அவர் மகனும் மனைவியும் ஆட்டோவில் வந்து பைசிக்கிளை இடைமறித்து என்னை பலவந்தமாக ஆட்டோவில் ஏற்றிக் கொண்டு பியகம பொலிஸுக்கு எடுத்துச் சென்றார்கள். இதனால் மனமுடைந்து வெட்கத்தில்தான் அவர் தற்கொலை செய்து கொண்டார். அவரது தற்கொலைக்குக் காரணம் அவரது மனைவிதான்” என தெரிவித்திருந்தாள்.

இச்செய்தியை என்னால் நம்ப முடியவில்லை. அவள் அடிக்கடி என்னை சந்திக்க வருவாள். கணவர்மீது வைத்திருக்கும் அன்பையும் அவர்களது இணக்கமான வாழ்வு பற்றியும் வார்த்தைக்கு வார்த்தை மொழிந்து கொட்டுவாள். ஒரு நாளும் அவளை நான் கவலையோடு கண்டதில்லை. இது எல்லாமே வெறும் வேஷம்தானா?

மீண்டும் அவளை சந்தித்தபோது அவள் இத்தாவில் இருந்தாள். குறித்த பத்திரிகைச் செய்தி பற்றி வினவினேன். அதற்கு அவள் “இது வெறும் சந்தேகமோ ஊகமோ அல்ல. முதலில் இதைக் கேள்விப்பட்டபோது நானும் நம்பவில்லை. அந்தளவிற்கு நான் அவரை நம்பியிருந்தேன். ஆனால் நாளடைவில் அவரிடம் ஏராளமான மாற்றங்களைக் கண்டேன். அடிக்கடி அவருடைய செல்போனுக்கு கோல் வரும். உடனே வெளியே போய் விடுவார். மிகவும் தாழ்ந்த குரலில் பேசுவார். யார் என்று கேட்டால் நண்பன் என்பார். எங்களோடு எங்குமே பயணம் வர மாட்டார். தலைவலி, வயிற்றுவலி என்று பல காரணங்களைச் சொல்லி தவிர்ந்து கொள்வார். ஆனால் நாங்கள் வெளியிறங்கிச் சென்றவுடன் அவரும் எங்கா

வது சென்று விடுவார். கேட்டால் "வீட்டில்தான் இருந்தேன்" என்பார்.

சந்தைகளில் துணி வியாபாரத்திற்கு செல்வதில்கூட அதிக அக்கறை எடுத்துக் கொள்வதில்லை. அடிக்கடி லீவு போடுவார். அதேபோன்று அந்தப் பெண்ணும் லீவு போட்டுவிட்டு அடிக்கடி இவரோடு சேர்ந்து பைசிக்களில் செல்வதாக சந்தையில் வியாபாரம் செய்கின்றவர்கள் என்னிடம் சொல்வதுண்டு. தொலைபேசியில் அவர்கள் தகவல் தெரிவித்தவுடன் பல முறை நான் அங்கு சென்றிருக்கிறேன். இருவருடைய 'தட்டு' களும் மூடியிருக்கும். இதுபற்றி அவரிடம் கேட்டால் ஒருநாளும் உண்மையைக் கூற மாட்டார். அதனால் அந்தப் பெண்ணிடமே சென்று சுமுகமாகக் கதைத்தேன்.

"உனக்கும் கணவன், பிள்ளைகள் இருக்கும்போது எதற்காக என் கணவரோடு தொடர்பு வைத்திருக்கிறாய். நீயும் ஒரு குடும்பப் பெண்தானே. உனக்கு வெட்கம், மானம், ரோஷம், எதுவுமே கிடையாதா? எதற்காக எங்கள் வாழ்வைக் கெடுக்கிறாய். இனிமேலாவது எங்களை நிம்மதியாக வாழவிடு" என்று கூறினேன். அதற்கு அவள் "நான் உன் கணவரைத் தேடிப் போகவில்லை. அவர்தான் என்னைத் தேடி வருகிறார். நீ ஒழுங்காக இருந்தால் எதற்காக என்னிடம் வருகிறார். முடிந்தால் உன் கணவனை போய் திருத்து. என்னைத் திருத்த நீ யார்?" என கண்டபடி ஏசி அவள் என்னை அவமானப்படுத்தி விட்டாள். இதனால் எனக்கும் என் கணவருக்கும் அடிக்கடி சண்டை ஏற்பட்டது. எனக்கு ப்ரஷெர் அதிகமாகி பல தினங்களாக வைத்தியசாலையில் இருந்தேன். இனிமேல் தான் திருந்தி விடுவதாக இறைவன் மீது சத்தியம் செய்தார். அதன் பின் சில காலம் நிம்மதியாக வாழ்ந்தோம்.

ஆனால், அவர் என்னை ஏமாற்றிக் கொண்டிருப்பது விரைவிலேயே தெரிய வந்தது. மீண்டும் அதே பிரச்சினை. ஒரு நாள் என் தம்பி தனது ஆட்டோவைக் கொண்டு வந்து என்னையும் மகனையும் அவசரமாக அழைத்துச் சென்றான். "தாத்தா இதை இப்படியே விடக் கூடாது. அவருக்கு ஒரு பாடம் படிப்பிக்க வேண்டும்" என்றான்.

அன்று ஹெங்வெல்ல சந்தை நாள். நான் போகும் போது என் கணவரும் அந்தப் பெண்ணும் பைசிக்களில் சென்று கொண்டிருந்தனர். இதைக் கேள்விப்பட்டே என் தம்பி எம்மை அழைத்து சென்றான். நாமும் அவர்களைப் பின்தொடர்ந்தோம். இருவரும் அவளின் வீட்டுக்குச் சென்று கொண்டிருந்தனர். ஆட்டோவில் இருந்தபடியே எனது மகன் அவர்கள் செல்லும் பைசிக்கிளை உதைத்தார். இருவரும் கீழே விழுந்தனர். உடனே ஆட்டோவை நிறுத்திவிட்டு, தம்பியும் மகனும் அவளை பலவந்தமாக ஆட்டோவுக்குள் ஏற்றி பியகம பொலிஸுக்கு அவளை ஒப்படைப்பதற்காகச் சென்று கொண்டிருக்கும் போது நம்மைக் கடந்து வேனில் சென்ற ஒருவர் "உங்களுக்குப் பின்னால் பைசிக்களில் வந்தவர் ஆற்றில் குதித்து விட்டார்" என்று கூறிவிட்டுச் சென்றார். உடனே அப் பெண்ணை விட்டுவிட்டு நாம் ஆற்றுப் பக்கம் ஓடினோம். அத்தோடு இவளும் தப்பி ஓடி விட்டாள்.

"அவளை பொலிஸுக்கு கொண்டு சென்றால் நான் உயிரோடு இருக்க மாட்டேன்" என அவர் முதலில் சொன்னதை நாம் பெரிதுபடுத்தவில்லை. சும்மா மிரட்டுவதாக எண்ணினோம். ஆனால் உண்மையாகவே அவர் அதை செய்வாரென்று நாம் எதிர்பார்க்கவில்லை.

ஆற்றங்கரையில் மக்கள் நிரம்பியிருந்தனர். அங்கிருந்த நீச்சல் தெரிந்தவர்களின் உதவியோடு அவரைத் தேடினோம். அன்று மாலை முதல் மறுநாள் வரை தேடியும் அவர் அகப்படவில்லை" என்றாள் கண்ணீரோடு.

அவளின் கதை எனக்குள் மிகவும் வேதனையை ஏற்படுத்தியது. நம்மவர்களின் சபல புத்தியால் இதுபோன்று எத்தனை குடும்பங்கள் சீரழித்திருக்கின்றன? எதற்காக நமது ஆண்கள் இப்படியெல்லாம் இழிவாக நடந்து கொள்கின்றார்கள் என எண்ணி கலங்கினேன். இருந்தாலும் அதை வெளிப்படுத்தாமல் "நீங்கள் பொறுமையைக் கைக்கொண்டிருந்தால் என்றாவது தனது தவறுகளை உணர்ந்து திருந்தியிருப்பார். ஆனால் இப்போது நீங்கள் தனித்து விட்டீர்களே" என்றேன். அவள் அழுது விட்டாள்.

"நான் எந்தளவு என் மனதில் நெருப்பைச் சுமந்திருந்தேன் என்பது எனக்கும் அல்லாஹ்வுக்கும் மாத்திரம்தான் தெரியும். நான் அவர்மீது உண்மையான அன்பு செலுத்தினேன். பண்பான மனைவியாக வாழ்ந்தேன். இதேபோன்று அவருக்கு என்மீது உண்மையான அன்பு இருந்திருந்தால் நிச்சயமாக வேறொரு பெண்ணிடம் சென்றிருக்க மாட்டார். அவளுக்காக உயிரையும் விட்டிருக்க மாட்டார். இப்படியொரு கணவர் இருந்தென்ன, இல்லாவிட்டாலென்ன? அவர் உயிரோடிருந்து தினம் தினம் எனக்கு நெருப்பைத் தந்து கொண்டிருப்பதை விட அவர் இறந்தது மேல் என நினைக்கிறேன். ஆனால் தான் ஒரு முஸ்லிம் என்பதையும் மறந்துவிட்டு ஈருலகிற்கும் ஈடேற்றமில்லாத ஒரு முடிவைத் தேடிக் கொண்டதை நினைக்கும்போது தான் மிகவும் வேதனையாக உள்ளது. அதற்காக அல்லும் பகலுமாக இறைவனிடம் அவருக்காக பாவமன்னிப்பு வேண்டிக் கொண்டிருக்கிறேன். அவர் இல்லையென்றால் என்ன? எனக்கு இரு பிள்ளை கள் இருக்கிறார்கள். அது போதும் எனக்கு" என்றாள் அமைதியாக.

□□□ □□□

இப்படி அவள் தன் பிள்ளைகள்மீது நம்பிக்கை வைத்து பல ஆண்டுகளுக்கு முன்னர் என்னிடம் சொன்னது இன்றுபோல் தோன்றுகிறது.

அவள் தனது மகனுக்கு திருமணம் செய்து வைத்து சில மாதங்களே ஆகியிருந்தன. ஒரு நாள் கண்ணீரோடு எம்மிடம் வந்தாள்.

"என் மகன் என்மீது உயிரையே வைத்திருந்தான். தந்தை இல்லை என்ற எந்தக் குறையும் வைக்கவில்லை. ஆனால் மருமகள் வந்ததோடு முற்றாக மாறிவிட்டான். மருமகளுக்கு என்னோடு, எனது மகளோடு மகன் பேசுவது பிடிக்காது. அன்புடன் இருப்பது பிடிக்காது.

அவளுக்கு பிடிக்காததினால் திருட்டுத்தனமாக வந்து பேசுவான். அதைக் கண்டுவிட்டால் நாள் முழுவதும் என் மகனை ஏறிட்டும் பார்க்க மாட்டாள்.

இப்படியிருந்த எனது மகன் காலப்போக்கில் முழுமையாகவே மாறி விட்டான். என் முகத்தையும் பார்ப்பதில்லை. எதைக் கொடுத்தாலும் வாங்க மாட்டான். ஒரு நாள் நானும் என் மகளும் ஒரு பயணம் சென்று திரும்பி வந்தபோது அதிர்ச்சியடைந்து விட்டோம். காரணம்? என்னிடம் எதுவும் சொல்லாமல் திருட்டுத்தனமாக தனிக்குடித்தனம் போய்விட்டார்கள். அவனுடைய இந்த திடீர் மாற்றத்தைக் கண்ட பலர் அவனுக்கு எங்களை வெறுக்கும்படியாக மருமகள் எதாவது மந்திரித்துக் கொடுத்திருப்பதாக சொல்கின்றார்கள். மகனுக்கு நீங்கள்தான் புத்தி சொல்லி இதற்கெல்லாம் நல்லதொரு முடிவை ஏற்படுத்தித் தர வேண்டும்" என எனது கணவரிடம் முறையிட்டாள் அவள்.

"உங்கள் மகன் எமது தொலைத்தொடர்பு நிலையத்தில் பணியாற்றிக் கொண்டிருப்பதால் இவர் அதிகாரத்தை உபயோகிப்பதாக தவறாக எண்ணக் கூடுமே" என்றேன் நான்.

"இல்லை, நிச்சயமாக அப்படி எண்ண மாட்டார். உங்கள் மீது உண்மையாகவே மதிப்பும் மரியாதையும் வைத்திருக்கிறார். அவர் வேறு யாருடைய பேச்சையும் கேட்பதில்லை. ஆனால் உங்கள் பேச்சைக் கேட்பார்" என உறுதியாகச் சொன்னாள்.

எனது கணவரும் நானும் அவளது மகனை அழைத்து அன்பாக பல அறிவுரைகளைச் சொன்னோம். அந்தத் தாயினது நிலைமைகளையும் மகத்துவங்களையும் உணர வைத்து தனது மனைவியோடு கலந்தாலோசித்து நல்ல முடிவை எடுக்கும்படி கூறி அனுப்பி வைத்தோம். அவரும் அதனை ஏற்றுக் கொண்டார். தனது மனைவியின் பேறு காலம் முடிந்த பிறகு அவளது தாய் வீட்டில் இருந்த தன் மனைவியை இந்த ஊருக்கு அழைத்து வந்தார் எல்லோரும் பழையபடி மகிழ்ச்சியாக வாழலாமென்ற முடிவோடு.

ஆனால் இங்குள்ள நிலைமை முற்றிலும் மாறிப் போயிருந்தது. அவர் தங்கைக்கு திருமணம் நிச்சயமாகி இவ்வாண்டு (2010) மார்ச் மாதம் மண்டபத்துக்கும் முற்பணம் செலுத்த முடிவு செய்திருந்தனர். ஆனால் அந்த அன்னையின் நிலை முற்றிலும் பாரிதாபத்துக்குரியதாய் மாறியது. பாவம் இந்த ஊரில் யார் முகத்திலும் விழிக்க முடியாத நிலையில் எங்கோ ஒரு மூலையில் மறைவாக வாழ்ந்து கொண்டிருக்கிறாள். காரணம், திருமணம் நிச்சயிக்கப்பட்ட நிலையில் அவளது மகள் ஒரு சிங்கள வாலிபனோடு ஓடிப்போய் விட்டாள்!

ஒரு சைக்கிள் வண்டி ஓட வேண்டுமாக இருந்தால் இரு சக்கரங்களும் ஒழுங்காக இயங்க வேண்டும். அது போன்றதுதான் வாழ்க்கையும். அன்னையும் தந்தையும் ஒழுங்காக வாழ்ந்து காட்டி நம் பிள்ளைகளுக்கு நல்வழி காட்டவில்லையானால் பிள்ளைகளின் நிலை என்னவாகும் என்பதற்கு உதாரணமாகவே இச் சம்பவம் அமைந்துள்ளது. இது அவளுடைய குடும்பத்திற்கு மாத்திரமல்ல, நமது சமூகத்திற்கும் இழிவுதான்.

இது யார் செய்த குற்றம்?!



## மணமகன் தேவை

நீர்கொழும்பு பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயதுடைய விஞ்ஞானப் பிரிவில் கல்விக் கல்லூரி பயிற்சிநெறியை பூர்த்தி செய்துள்ள, இஸ்லாமிய இயக்கத்தில் மிகுந்த ஈடுபாடு உடைய மணமகளுக்கு பொருத்தமான மணமகன் தேவை.

தொடர்புகளுக்கு: 0773171719

## சந்தாதாரர் கவனத்திற்கு...!


**அல்ஹஸனாத் இதழை சந்தா மற்றும் புரவலர் சந்தா மூலம் பெற்றுக் கொள்ளும் வாசகர்கள் அது தொடர்பில் ஏற்படும் பிரச்சினைகள், முறைப்பாடுகளை பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு நிவர்த்தி செய்து கொள்ளவும்.**

**சகோதரர். எஸ்.எம். பாஹிம் (077-1677109)**

smfahim2@gmail.com

கொழும்பு சென்று தான்
**Advanced Computer Networking**
கற்க வேண்டிய நிர்ப்பந்தமா?
**இல்லை!**
இப்பொழுது வடமேல் மாகாணத்தைச் சேர்ந்த
மாணவர்களுக்கும் இந்த அரிய வாய்ப்பு காலடியில்...
அதியுயர் வருவாயுடனான சர்வதேச அங்கீகாரம் பெற்ற வேலைவாய்ப்புகளை
இலகுவாகப் பெற்றுத் தரக்கூடிய கணனிப் பாடநெறிகளான
MCSE / MCTS / MCITP
CCNA / CCNP / CCIE
Network Administration
Hardware Engineering
Linux Network Administration
கைக்கெட்டும் தூரத்திலும், கைகூடும் கட்டணத்திலும்.
Microsoft மற்றும் CISCO சான்று பெற்ற, 10 வருட அனுபவம் வாய்ந்த
தரமான விரிவுரையாளரின் நேரடிப் பயிற்றுவிப்பில் உங்கள் தொழில்சார் அறிவை
விருத்தி செய்து கொள்ள... நாடுங்கள்
minfotec
NOTHING COULD GET BETTER!
+94 71 6803 555 • contact@minfotec.com
பாடநெறி முடிவில் UK வீசாக்களுக்கான ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.

# ஒரு நிமிடத்தில்...



பின்த் சுபியான், உலப்பனை

அந்நிஸா

**நேரம்தான்** வாழ்க்கை. அதை நாம் சரியான முறையில் பயன்படுத்துவதன் மூலம் ஈருலகிலும் எம்மால் வெற்றி பெற முடியும். எம்மை அறியாமலேயே எமது வாழ்க்கையில் ஒவ்வொரு நிமிடமும் வீணாகக் கழியும் சந்தர்ப்பங்கள் அதிகம். இனி, எம் ஒரு நிமிடத்தில் எவ்வாறு பல நன்மைகளை ஈட்டிக் கொள்ளலாம் என்று பார்ப்போமா?

அல்குர்ஆனின் சில வசனங்களை ஒரு நிமிடத்தில் ஓதலாம்.

“இறை வேதத்திலிருந்து யார் ஓர் எழுத்தை ஓதுகிறாரோ அவருக்கு அதன் மூலம் ஒரு நன்மை உண்டு. ஒரு நன்மை 10 மடங்கை கொண்டதாகும்.”

(அத்திர்மிதி)

ஒரு நிமிடத்தில் ஸூரதுல் இஹ்லாஸை 20 முறை ஓதலாம். ஸூரதுல் இஹ்லாஸை ஒரு முறை ஓதுவது குர்ஆனில் 1/3 பகுதியை ஓதுவதற்கு சமம். 20 முறை ஓதுதல் என்பது குர்ஆனை 7 முறை ஓதுவதற்கு சமம்.

“லா இலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லா ஷரீகலஹு லஹுல் முல்கு வலஹுல் ஹம்து வஹுவ அலா குல்லி ஷைஇன் கதீர்” என்று ஒரு நிமிடத்தில் 10 முறை ஓதலாம்.

“யார் இதை 10 முறை ஓதுகிறாரோ, அது அவர் நான்கு அடிமைகளை விடுதலை செய்வதற்குச் சமமாகும்.”

(அபூ தாவூத், இப்னு மாஜா)

ஒரு நிமிடத்தில் “ஸுப்ஹானல்லாஹி வபிஹம்திஹீ” என்று 100 முறை ஓதலாம்.

“யார் இதைக் காலையிலும் மாலையிலும் 100, 100 விடுத்தம் ஓதுகிறாரோ, கியாமத் நாளில் அவர் கூறியதைப் போன்றோ, அல்லது அதை விட அதிகமாகவோ கூறியவரைத் தவிர, அவர் கொண்டு வருவது போன்று நன்மையை வேறு எவரும் கொண்டு வர மாட்டார்.”

(அல்புகாரி, முஸ்லிம்)

ஒரு நிமிடத்தில் “ஸுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி ஸுப்ஹானல்லாஹில் அழீம்” என 50 தடவைகள் ஓதலாம்.

இரண்டு சொற்கள் உள்ளன. அவை நாவிற்கு எளிதானவை; மீஸான் தராசில் கனமானவை; இறைவனுக்கு மிகப் பிரியமானவை. அவையே இவ்வார்த்தைகள்.

(அல்புகாரி, முஸ்லிம்)

ஒரு நிமிடத்தில் “லாஹவ்ல வலா குவ்வத இல்லா பில்லாஹ்” என 40 தடவைகள் கூறலாம்.

“இந்த வார்த்தை சுவர்க்கத்தின் பொக்கிஷங்களில் ஒன்றாகும்.”

(அல்புகாரி, முஸ்லிம்)


“அஸ்தஹ்பிருல்லாஹ்” என ஒரு நிமிடத்தில் 100 தடவைகள் ஓதலாம்.

- ஒரு நிமிடத்தில் ஒரு புத்தகத்தில் இலகுவாக விளங்கக்கூடிய இரண்டு பக்கங்களை வாசிக்கலாம்.
- ஒரு துஆவை ஒரு நிமிடத்தில் கையேந்தலாம்.
- ஒரு நிமிடத்தில் சிலருக்கு கைகொடுத்து ஸலாம் கூறலாம்.
- ஒரு நிமிடத்தில் ஒரு பாவத்தை தடுக்கலாம்.
- ஒரு நிமிடத்தில் ஒரு சகோதரனுக்கு பயனுள்ள ஓர் அறிவுரையை வழங்கலாம்.
- ஒரு நிமிடத்தில் பாதையில் தீங்கு விளைவிக்கும் ஒரு பொருளை அகற்றலாம்.
- ஒரு நிமிடத்தில் உற்சாகமில்லாமல் இருக்கும் ஒருவரை உற்சாகப்படுத்தலாம்.
- ஒரு நிமிடத்தில் தொலைபேசியினூடாக ஒரு நோயாளியை நலம் விசாரிக்கலாம்.

இப்படி பல வகையான நல்ல விடயங்களை ஒரு நிமிடத்தில் செய்ய முடியும். நாம் செலவு செய்யும் ஒவ்வொரு நிமிடத்திற்கும் அல்லாஹ்விடம் பதில் சொல்ல வேண்டும். “இறுதித் தீர்ப்பு நாளில் ஐந்து கேள்விகளுக்கு விடையளிக்காத வரை மனிதன் (இறைவனது நீதிமன்றத்திலிருந்து) அகன்று செல்ல முடியாது.” (அத்திர்மிதி)

அதில் ஒன்றுதான் காலம் பற்றியது. எனவே சகோதர சகோதரிகளே, நாமும் நேரத்தை வீணடிக்காது ஒவ்வொரு நிமிடத்தையும் பயனுள்ளதாகக் கழித்து வெற்றி பெறுவோம்!

## STUDY IN
# UK, USA, CANADA
# MALAYSIA, SINGAPORE



### COURSES

Business (BBA, MBA, Phd), Computer, Hotel Management, ABE Courses, HND, Travel & Tourism, Engineering, Shipping, Beauty Culture, Law and over 200 Courses Available.

**IELTS REGISTRATION NOW ON FOR MARCH/APRIL/MAY INTAKES**

**Minimum Qualification G.C.E O/L**

TIER-4 FINAL STAGE CAS SYSTEM INTRODUCED FROM 22nd FEBRUARY 2010 (WE HAVE RECEIVED MORE QUOTAS FROM SPONSOR LICENCE COLLEGES IN UK)

WE RECEIVED "BEST AGENT" AWARD FOR 2008, 2009

### HOTLINE

Sumaira :077 3411434
Shabri :072 2318011
Hakeem :072 2476000
Ayesha :072 2461808

## MILLENNIUM BUSINESS ACADEMY (MBA)

# 286, R.A. De Mel Mw, Colombo 03
Tel: 011 5748720, 5 748 721, 0114 335044


web : www.millmba.com E-mail : mbaslt@yahoo.com

# உள்நாட்டு எழுத்தாளர்களின் வெளியீடுகள்

1. நவீன இஸ்லாமிய எழுச்சியில் ஷெய்க் அல்கஸ்ஸாலி - 90.00
2. பாவம் மனிதன்- இஸ்லாம் - சீர்திருத்தம் - 170.00
3. சொல்வதைச் சொல்கிறோம் ஊருக்கே கேட்பதற்கு - அல்ஹாஜ் எம்.இஸட். அஹ்மத் முனவ்வர்- 200.00
4. இஸ்லாம் சமாதானமும் மனித நேயமும் - மௌலவி ஆதம் பாவா - 120.00
5. உத்தமர் உவைஸ் - எஸ்.எம். ஹனீபா - 100.00
6. அதிகாரம் பற்றிய இரண்டு கண்ணோட்டங்கள் - ஏ.பி.எம். இத்ரீஸ் (நளீமி) - 250.00
7. மூட மறுக்கும் விழிகளும் துடிக்கும் இதயமும்- மருதூர் ஏ. மஜீத் - 285.00
8. தூரப்போகும் நாரைகள் - சிறுகதை- தாட்சாயணி - 250.00

## ஒரே நிறுவனத்தில்...

அல்ஹஸனாத் | எங்கள் தேசம் | அகரம் | ப்ரபோதய | இஸ்லாமிய சிந்தனை | உண்மைஉதயம் | மீள்பார்வை | வைகறை | பயணம் | முஸ்லிம் | நவமணி | சர்வதேசப் பார்வை | நாற்று | நகர்வு | சத்தியக் குரல் | Islamic Finance Today | அன்னை | திறன் | தளிர் | யாத்ரா ஆகிய சஞ்சிகைகளைப் பெற்றுக் கொள்ளுங்கள்...



## அன்பளிப்பு வவுசர்கள்

மே மாதம் முதலாம் திகதியிலிருந்து
________ 31ம் திகதிவரை ________

* ரூபா 3500/= தொடக்கம் 6000/= கொள்வனவுக்கு 500/=
* ரூபா 6000/= தொடக்கம் 9000/= கொள்வனவுக்கு 1000/=
* ரூபா 9000/= க்கு மேற்பட்ட கொள்வனவுக்கு 1500/=
* பெறுமதியான Gift Vouchers வழங்கப்படும்.

## வேலைவாய்ப்பு

எமது நிறுவனத்தில் பணிபுரிவதற்கு கீழ்க் காணும் வெற்றிடங்கள் உண்டு.

- விற்பனை உதவியாளர்கள்- 05
- அலுவலக உதவியாளர்கள்- 03

*Tel:* 0112684851- 0112669197, *Fex:* 0112688102

இலக்கம் , 77 பதினைந்து படிகள் ஏறி உள்ளே வர வேண்டிய

B

# இஸ்லாமிக் புக் ஹவுஸ்

77, தெமடகொட வீதி, கொழும்பு- 00900



# BUSINESS ENGLISH

If English Language is the only obstacle to your next **BIG step** in your career , then you have come to the right place.!

Our Business English course is **interactive dynamic and practical**.

The lecturers and instructors are very experienced - and they know that all businesses are not the same and that *you have your own unique needs*

Our courses are **flexible** enough to address your needs and that of your employer's. Whatever *your* language level may be we will give you the *additional* **skills** and **confidence** you need to use what you have learned immediately and effectively.

Course Duration : **6 Months** | Course Fees : **Rs 9,000**

Batches : **Weekday / Weekends**

For registrations call **0772 992 225**

INSIGHT INSTITUTE

18 A, Palmyrah Avenue, Colombo 3
Tel 0773 171 722 | Fax 011 2 686 030
E-mail: insightcampus@gmail.com

# ஓர் நற்செய்தி!!!

அறபுக் கல்லூரியல் பட்டம் பெற்றவர்களுக்கும் (மௌலவி மார்களுக்கும்) பயின்று கொண்டிருப்பவர்களுக்குமான சர்வதேசத் தரத்தினைப் பெற உள்நாட்டிலே ஓர் அரிய வாய்ப்பு.

## இஸ்லாமிய ஷரீஆ கற்கை நெறிக்கான உயர் டிப்ளோமா சான்றிதழ்
## Higher Diploma in Law and Shariah

Golden College ஆனது Comtech உடன் இனைந்து மலேசியாவின மலாகா மாணில அரசப் பல்கலைக்கழமான International Islamic University College of Technology - Malaka - Malaysia (IIUTC) உடன் இனைந்து உயர் டிப்ளோமா சான்றிதழ் வழங்க முன்வந்துள்ளது.

### கற்கை நெறிக் கட்டமைப்பு

★ 03 வருடங்கள் (6 தவனைகள்) ★ மொழி மூலம் : அறபு

★ பாடவிதானம், பரீட்சை வினாப்பத்திரம், பரீட்சைப் பெறுபேறு ஆகியன (IIUTC)னால் வழங்கப்படும். ★ விரிவுரைகள் அனைத்தும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களால் மேற்கொள்ளப்படும்.

★ சித்தியடையும் மாணவர்களுக்கு உயர் டிப்ளோமா சான்றிதழ் (IIUTC) னால் வழங்கப்படும்.

### இப்பாடநெறியை மேற்கொள்வதற்கான குறைந்த தகைமை

G.C.E (O/L) 03 திறமைச் சித்தியுடன் 06 பாடங்களில் சித்தி, அத்துடன் அறபுக் கல்லூரியில் 05 வருடங்களுக்கு மேல் பூர்த்தி செய்திருத்தல்.

**மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் : 0777 717129**

**GOLDEN COLLEGE**
Institute of Engineering & Management Studies

# புலமைப் பரிசில்
# SCHOLARSHIP IN MALAYSIA

**International Islamic University College of Technology - Malaka - Malaysia (IIUTC)**
இல் உயர் டிப்ளோமா தொடர்வதற்கான புலமைப் பரிசில்

★ Hotel Management
★ Diploma in Tourism Management
★ Diploma in Finance ★ Diploma in Accounting
★ Diploma in Business Information System
★ Diploma in Marketing

மேற்குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிகளுக்கு புலமைப் பரிசில் உள்ளன.

### இப்புலமைப் பரிசில் பெறுவதற்கான தகைமைகள்

★ 25 வயதுக்கு உட்பட்டிருத்தல்

★ க.பொ.த சா.தர பரீட்சையில் 06 பாடங்களில் சித்தி (ஆங்கிலம் உட்பட)

03 வருடங்கள், கற்கைநெறி, உணவு, தங்குமிடம், காப்புறுதி முற்றிலும் இலவசம்

**மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் : 0777 717129**

**GOLDEN COLLEGE**
Institute of Engineering & Management Studies
**No.23, Suduhumpola Rd, (Off Peradeniya Rd) Kandy (Near Girls' High School) Tel:081 2205544 /081 2234905 Mobile: 0777 912597/071 8032967**

# DIPLOMA IN PSYCHOLOGICAL COUNSELING



நம்மை நாம் அறிந்து, பிறரது உளப்பிணிகளைத்தீர்க்கத்துணைபுரியும் கல்விப்பயணத்தில் இன்றே இணைந்துகொள்வோம்.

- சந்தோசம் நிறைந்த சுகவாழ்விற்கு
- மகிழ்ச்சிகரமான மணவாழ்விற்கு
- ஆரோக்கியமான குழந்தை வளர்ப்பிற்கு
- வெற்றிகரமான பெறுபேறுகளைப் பெறுவதற்கு
- மக்கள் மனங்களை வெல்லும் தலைமைத்துவ, முகாமைத்துவ, பண்புகளை விருத்திசெய்து கொள்வதற்கு
- உங்கள் உள்ளத்தின் அபார ஆற்றல்களையும் ஆன்மாவின் பலத்தையும் அறிந்து தனித்துவமான ஆளுமையுள்ளவர்களாக மிளிரச் செய்வதற்கு
- நடத்தைப்பிறழ்வுகளிலிருந்து நமது பிள்ளைகளைப்பாதுகாத்து, பொருத்தமான பண்பியல்பயிற்சிகளை வழங்குவதற்கு

வழிகாட்டும் உளவியல்சார் உளவளத்துணை கற்கைநெறியில் இணைந்து சமூகப்பணியில் சிறப்புத் தேர்ச்சி பெறுவோம்.

(இக்கற்கை நெறியுடன் இஸ்லாமிய உளவியல், உளவளத்துணை என்பனவும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**வளவாளர்கள்**

அனுபவமுள்ள முஸ்லிம் மருத்துவர்கள், தொழில் நிபுணத்துவமுள்ள உளவளத்துணையாளர்கள் (Counselors), பல்கலைக்கழக விரிவுரையாளர்கள்

**Enroll Now**

**Call : 0716 071 817**

| | |
|---|---|
| காலம்: | 6 மாதம் |
| மொழி: | தமிழ், English |

## Association of Business Executives (UK)
## மற்றும் Institute of Islamic Banking & Insurance (UK)
## இணைந்து வழங்கும்

# Islamic Banking & Finance
## Diploma / Advanced Diploma

போட்டி நிறைந்த இன்றைய உலகத்தொழிற் சந்தையில் அதிக வருமானமும் தொழில் வாய்ப்புக்களும் நிறைந்து காணப்படும் இஸ்லாமிய வங்கித் துறையில் நீங்களும் நிபுணராகலாம்.

| | |
|---|---|
| காலம் | : ஆறு மாதங்கள் (06) |
| மொழி மூலம் | : தமிழ் (சனிக்கிழமை)<br>ஆங்கிலம் (ஞாயிற்றுக்கிழமை) |

**Enroll Now** > **Call - 0777 459 439**



- பாடசாலை பல்கலைக்கழக மாணவர்கள், நிதி நிறுவனங்களில் தொழில் புரிபவர்கள் குழுக்களாக கற்க விரும்புமிடத்து விசேட ஒழுங்குகள் குறித்து கவனத்திற் கொள்ளப்படும்.
- இஸ்லாமிய வங்கி, நிதித்துறை ஆய்வாளர்களுக்கு தேவையான நூலக மற்றும் வழிகாட்டல்கள் வழங்கப்படும்.
- கற்கைநெறியின் முடிவில் உயர்கல்வி மற்றும் தொழில் வாய்ப்புக்களுக்கான வழிகாட்டல்கள் வழங்கப்படும்.

**ABE (UK)**
: The most Recognized Awarding body & provider of business & management qualification in worldwide.

**IIBI**
: Is one of the world's leading independent Academic & research Organization

Diploma / Advanced Diploma → Post Graduate Dip. at IIBI (UK) → Msc in Islamic Finance at the University of Durham (UK) → PhD in Islamic Finance

Accredited Centre for ABE(UK) :
**APCC Asia Pacific City Campus,**
# 130, Galle Road, Dehiwala.

Tel: 011 4808094, 077 3717974, 077 2301383
E: info@apcitycampus.lk
W: www.apcitycampus.lk

# பாசமிகு மனைவியை

# மகிழ்விப்பது எப்படி?




பின்த் ஹப்ஸா

மருதமுனை


□□□

01. உங்கள் தொழுகைகளிலும் ஏனைய நேரங்களிலும் சிறிது நேரத்தை அவர்களுக்காக அல்லாஹ்விடம் துஆ கேட்பதற்காக ஒதுக்குங்கள். மேலும் அவர்களின் ஆரோக்கியத்திற்காக அதிகமதிகம் பிரார்த்தனை புரியுங்கள். அவர்கள் உங்களுக்கு ஆடை; நீங்கள் அவர்களுக்கு ஆடை என்பதை மறந்து விடாதீர்கள்.

02. நீங்கள் அறிந்த சில விடயங்களை அவர்களுடன் சேர்ந்து கலந்துரையாடுங்கள்.

உதாரணமாக, புத்தகங்களில் வாசித்தவை, கேட்ட பயான்கள், கேட்ட குத்பாப் பிரசங்கங்கள்.

03. சில விடயங்களில் அவர்கள் உங்களுடன் உடன்படாதபோது விட்டுக் கொடுங்கள். நேரம் வரும்போது அதனைச் சுட்டிக் காட்டுங்கள்.

04. மாதத்தில் ஒரு தடவையாவது மனைவி, பிள்ளைகளை அழைத்துக் கொண்டு வெளியிடங்களுக்குச் செல்லுங்கள். இது அவர்களுக்கு உள ஆரோக்கியத்தைக் கொடுப்பதோடு, உங்களைப் பற்றிய நல்லெண்ணத்தையும் அதிகரிக்கும்.

05. மற்றவர்களின் முன்னால் அவர்களைக் கடிந்து கொள்ளாதீர்கள். இது அவர்களின் தன்மானத்தைப் பாதிக்கலாம். இதனால் அவர்கள் மனம் புண்பட்டு உங்கள் மீது அதிக வெறுப்பைக் காட்டலாம்.

06. அவ்வப்போது அவர்களுக்குப் பிடித்தமானவைகளை வாங்கி அன்பளிப்புச் செய்யுங்கள். இது அவர்களுக்கு உங்கள் மீதுள்ள அன்பை மேலும் அதிகப்படுத்தும். பெருநாட் காலங்களில், நினைவுகூரக் கூடிய சில நாட்களில் (உ+ம், திருமண நாள்) விஷேட அன்பளிப்புகளைக் கொடுங்கள். வெறுமனே காசைக் கொடுத்து விட்டு 'விரும்பியதை வாங்கிக் கொள்.' என்று கூறி விடாதீர்கள். எவ்வளவுதான் பணம் அவர்களிடம் இருந்தாலும், கணவன் ஆசையோடு, அன்புடன் வாங்கிக் கொடுக்கும் பரிசுப் பொருள் எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அதைப் பெரியதாக எண்ணி சந்தோஷப்படுபவள் பெண். ஆகவே, இச்சிறு முயற்சியில் இறங்கிப் பாருங்கள், வெற்றி உங்களுக்கே.

07. கணவன்மாரே! நீங்கள் மார்க்க விடயங்களில் மனைவியரை விட சற்றுக் குறைவாக இருக்கலாம் அல்லது பொடுபோக்காக இருக்கலாம். அதற்காக அவர்களை குறை கூறி, மட்டம் தட்டி மார்க்க விடயங்கள் பேசுவதை விட்டும் தடுத்து விடாதீர்கள். ஏனெனில் நாங்கள் மறுமையை நம்பியவர்கள். அல்லாஹ்வை சந்திக்க இருப்பவர்கள். அல்லாஹ் தரும் தீர்ப்பை பொருந்திக் கொள்ள வேண்டியவர்கள். ஆகவே மறுமைக்காக இம்மையைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

**“ஈமான் கொண்டவர்களே! உங்களையும் உங்கள் குடும்பத்தினரையும் நரக நெருப்பிலிருந்து காப்பாற்றிக் கொள்ளுங்கள்.” (அல்குர்ஆன்)**

08. அவர்களைப் பற்றி உங்கள் உறவினர்களிடம் பெருமை பாராட்டிப் பேசுங்கள். தேவையேற்படின் அவர்களது செயல்கள் நல்லதாக இருந்தால் தட்டிக் கொடுங்கள். தட்டிக் கழிக்காதீர்கள்.

09. அவளுடைய குறைகளை மட்டுமே அவ்வப்போது சுட்டிக் காட்டுங்கள். குடும்பத்தை, பரம்பரையைக் குறை கூறாதீர்கள். தாய், தந்தையரைப் பற்றிக் குறையாகக் கூறும்போது எந்தப் பெண்ணும் தாங்கிக் கொள்ள மாட்டாள். பரம்பரையைக் குறை கூறுவதைப் பற்றி நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் எச்சரித்துள்ளார்கள்.

10. மற்றப் பெண்கள் சொன்னார்கள் என்பதற்காக சில வேலைகளைச் செய்யாதீர்கள் (உ+ம்: ஆடை அணிவது, முடியை அலங்கரிப்பது, நறுமணங்கள் பூசுவது) உங்கள் மனைவியின் விருப்பத்தையறிந்து இவற்றைச் செய்யுங்கள். இல்லாவிடின் அவர்களின் மனம் பாதிக்கப்பட்டு உங்களுக்காக அவர்கள் செய்யும் வேலைகளில் சடைவு ஏற்படலாம். ஆகவே, மனைவியரின் உள்ளத்தை வெற்றி கொண்ட கணவனாக ஆகுங்கள்.

## தெளி...

பார்.....
உன் மரணத்
தறுவாயில்தான்
திருமறை வாசகங்களை
கேட்க முடிகிறது- உன்
செவிகளுக்கு...

அது தவிர
உன் வாய்க்கு
கலிமாவினை உச்சரிக்க
உத்தரவிடும்- உன்
உறவுகள்- அதை
கற்றுக் கொடுக்காது...

உன்
வெண்மயிர்களை- நீ
காணும் போதுதான்
உ(ன்)ள் மனம்
மரணத்தினை
உச்சரிக்கின்றது...!

நாடி நரம்புகள்
ஆடி அடங்கிய பின்
இரா வேளைகளிலும்-
உனக்கு
இறைவணக்கம்...
கூனல் முதுகுடன்...,

ஆசைகளால்
வளைக்கப்பட்டிருக்கிறது
உன் வாலிபம்!
என்றுணர்த்தாமல்
எதற்கிருந்தது- உனக்கு
பகுத்தறிவு...!?

நால்வர் கொண்டு-
உன்னை
கப்ரினில் வைத்தாலும்
மறுமைக்காகவென்று
மங்காது காத்திருக்கும்- நீ
விட்டுச் சென்ற
சுவடுகளாய்...
நன்மைகளும்
தீமைகளும்...

**கட்டாரிலிருந்து**
**ஓட்டமாவடி ஸிமாக்**

## வேலிதாண்டும் பயிர்

சடவாதம் தாண்டி
உயிரோட்டம் நீந்தும்
இஸ்லாத்தில்- என்
இரத்த நாளமெங்கும்
புது ரத்தம் பாயுதே...!

முழு ஆடைக்குள்
மேனி மறைத்திடும்
என்னால்
நடு வீதியில்
முந்தானை விலக
நடையெடுப்பதென்றால்
முடிகின்ற காரியமா?

பாங்கோசை செவி
நுழைய
சுஜூதில் வீழாமல்
அலட்சியம்
செய்வதென்றால்
முடிகின்ற காரியமா?
பேணுதலாய்
உண்ணுகையில்
பல லட்சம் தந்தாலும்
ஹராமதை புசித்தல்
முடிகின்ற காரியமா?

மாற்றான் கை
தொடுகையை
தவறில்லையென-
மனமேற்குமெனில்
முடிகின்ற காரியமா?

இருந்துமேன் மனிதா!
மார்க்கத்தை
மறந்துபோய்
மாற்றான் மாப்பிள்ளை
பெண் கொள்ளும் மனம்
எப்படி வருகிறது?

நரகத்தைக் காட்டி
வாவென்றழைக்கையில்
வாழ்க்கைக்கு வெளியே நீ
எதனை வாழச்
செல்கிறாய்?
அல்லாஹ்வை மொழிந்த
நாவும்
அவனை அடைகாத்த
நெஞ்சும்
அவனைத் துதித்த
கைகளும்
கற்களுக்கு கைகூப்பும்
காரிருளை கையேற்க
நீ என்ன
வேலி தாண்டிய பயிரா?

**ஜுமானா ஹிஜாஸ்**
**அம்பரப்பொல**

## அல்ஹஸனாத்

கல்லாய்
முள்ளாய்
இருந்த
கல்புகளினுள்
நீ வந்தாய்...
பசும் தென்றலாய்

மாறியது
எம் உள்ளங்கள்
அனைத்தும்
நந்தவனமாய்...

40 வருடத்தில்
பூக்கள் பூத்து
நறுமணம் கமழ்கிறாய்
எம் உள்ளத்து
நந்தவனங்களில்...

**பின்த் ரபீக்**

## நற்பேறு நன்மைக்கு மட்டும்தான்!

வியந்து பார்க்கும் இமய
மலையும்
விண்ணில் ஊரும் மேக
கணமும்
அலைகளோடு கடலும்
ஆறும்
காட்சியுள்ள அனைத்து
ரகமும்
காற்றும்கூட அழிந்து
போகும்
ஒரு நாளில்!

ஒய்வு இன்றித் திரிந்த
உயிரும்
ஓய்ந்து போன உடலும்
சடமும்
அடங்கிப் போகும்
இறைவன் முன்னால்

வருத்தி நிதமும் உழைத்த
பொருளும்
பணமும் புகழும்
பெயருங்கூட
எம்மை விட்டு விலகி ஓடும்
ஒரு நாளில்!

இந்த உலகில்
ஒன்றி வாழ்ந்த
உறவும் நட்பும்
அன்பும் அயலும்
அனைத்தும்
இன்றிப் போகும்
அந்த நாளில்!

இறைவனுக்காய் செய்த
நன்மை
மட்டும் வாழும்
எம்மை வாழ வைக்கும்
வெற்றி வாகை- அன்று
சூட வைக்கும்
சூழும் நரக நெருப்பை
தூரமாக்கும்!

**யாழ் ஜே. ஜுனைட்**

கவிதா பவனம் கவிதா பவனம்

**Flash Back**

# இஸ்லாம் இயம்பும் இனிய வழி

விடத்தல்தீவு எம்.பீ.எம். முஹம்மது காஸிம்

வழிகாட்டி 1958, மே

இஸ்லாம் இயம்பும்
இனியவழி- இந்த
ஈரேழுலகிலும்
வேறுயில்லையடா
தஸ்லீம் பண்ணிய
வணக்கம் பிடித்து-
முஸ்லிம்
தாரணிவாழ்வீர்
தகைமையுடன்

அந்தகாரம் அனாச்சாரம்
ஷிர்க்- பொல்லா
ஆங்காரம் ஆணவம்
அறப்போக்கி
நசிதல் இல்லாமல்
இறைவழிநாடிட-
இஸ்லாம்
நாடும் வழிபோல்
வேறுயில்லையடா

ஒப்பில்லா றப்புக்கு
ஒப்புவைத்து- அஃறிணை
உதவாப் பொருளை
வணக்கம் செய்யும்
தப்பான வழியை
தள்ளிவிட்டு- இஸ்லாம்
தக்கவழியினைக்
காட்டுதடா

ஈமானைக் கொண்டு
இஸ்லாத்தில் நின்று-
தினம்
ஏகயிறைவனைத் தொழுது
கொண்டு
நோன்பு ஸகாத்தை
நோக்கி நின்று- வழி
நோகாமல் செய்யும்
ஹஜ்ஜுடனே

பர்ளு சுன்னத்து
முஸ்தஹபு வாஜிபு- நல்ல
பாங்கான நபில்
கட்டளைகள்
இருளையகற்றும்
இரவியைப் போல்- தீன்
இஸ்லாமியத்தன்
நெறிவழியடா

துன்மார்க்கமெல்லாம்
தொலைத்துக்கட்டி-
இஸ்லாம்
துய்ய வழியில் பல
பாக்கியங்கள்
நன்மார்க்கமாக நமக்கு
இருக்கையில்- பலர்
நாடாதிருப்பதேன்
தொழுகைதனை

சாந்திமார்க்கத்தில் வந்த
முஸ்லிம்- இன்று
சமயாசாரத்தைத் தவற
விட்டு
நந்திபோல் தின்று
கொழுத்து- அல்லாஹ்வை
நாடாதிருப்பது நல்வழியா?

### உவகை உலா!

ஜாலமிடும் பூமியிதில்
வாழ வந்த இளசுகளென்று
சுதந்திரக் காற்றுக்கள்
நாற்றிசையிலும் நாசகாரமற்று
நாம்
ஓடும் தூரம்
இனி தூரமல்லவே
வாழும் காலத்தில் வெற்றிப்
பெருமிதம்
என்றும் இளமையாகட்டும்

*யாசீன் பாவா ஹுஸைன், பொத்துவில்*

### தற்கால மனிதன்

கற்கால மனிதன்
கல்பிலே பதித்த குர்ஆன்
தற்கால மனிதனால்
பட்டையில் பதியப்படுகிறது


*எம்.ஏ. நிஃமத், புத்தளம்*

### பதிலடி!

காடுகளிலும் கரைகளிலும்
வாடி வதங்கி நிற்காதே!
நாளைய எதிர்கால
சவால்களுக்கு
பதிலடி கொடுத்திடுவோம் வா!

*நதீரா நஜ்முத்தீன், வாழைச்சேனை*

## கவிதை நெய்தல் 116



### துஷ்பிரயோகம்

பள்ளிப் பருவம்
முளையிலேயே கிள்ளியெறியும்
அந்தகார உலகம்
புத்தகம் சுமக்கும் வயதில்
விறகு சுமக்கும் அவலம்
நாளை என்னாகும்
இவர்களின் எதிர்காலம்

*ஏ.ஆர்.எம். நதார், ஜின்னா நகர்*

### புதிய தசாப்தம்

சோமாலியக் குழந்தைகள்
நிவாரண உணவுக்காய்
தட்டுக்கள் ஏந்தி நிற்க
நீங்கள் மட்டும்
சிலேட்டுகள்
தாங்கி நிற்கிறீர்கள்
புதிய தசாப்தம் படைக்கவா?

*நிஸ்ரூபா பஷீர், நாவலப்பிட்டி*

### புதிய வரலாறு

ஆபிரிக்காக் கண்டத்தின்
இதயம்
வெள்ளையானது என்று
நீங்கள் பதிக்கும் சிலேட்டுக்கள்
நாளை
வரலாறு சொல்லும்

*முஹம்மத் பஹீஜ், கிண்ணியா*

### ஓதாத சமூகம்

அலுமாரி நிறைய
அடுக்கியிருக்கும்
குர்ஆனை
எடுத்து ஓதாத சமூகமா
நீங்கள் பொறிக்கும்
சிலேட்டுகள் வாங்கி
ஓதப் போகிறது?

*பாத்திமா ரஸானா, மாவனல்லை*

### பிரார்த்திக்கின்றேன்

ஈச்சம் பட்டைகளில்
மாமறையை பதியுமளவு
பட்டை தீட்டப்பட்ட
உங்களுக்கு
மோட்சம் கிடைக்க
பிரார்த்திக்கின்றேன்
அல்லாஹ்விடம்!

*ஸாதிர் அஹமட், ரஹ்மத்புரம்*

### கொஞ்ச வேண்டிய கரங்கள்

தொட்டுக் கொஞ்ச வேண்டியது
ஹஜருல் அஸ்வத் அல்ல
மாமறையை
சிலேட்டுகளில் பதிக்கும்
உங்கள் பிஞ்சுக் கரங்களை

*பாத்திமா நப்லா, நுரைச்சோலை*

### சிறகொடிந்த பறவை!

சின்னஞ் சிறார்கள் நாம்
சிறகொடிந்த பறவைகளானோம்
வயிற்றுப் பசிக்காய் நித்தமும்
உழைத்திட்ட எம் பிஞ்சுக் கரங்கள்
தழும்புகளை பிரசவிக்கின்றனவே
மற்றைய சிறார்கள் கண்டேன்
தாயணைப்பில் சுகமாய் ஒருவன்
தந்தையின் தோளில்
கதாகலிக்கும் ஒருவன்
நண்பர் குழாம் சேர்ந்தே
வண்ணப் பட்சிகளாய்
மகிழும் காட்சி அங்கே
கண்கள் நீர் துளிர்க்கின்றனவே...
எங்களுக்கு ஏது உறவென...?
கடல் தேவி தத்தெடுத்த
வெள்ளை மணலும்
காற்றிசைத்தால்
கவிபாடும் குழல்களும்...
களைத்த பொழுதுகளில்
சுகமாய் வருடிச் செல்லும்
தென்றலுமே!

*எம்.யூ.எப். ஷுக்ரா, மாத்தறை*

# அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஅத்தின் அகீதா

தொடர் - 16

அஷ்ஷெய்க் எம்.எம். பஸ்லுர் ரஹ்மான் (நளீமி, பி.ஏ)

தொடர் 11 முதல் இஸ்லாமிய நம்பிக்கைக் கோட்பாடு பற்றியும் அதிலிருந்து பிரிந்து சென்ற இஸ்லாமிய அடிப்படை நம்பிக்கைக் கோட்பாடுகளுக்கு முரணான கொள்கையுடைய வழிகெட்ட சில இயக்கங்கள் பற்றியும் பார்த்தோம். இத்தொடரில் அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஅத் என்றால் என்ன? அதன் அகீதா எது? அதைப் பாதுகாக்கத் தோன்றிய இயக்கங்கள் யாவை என்பன பற்றி நோக்குவோம்.

## அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ

'அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ' என்றால் நம்பிக்கை, செயற்பாடு ஆகிய அனைத்திலும் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களதும் ஸஹாபிகளதும் வழிமுறையைப் பின்பற்றிச் செல்லும் சமூகம் என்பது பொருளாகும். இதுபற்றி இமாம் இப்னு தைமிய்யா (ரஹிமஹுல்லாஹ்) இவ்வாறு குறிப்பிடுகின்றார்:

"அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஅத்தின் வழிமுறையானது மிகவும் பழைய வழிமுறையாகும். இவ்வழிமுறை, அல்லாஹ் இமாம்களான அபூ ஹனீபா, மாலிக், ஷாபிஈ, அஹ்மத் ஆகியோரைப் படைக்கும் முன்பே அறிமுகமாகி இருந்தது. இது நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களிடமிருந்து அறிவை நேரடியாகப் பெற்ற ஸஹாபிகளின் வழிமுறையாகும்."

இவ்வழிமுறை சார்ந்தோர் முஸ்லிம்கள் என்றே ஆரம்பம் முதல் பொதுவாக அழைக்கப்பட்டனர். முஸ்லிம்கள் மத்தியில் நம்பிக்கை சார்ந்த பல்வேறு கருத்துச் சிக்கல்கள் ஏற்பட்டபோது சரியான நம்பிக்கையில் செல்வோரை இனங்காட்ட அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ என்ற சொற்பிரயோகம் உபயோகிக்கப்பட்டது.

## வழிகெட்ட இயக்கங்களின் கோட்பாடுகளுக்கு முரணான அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஅத்தின் கோட்பாடுகள்

01. அல்லாஹ்வின் பண்புகளை ஏற்று அவை எப்படியானவை என்று ஆய்வு செய்வதைத் தவிர்த்தல் வேண்டும்.

02. அல்குர்ஆன் அல்லாஹ்வின் வார்த்தை; அது படைக்கப்பட்டதல்ல.

03. எவரும் உலகில் அல்லாஹ்வைக் கண்ணால் காண முடியாது.

04. சுவர்க்கத்தில் விசுவாசிகள் அல்லாஹ்வை நேரில் காண்பர்.

05. மரணத்துக்குப் பின் நடப்பதாக நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறிய அனைத்தும் உண்மையானவை.

06. கழா கத்ர் விடயத்தில் அல்குர்ஆன், ஸுன்னா எப்படிக் கூறியிருக்கின்றதோ அவ்வாறே நேரடிப் பொருளில் நம்புதல்.

07. ஈமான் என்பது சொல்லும் செயலுமாகும். அது கூடும், குறையும்.

08. ஈமான் அடிப்படைகளையும் பகுதிகளையும் கொண்டது. ஒருவரது ஈமான் அதன் அடிப்படையை இழக்காதவரை அவர் முஃமினாகவே கருதப்படுவார்.

09. ஒருவரில் நற்கூலிக்குரியவையும் தண்டனைக்குரியவையும் ஒரே நேரத்தில் ஒன்றுசேர முடியும். ஆனால், தகுந்த ஆதாரமின்றி ஒருவரைத் தண்டனைக்குரியவர் என்றோ நற்கூலிக்குரியவர் என்றோ கூற முடியாது.

10. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களையும் அவர்களது தோழர்கள், குடும்பத்தினர், மனைவிமார் ஆகியோர் அனைவரையும் நேசித்தல் வேண்டும். ஆனால், நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தவிர்ந்த ஏனையோர் "மஃஸூம்கள்" (பாவம் செய்வதில் இருந்து பாதுகாக்கப்பட்டவர்கள்) அல்ல.

11. இறைநேசர்களின் கராமத்துக்கள் உண்மையானவையே.

12. கலிமாச் சொன்னவராயினும் அவர் ஷரீஅத்துக்கு முரணாகச் செல்வாராயின் அவரை எதிர்த்துப் போரிடுதல் வேண்டும்.

13. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களே இறுதி நபியாவார்கள். அவருக்குப் பின் வேறு எவருக்கும் நபிப் பட்டம் வழங்கப்படவில்லை.

14. ஈஸா (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் வானத்திற்கு உயர்த்தப்பட்டார். மறுமை நாளின் அடையாளமாக அவர் மீண்டும் உலகிற்கு வந்து முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களது ஷரீஅத்தை முழு உலகிலும் மேலோங்கச் செய்வார்.

இவ் அடிப்படை நம்பிக்கைகள், அவை தொடர்பான பிழையான கருத்துகள் பரவியபோது சரியானதை தெளிவுபடுத்தும் நோக்கில் இஸ்லாமிய அறிஞர்களால் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டவைகளே அன்றி அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஅத்தினால் புதிதாகக் கூறப்பட்டவைகள் அல்ல.

அகீதாவை முன்வைப்பதிலும் விளக்குவதிலும் அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஅத்தினரிடையே ஸலபி சிந்தனை, ஃகலபி சிந்தனை என இருவேறு வழிமுறைகளைப் பின்பற்றுவோர் காணப்படுகின்றனர். ஸலபி சிந்தனைப் போக்குடையோர் அல்குர்ஆனினதும் ஸுன்னாவினதும் நேரடிப் பொருளிலேயே அனைத்தையும் நோக்குவர். ஃகலபி சிந்தனைப் போக்குடையோர் பகுத்தறிவு ரீதியாகவும் சிந்திப்பர். இவ்விரு பிரிவினரும் சரியான அகீதாவை உடையோராவர். எனவேதான் இமாம் ஹஸனுல் பன்னா (ரஹ்) அவர்கள் “ஸலபிகளின் அகீதா” ‘அஸ்லம்’ (பாதுகாப்பானது); ஃகலபிகளின் அகீதா ‘அஹ்கம்’ (அறிவார்ந்தது) என்றார்.

பகுத்தறிவுவாதிகள் அகீதாவில் குழப்பத்தை ஏற்படுத்தியபோது அகீதாவைப் பாதுகாக்க பகுத்தறிவையும் பயன்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டது. இதுவே ஃகலபி சிந்தனைப் போக்கு உருவாகக் காரணமாகும். பகுத்தறிவு ரீதியாக விளக்கம் சொல்வதில் ‘ஃகலபி’ அறிஞர்களிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டதனால் அஹ்லுஸ் ஸுன்னாக்களிடையே அல்அஷ்அரிய்யா, மாத்துரிதிய்யா, தஹாவிய்யா போன்ற பெயர்களில் அகீதா ரீதியிலான மத்ஹப்கள் (இயக்கங்கள்) தோற்றம் பெற்றன.

### அல்அஷ்அரிய்யா

அல்அஷ்அரிய்யா அமைப்பை ஸ்தாபித்தவர் இமாம் அபுல் ஹஸன் அலி இப்னு இஸ்மாயில் அல்அஷ்அரி ஆவார். இவர் ஹி. 260ல் பஸராவில் பிறந்தார். முஃதஸிலா சிந்தனையுடைய அலி அல் ஜுபாஈ என்பவரிடம் சிறு வயது முதல் அகீதாவைக் கற்றார். இதன் விளைவாக, நீண்ட காலம் முஃதஸிலா சிந்தனையை வளர்ப்பவராகவே இமாம் அபுல் ஹஸன் இருந்து வந்தார். சத்தியத்தைத் தேடுவதிலும் அதைப் பின்பற்றுவதிலும் தீராத வேட்கையுடையவராக இருந்த இவருக்கு மனிதனின் செயல் சுதந்திரம் தொடர்பாக முஃதஸிலாக்கள் முன்வைத்த கருத்து திருப்தியளிக்கவில்லை. இதனால், முஃதஸிலாக் கொள்கைகளையும் அஹ்லுஸ் ஸுன்னா கொள்கைகளையும் ஒப்புநோக்கி ஆய்வு செய்தார். முடிவில் அஹ்லுஸ் ஸுன்னாக்களின் கருத்துக்களே சரியானவை எனத் தெரிந்த பின் ஒரு வெள்ளிக் கிழமை பஸராப் பள்ளிக்குச் சென்று மிம்பரில் ஏறி, தான் முஃதஸிலாக் கொள்கையை விட்டு விட்டு அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஅத்தினருடன் இணைந்து கொள்வதாகவும் தான் இதுவரை கூறிவந்த பிழையான கருத்துக்களுக்காக அல்லாஹ்விடம் மன்னிப்புக் கோருவதாகவும் மக்கள் மத்தியில் அறிவிப்புச் செய்தார்.

அதுமுதல் முஃதஸிலாக்களின் பிழையான கொள்கைகளுக்கு எதிர்வாதம் புரிவதிலும் மக்களுக்கு அகீதாவைத் தெளிவுபடுத்துவதிலும் தன் வாழ்நாளைக் கழித்தார். இமாம் அவர்களது அறிவுப் பணியை ஆய்வு செய்த அறிஞர்கள் அவர் பின்வரும் இரு நோக்குகளை அடிப்படையாகக் கொண்டிருந்ததாக விளக்குகின்றனர்.

01. முஃதஸிலாக்களின் கருத்துக்களை விமர்சித்து சரியான கொள்கையை முன்வைத்தல்.

02. அகீதா சார்ந்த ஏனைய கருத்துக்களையும் ஆய்வு செய்து உறுதிப்படுத்தல்.

### முஃதஸிலாக்களுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட கோட்பாடுகளுள் சில

1. அல்லாஹ்வின் தாத்தும் ஸிபாத்தும் வெவ்வேறானவை.

2. அல்லாஹ்வின் பேச்சு படைக்கப்பட்டதல்ல. ஆகவே, அல்குர்ஆனும் படைக்கப்பட்டதன்று.

3. நல்லடியார்கள் அல்லாஹ்வை மறுமையில் வெற்றுக் கண்ணால் பார்ப்பார்கள்.

4. ஏகத்துவக் கொள்கையை ஏற்றுக் கொண்டோர் முஸ்லிம்கள் ஆவர். அவர்கள் இஸ்லாமிய சட்ட வரம்பை மீறினால் பாவிகளாகக் கருதப்படுவார்களே தவிர, காபிர்களாகக் கருதப்பட மாட்டார்கள். அவர்களது முடிவு அல்லாஹ்வைப் பொறுத்ததாகும்.

5. அல்லாஹ் அர்ஷில் இருக்கிறான். இது உருவகக் கருத்தல்ல.

### மேலும் உறுதிப்படுத்திக் கூறிய அகீதா சார்ந்த இன்னும் சில கோட்பாடுகள்

01. அல்லாஹ்வுக்கு அறிவு, பார்வை, சக்தி போன்ற பண்புகள் உண்டு. அவனே பிரபஞ்சத்தை ‘குன்’ என்ற வார்த்தை மூலம் படைத்தான்.

02. அல்லாஹ்வின் உதவி இன்றி மனிதன் சுயமாகச் செயற்பட முடியாது.

03. முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் உடலுடன் மிஃராஜ் சென்றார்கள்.

04. ஈமான் என்பது உண்மைப்படுத்துவதாகும். அமல் அதைப் பூரணப்படுத்துகின்றது.

05. நன்மை, தீமைகளைத் தீர்மானிப்பதில் பகுத்தறிவை விட ‘வஹி’க்கே முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

இமாம் அஷ்அரி அவர்கள் முதலில் முஃதஸிலாவாக இருந்ததனால் பகுத்தறிவு ரீதியாக தர்க்கிப்பதில் நன்கு பயிற்சி பெற்றிருந்தார். இவர் தனது இத்திறமையை அஹ்லுஸ் ஸுன்னா அகீதாவைப் பாதுகாக்க பிரயோகித்ததினால் முஃதஸிலாக்கள் தலைகுனிந்ததுடன் அஹ்லுஸ் ஸுன்னாக்களிடையே புரட்சிகரமான புது வழிமுறையொன்றும் தோற்றம் பெற்றது. அவ்வழிமுறை இமாம்களான அல்கஸ்ஸாலி, பக்ருத்தீன் அர்ராஸி, அல்பாக்கிலானி ஆகியோரினதும் ஆட்சியாளர்களான ஸுல்தான் அலுதுத் தவ்லா, அல்ப் அர்ஸலான் ஆகியோரினதும் வரவேற்பைப் பெற்றது. அல்அஷ்அரி அகீ

தாவைப் பாடத்திட்டமாகக் கொண்டு நிறுவப்பட்ட நிழாமிய்யாப் பல்கலைக்கழகம் அஷ்அரி இயக்கத்தின் வளர்ச்சியில் பெரிதும் செல்வாக்குச் செலுத்தியுள்ளது.

இமாம் அஷ்அரி, பிக்ஹில் ஷாபி மத்ஹபைப் பின்பற்றியதால் ஷாபி மத்ஹபைச் சார்ந்தோர் பெரும்பாலும் அகீதாவில் அஷ்அரி மத்ஹபைப் பின்பற்றினர். இதன் காரணமாக எகிப்து, சிரியா, ஈராக் போன்ற பிரதேசங்களில் அஷ்அரி கருத்துக்கள் செல்வாக்குச் செலுத்தின. எனவேதான் இலங்கையிலும் ஷாபி மத்ஹபைச் சார்ந்த அஷ்அரிக் கருத்துக்களை ஏற்றோரும் உள்ளனர்.

இமாம் அஷ்அரி அவர்களது சில பகுத்தறிவு ரீதியான விளக்கங்கள் ஸலபிப் போக்குடைய ஹன்பலி மத்ஹபைச் சார்ந்தோரின் விமர்சனத்தைப் பெற்றாலும் அகீதாவைப் பாதுகாப்பதில் இமாம் அவர்களுக்கு மகத்தான பங்குண்டு என்பதை எவராலும் மறுக்க முடியாது. இமாம் அபுல் ஹஸன் அஷ்அரி அவர்கள் ஹி. 337ல் வபாத்தானார்கள். இமாம் இப்னு அஸாகிர் இவர் பற்றி கூறுகையில் வரலாற்றில் தோன்றிய முதல் வைதிகத் தர்க்கவியலாளர் அபுல் ஹஸனே என்கின்றார்.

### 2. அல்மாதுரூதிய்யா

இதன் ஸ்தாபகர் இமாம் அபூ மன்ஸூர் அல்மாதுரூதி என்பவராவார். இவர் இமாம் அஷ்அரியின் சமகாலத்தவர். முஃதஸிலா சிந்தனைக்கெதிராகவே இவரும் செயற்பட்டார். எனினும், அஷ்அரியிடம் காணப்பட்ட தீவிரப் போக்கு இவரிடம் இருக்கவில்லை. எதிர்க்கொள்கையை விமர்சிப்பதிலும் அகீதாவைத் தெளிவுபடுத்துவதிலும் இமாம் மாதுரூதி மிகவும் நிதானமாகச் செயற்பட்டார்.

இமாம் மாதுரூதி மேற்கொண்ட பணிகளில் சிறப்பான ஒன்று, பிழையான அகீதாவை விமர்சிப்பவர்கள் விட்ட தவறுகளையும் குறைகளையும் திருத்தி அவர்களது கருத்துக்களை மேலும் பயனுள்ளதாகச் செய்ததாகும். இவ்வகையில் அஷ்அரியின் கருத்துக்களைக் கூட ஆய்வு செய்து அதில் உள்ள குறைபாடுகளை நீக்கினார்.

அஷ்அரி, மாதுரூதி ஆகிய இரு பிரிவுகளும் முஃதஸிலாக்களை எதிர்ப்பதில் ஒன்றுபட்டாலும் பகுத்தறிவு ரீதியாக சிந்தித்தமையால் அவ்விரண்டுக்குமிடையே சில கருத்து வேறுபாடுகள் தோன்றியமை நியாயமானதாகும். அக்கருத்து வேறுபாடுகள் கொண்ட விடயங்கள் மிகவும் அற்பமானவை என்பது குறிப்பிடத்தக்கது.

### இமாம் மாதுரூதியின் சில கோட்பாடுகள்

- மனித அறிவுக்கு புலனுறுப்புக்கள், செய்திகள், பகுத்தறிவு ஆகிய மூன்று மூலாதாரங்களும் பிரதான அடிப்படைகளாக அமைகின்றன.
- நம்பிக்கைக்கு வஹியே அடிப்படையான இறை வழிகாட்டலாகும். அதனைப் புரிந்து கொள்ளும் தகைமை பகுத்தறிவுக்கு இருக்க முடியும்.
- அல்லாஹ் தூதர்களை அனுப்பினாலும் பகுத்தறிவு மூலம் அல்லாஹ்வின் இருப்பை உறுதிப்படுத்தலாம்.
- அனைத்துக் கடமைகளையும் சமயம் சார்ந்த சட்டங்களையும் பகுத்தறிவு அங்கீகரிப்பதாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை.

இமாம் மாதுரூதி வைதீகத் துறையில் ஒரு தத்துவஞானியாக இருப்பது போலவே சட்டத் துறையிலும் ஒரு மேதையாகத் திகழ்ந்தார்கள். ஹனபி மத்ஹபை வளர்த்த பெருமை இவருக்கும் உண்டு. இவ்வகையில் 'பிக்ஹுல் ஹனபி' மத்ஹபைப் பின்பற்றியோர் பெரும்பாலும் அகீதாவில் மாதுரூதி மத்ஹபையே பின்பற்றுகின்றனர்.

அகீதாவைப் பாதுகாப்பதில் இவ்வாறு மகத்தான சேவையாற்றிய இமாம் அபூ மன்ஸூர் அல்மாதுரூதி ஹி. 332இல் வபாத்தானார்.

### முடிவுரை

அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஅத்தினரிடையே உருவான ஸலபி, ஃகலபி சிந்தனைப் போக்குகளாயினும் சரி, ஃகலபி சிந்தனைப் பிரிவினரிடையே தோன்றிய அஷ்அரி, மாதுரூதி போன்ற இயக்கங்களாயினும் சரி இவற்றிடையே காணப்படும் கருத்து வேறுபாடுகள் எதுவும் பாரதூரமானவை அல்ல. எனவே, ஒருவர் ஸலபியாகவோ, ஃகலபியாகவோ இருப்பதோ அஷ்அரிய்யாகவோ மாதுரூதிய்யாகவோ இருப்பதல்ல முக்கியமானது. மாறாக, அவர் அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஅத்தைச் சார்ந்தவராக இருக்கின்றாரா என்பதுதான் முக்கியமானதாகும்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்: "வேதம் வழங்கப்பட்டோர் தமது மார்க்கத்தில் எழுபத்தி இரண்டு கூட்டத்தினராகப் பிரிந்தனர். இந்த உம்மத்தினர் எழுபத்தி மூன்று கூட்டத்தினராகப் பிரிவர். அதில் ஒன்றைத் தவிர மற்றவை நரகம் நுழைவனவாகும். அது எது எனக் கேட்கப்பட்டதற்கு "நானும் எனது தோழர்களும் இருந்த அதே வழிமுறையில் இருக்கும் கூட்டத்தினராவர்" எனப் பதில் கூறினார்கள். (அத்திர்மிதி)

### மதிப்பீட்டு வினா

01. அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ என்ற பிரயோகத்தை விளக்கி, வரலாற்றில் அச் சொற்பிரயோகம் உபயோகிக்கப்பட்டமைக்கான காரணங்களை ஆராய்க.

02. தூய அகீதாவைப் பாதுகாப்பதில் அஷ்அரி, மாதுரூதி இயக்கங்களின் பங்களிப்பைத் தெளிவுபடுத்துக.

# நிகாப் தடைச் சட்டம்:

# இஸ்லாமிய எழுச்சியின் குறியீடு



ஜெம்ஸித் அஸீஸ்

**அண்மைக்** காலமாக 'புர்கா' (ஹிஜாப்) தடைச் சட்டத்தை உத்தியோகபூர்வமாக அமுல்படுத்துவதற்கு பிரான்ஸ் ஜனாதிபதி நிக்கலஸ் சார்கோஸி கடுமையான முயற்சி எடுத்து வருகிறார். அவரது அதீத பிரயத்தனத்தின் விளைவாக கடந்த ஏப்ரல் 21ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவை ஒன்றுகூடலில் பொது இடங்களில் புர்கா அல்லது நிகாப் அணிவதை தடுப்பதற்கு ஒரு சட்டவரைவு கொண்டுவரப்பட வேண்டும் என்று கலந்துரையாடப்பட்டது.

இதனைத் தொடர்ந்து கருத்துத் தெரிவித்த பிரான்ஸ் பிரதமர் பிரன்சுவா பியோன், இத்தகைய சட்டம் அரசியலமைப்புக்கு எதிரானது; ஐயோப்பிய மனித உரிமை உடன்படிக்கைக்கு மாற்றமானது என்ற காரணங்களால் நிராகரிக்கப்படும் வாய்ப்பு இருந்தாலும் நாம் இச்சட்டத்தை இம்முறை அமுல்படுத்தியே தீருவோம். சட்டபூர்வ இடையூறுகளை எதிர்கொள்ள நாங்கள் தயாராகவே இருக்கிறோம் எனத் தெரிவித்துள்ளார்.

கடந்த மார்ச் 30ஆம் திகதி 'பிரான்ஸில் புர்கா அணிவதற்கு தடைவிதிக்க வேண்டும்' என்ற மனுவை விசாரித்த பிரான்ஸின் மிக உயர்ந்த நிர்வாக நீதிமன்றமான State Council, அதற்கு எதிராகத் தீர்ப்பளித்ததைத் தொடர்ந்து வெகுண்டெழுந்த பிரான்ஸ் ஜனாதிபதியும் பிரதமரும் இச்சட்டத்தைக் அமுல்படுத்துவோம் என ஒற்றைக் காலில் நிற்கின்றனர்.

பிரான்ஸில் நிகாப் தடை செய்யப்பட வேண்டும் என வலியுறுத்தப்படுவது ஒரு பாதுகாப்பு நடவடிக்கை என்றே எதிர்ப்பாளர்கள் சொல்கின்றனர். மட்டுமன்றி, பயங்கரவாதத்துக்கெதிரான போரின் ஒரு சிறு பகுதியே இது எனவும் வர்ணிக்கின்றனர்.


மறுபக்கம் பிரான்ஸ் மக்கள் நிகாப் தடைச் சட்டத்துக்கு எதிராக குரல் கொடுக்கத் துவங்கியுள்ளனர். அண்மைய கருத்துக்கணிப்பீடு ஒன்றின் படி, பிரான்ஸில் 70% ஆன மக்கள் நிக்கலஸ் சார்கோஸியின் தலைமையை வெறுப்பதாகவும் 60% ஆனோர் அவரது கொள்கையை எதிர்ப்பதாகவும் அறிய முடிகிறது.

மற்றும் ஆப்கானில் நிறுத்தப்பட்டுள்ள நேட்டோ படையினரில் 3000 படையினர் பிரான்ஸைச் சேர்ந்தவர்களாவர். இப்படையினரை வாபஸ் பெறுமாறு வேண்டி பிரான்ஸ் மக்கள் ஆர்ப்பாட்டங்களை நடத்தியதும் குறிப்பிடத்தக்கது.

பிரான்ஸ் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சரவை உள்ளிட்ட உயர் அதிகாரிகள் நிகாப் தடைச்சட்டத்தின் நோக்கம் தமது நாட்டின் பாதுகாப்பை, உறுதிப்படுத்துவதே எனச் சொல்கின்றமை அப்பட்டமான பொய். மேற்கு, ஐரோப்பிய உலகில் எழுச்சி பெற்று வரும் இஸ்லாமிய ஒளியை அணைத்துவிடவே அவர்கள் முயற்சி செய்கின்றனர். நாளுக்கு நாள் பிரான்ஸ் நாட்டவர்கள் இஸ்லாத்தின் சத்தியக் கொள்கையை விளங்கி அதன்பால் வீறுநடைபோடுவதை அவர்களால் சகிக்க முடியாதிருக்கிறது. எப்படியோ இஸ்லாத்தின் மீதான காழ்ப்புணர்வை வெளிப்படுத்த வேண்டும் என்பதற்காக நிகாப் விடயத்தை தூக்கிப்பிடிக்கின்றனர்.

'நாளைய சக்தி இஸ்லாம்தான்' என்பதற்கான ஒரு சமிக்ஞையாக, குறிகாட்டியாக இதனையும் கொள்ள முடியும். சிலவேளை பிரான்ஸில் நிகாப் தடைச்சட்டம் கொண்டுவரப்பட்டு அமுல்படுத்தப்பட்டாலும் ஐரோப்பாவில் வேகமாக வீசிவரும் இஸ்லாமிய எழுச்சிக்காற்றை அவர்களால் தடுத்து நிறுத்த முடியாது என்ற சுபசோபனத்தை மாத்திரம் உறுதியாகச் சொல்ல முடியும்.

# பஹ்ரைன் இஜ்திமா:



# பாலைவனத்தில் ஒரு வசந்த நாள்

அலபடகம பின்த் அப்துல் ஹமீத்

**அன்று** 16.04.2010 வெள்ளிக்கிழமை. பஹ்ரைன் வாழ் இலங்கை முஸ்லிம் சகோதர, சகோதரிகளுக்கு பொன்னாள். கிட்டத்தட்ட அது அவர்களுக்கு பெருநாள் போன்று. அன்றுதான் பஹ்ரைனில் உள்ள தாருல் ஈமான் இலங்கைக் கிளை ஓர் இஜ்திமாவை ஏற்பாடு செய்திருந்தது.

மாநாட்டு மண்டபம் களைகட்டியிருந்தது. ஆண்களுக்கும் பெண்களுக்கும் பிரத்தியேக ஏற்பாடு, சிறார்களுக்கும் விஷேட ஏற்பாடு என எல்லோருமாக காலை 10 மணிக்கெல்லாம் வந்து குழுமத் தொடங்கினர். மாநாட்டு மண்டபத்தில் திரும்பும் திசையெல்லாம் 'துன்பத்திலிருந்து விடுதலை பெற' என்ற இஜ்திமாவின் மையக்கருவை பிரதிபலிக்கும் அல்குர்ஆன், அல்ஹதீஸ் வாசகங்கள் அலங்கரித்தன.

பஹ்ரைன் வாழ் ஈழத்து முஸ்லிம்கள் தெரிந்தவர்களும் தெரியாதவர்களும் சாரி சாரியாக வந்து சேர்ந்தனர். ஊழியர்கள் வந்தோரை கைகுலுக்கி அழகிய ஸலாத்துடன் வரவேற்று மண்டபத்துக்குள் அமர வைத்துக் கொண்டிருந்தனர்.

இது என் வீட்டில் நடக்கும் வைபவம்; அதற்காக நான் முழு மூச்சாய் ஈடுபட வேண்டும் என்ற உணர்வுடன் உஸ்ராக்கள் தமக்குரிய வேலைகளில் முனைப்புடன் ஈடுபட்டுக் கொண்டிருந்தன.

ஆம், பஹ்ரைன் தாருல் ஈமான் இலங்கைக் கிளையின் வரலாற்றின் இது ஒரு மைல்கல். இந்த கன்னி முயற்சிக்கு அல்லாஹ்விடமிருந்து நிச்சயம் உதவி கிடைத்திருக்க வேண்டும். மாநாடு பற்றிய செய்தியைச் சொல்வதற்காக ஓர் இலங்கைச் சகோதரன் கிடைக்க மாட்டானா? என்ற ஆதங்கத்துடன் பஹ்ரைனின் மூலை முடுக்குகளெங்கும் எமது ஊழியர்களின் கால்கள் நடந்து நடந்து தேடின.

சூப்பர் மார்க்கட்டுக்கள், மெகா கம்பனிகள், பள்ளிவாசல்கள், இந்தியா- பாகிஸ்தான்- பங்களாதேசத்து சகோதரர்கள் வாழுமிடங்கள், வாகனம் கழுவுமிடங்கள், வீதியோர பழக்கடைகள், பஸ் வண்டிகள், டக்ஸி தரிப்பிடங்கள்... என அலைந்து இலங்கையரைத் தேடினர் எமது ஊழியர்கள். யாரேனும் இலங்கையரைக் கண்ணுற்றால் அவசரமாக அணுகி கதைத்து செய்தி எத்திவைக்கப்பட்டது. எமது சகோதரர்களின் இம் முயற்சியையும் ஆர்வத்தையும் கண்டு வேறு நாட்டுச் சகோதரர்கள் தமக்குத் தெரிந்த இலங்கைச் சகோதரர்களுடன்

தொடர்பை ஏற்படுத்தித் தந்தனர்.

இங்கு தொழில் புரியும் எம்மவர்களின் வேலை நேரம் வேறுபட்டது. அவரவர்களின் வேலை நேராங்களுக் கேற்ப எமது ஊழியர்கள் நடுநிசி ஒரு மணிக்குப் பின் னரும் சந்திப்புக்களை ஏற்படுத்தி கலந்துரையாடல்களை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இஜ்திமாவுக்கான வேலைகள் தொண்டர்களுக்கி டையே பகிர்ந்தளிக்கப்பட்டன. ஊழியச் சகோதரர்க ளும் சகோதரிகளும் ஆர்வத்தோடு முன்வந்து தத்தம் குழுவுக்குரிய வேலைகளைப் பொறுப்பேற்றுச் செய்தனர். அல்லாஹ்வின் அருளால் அங்குள்ள இலங் கையர் அன்றைய ஒரேயொரு விடுமுறை தினத்தை வீட்டிலோ பீச்சிலோ கழிக்காமல் இஜ்திமாவுக்கு வருகை தந்தமை அவர்களின் முயற்சிக்கு கிடைத்த கூலிதான்.

வெள்ளிக்கிழமை ஜுமுஆத் தொழுகையுடன் இஜ்திமா ஆரம்பமாகியது. இஜ்திமாவின் விஷேட உரையாளரான அஷ்ஷெய்க் ஏ.ஸி. அகார் முஹம்மத் (நளீமி) அவர்களின் குத்பா பிரசங்கம் எமது உள்ளங் களை அப்படியே கட்டிப் போட்டது. எமது தாயகமான சுவனம் எமது கண்முன் நிழலாடியது. எம் இலங்கைச் சகோதரர்களுக்கு தமிழில் ஒரு குத்பா பிரசங்கம் கேட்கக் கிடைத்தமை ஒரு வரப்பிரசாதமே. இப்பிரசங்கம் எல் லோரையும் இலக்கு நோக்கிய பயணத்துக்கு புத்தூக் கமளித்தது.

நிகழ்வின் காஇதாக சகோதரர் எஸ்.ஏ.ஸீ. மரிக்கார் அவர்கள் செயற்பட்டார். காஇதின் வரவேற்புரையைத் தொடர்ந்து, ஒரு ஸஹாபியின் வாழ்வை எம் வாழ்வோடு உரசிப் பார்க்கும் நோக்கில் இறை தீனின் உயிர் வேர் களுள் ஒரு வேரான முஸ்அப் இப்னு உமைர் (ரழியல் லாஹு அன்ஹு) அவர்களின் வாழ்வு பற்றி அஷ்ஷெய்க் ஏ.ஏ. கியாஸ் முஹம்மத் (நளீமி) அவர்கள் மிக அற்புத மாக தெளிவுபடுத்தினார். அனைவரது கண்களையும் குளமாக்கியது அவரது உரை!

மதிய போசண இடைவேளைக்குப் பிறகு அஸர் தொழுகையுடன் இரண்டாம் கட்ட நிகழ்ச்சிகளை காஇத் வழிநடத்தினார். தொடர்ந்து உஸ்தாத் அகார் முஹம்மத் அவர்கள் இஜ்திமாவின் கருப்பொருளான 'துன்பத்தில் இருந்து விடுதலை பெற' என்பதன் முதற்கட்ட உரையை நிகழ்த்தினார்கள்.

தம் தலைமேல் பல பிரச்சினைகளைச் சுமந்து கொண்டு அத்துன்பத்திலிருந்து விடுதலை பெற பொரு ளாதாரமே வழி என்றெண்ணி தாய்நாட்டைத் துறந்து வருடக் கணக்கில் இங்கு உழைத்துக் களைத்துக் கொண் டிருக்கும் உள்ளங்களை இவ்வுரை நிச்சயம் தொட்டி ருக்கும்.

இஜ்திமாவுக்காக குவைத் இஸ்லாமிய நிலையத்திலி ருந்து விஷேடமாக வருகை தந்த அஷ்ஷெய்க் என்.எம். ஹுஸைன் (இஸ்லாஹி) அவர்கள் 'துன்பத்திலிருந்து விடுதலை பெற இகாமதுத் தீனுக்காய் உழைப்போம்' என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார். தொடர்ந்து எஸ்.ஏ. அஷ்ஷெய்க் அஸாஹிம் (நளீமி) அவர்களால் 'தாருல் ஈமான் இலங்கைக் கிளையின் அறிமுகமும் அதன் வேலைத் திட்டங்களும் கொள்கைகளும்' என்ற தலைப்பில் விளக்கமளிக்கப்பட்டது.

மஃரிப் தொழுகையைத் தொடர்ந்து இஜ்திமாவில் கலந்து கொண்டவர்களை விளித்து ஜமாஅத்தின் அமீர் உஸ்தாத் ஹஜ்ஜுல் அக்பர் அவர்களின் செய்தி ஒலி, ஒளிபரப்பப்பட்டது. அதன்போது 'அல்லாஹ்வின் தீன் எமக்குக் கிடைத்திருப்பது மிகப் பெரும் பாக்கியம்: அருள். அதற்காக உழைப்பதில் இன்பமடைவோம். வெற்றி அதில்தான் இருக்கிறது' எனும் செய்தியை அமீர் அவர்கள் அவ்வுரையினூடாக எத்தி வைத்தார்கள்.

அடுத்து தனிமனித, குடும்ப உருவாக்கத்தில் முக்கிய பங்கு வகிக்கும் முஅய்யித் பாடநெறி பற்றிய அறிமுக நிகழ்ச்சியை அஷ்ஷெய்க் கியாஸ் முஹம்மத் (நளீமி) அவர்கள் நடத்தினார்கள். தொடர்ந்து இஜ்திமாவின் செய்தி அடங்கிய இறுவட்டு (CD), முஅய்யித் விண்ணப் பப் படிவம் ஆகியன விநியோகிக்கப்பட்டன.

முத்தாய்ப்பாக உஸ்தாத் அகார் முஹம்மத் அவர்கள் கருப்பொருள் உரையின் இரண்டாம் பாகத்தை காத்திர மான வழிகாட்டலுடன் சபையோருக்கு வழங்கத் தொடங்கினார். மண்டபமே நிசப்தமாகி உரையைக் கேட்கத் தொடங்கிய விதம் ஆச்சரியமாக இருந்தது. துன்பத்தில் இருந்து விடுதலை பெற்று வெற்றியை நோக்கிச் சென்று இன்பமடையக் கூடிய வழிகளை ஒவ் வொன்றாக நடைமுறை உதாரணங்களுடன் விளக்கிய விதம் அனைவரையும் ஈர்த்தது.

செயல்படத் தூண்டும் வழிகாட்டல்கள் உள்ளங்களில் ஆழமாய்ப் பதிந்தன. மனிதனாக வாழவேண்டியதன் முக்கியத்துவம், எங்கே செல்ல வேண்டும்? என்ன செய்ய வேண்டும், எமக்கான வழிகாட்டல் எங்கே இருக்கின்றன, நிம்மதி தேடி நாம் எங்கே ஓடிக் கொண்டிருக்கிறோம்? முதலான கேள்விகளை எழுப்பி, இலக்கற்ற, நோக்கமில் லாத ஒரு மனிதனின் வாழ்வு எப்படி 'ஸகீனத்' நிரம்பிய தாய் இருக்கும். பணமே கதியல்ல, ஆன்மிகப் பாதைக்குத் திரும்புவதே வழி என அதன் வழிவகைகளை பட்டியல் படுத்தி அற்புதமாக தெளிவுபடுத்தினார்.

இவ்வுரை அதிகமானோர் தம் மனக் காயங்களுக்கு மருந்திடவும் வெறுமையை உணர்ந்த உள்ளங்களுக்கு இலட்சிய தாகம் ஏற்படவும் ஆன்மாவின் பெறுமதியை உணர வைக்கவும் நிச்சயம் வழி செய்திருக்கும். அல்ஹம்து லில்லாஹ்.

இறுதியாக, பஹ்ரைன் தாருல் ஈமான் நாஸிம் சகோத ரர் நஸ்மி அவர்களின் நன்றியுடனும் 'பாரினில் தீன் ஓங்க ஒன்றிணைந்து பாடுபடுவோம்' என்ற காஇதின் உருக் கமான வேண்டுகோளுடனும் மாநாடு இனிதே நிறைவு பெற்றது, அல்ஹம்து லில்லாஹ்.

யாஅல்லாஹ்! உனக்காகவே உழைத்தோம்; ஒன்று கூடினோம். உன் உதவிகளைக் கண்டு கொண்டோம்; உனக்கே புகழனைத்தும். எங்கள் பிழைகளைப் பொறுத்து எமது இச்சிறு பணியை ஏற்றுக் கொள்வாயாக!

# தாய்மார்களே எச்சரிக்கை!

# இஸ்லாமிய வேடத்தில் மோசடிக்காரன்!

டாக்டர் மரீனா தாஹா ரிபாய்

சென்ற பெப்ரவரி 20ஆம் திகதி, எழுத்துப் பிழைகளுடனான ஆங்கில E-mail ஒன்று எனக்கு வந்தது. "நான் சஊதி அரேபியாவிலிருந்து வந்திருக்கிறேன். உங்களுக்கு பணம் தர விரும்புகின்றேன். தயவுசெய்து உங்கள் தொலைபேசி எண்ணைத் தரவும்."

அல்முஸ்லிமாத்துக்கு சிலர் தமது ஸதக்கா, ஸக்காத் இவற்றை அனுப்புவது வழக்கம். எனவே நானும் எனது தொலைபேசி எண்ணை அனுப்பி வைத்தேன்.

இரண்டு நாட்களில் எனக்கொரு தொலைபேசி அழைப்பு வந்தது. தான் இப்லார் பேசுவதாகவும் எமது நிறுவனத்துக்கு 225 கோடி (!!!!) பணம் ஒருவர் அனுப்பியுள்ளதாகவும் அவர் தன் பெயரைக் குறிப்பிட விரும்பவில்லை எனவும் தான் இரண்டொரு நாட்களில் இப்பணத்தைக் கொண்டு வந்து தருவதாகவும் குறிப்பிட்டார்.

என்னால் நம்ப முடியவில்லை. இரண்டு ரக்அத் சுன்னத் தொழுது அல்லாஹ்வுக்கு நன்றி சொல்லிவிட்டு, எனது வேலைகளைப் பார்த்தேன். அடுத்த நாளும் அழைப்பு வந்தது. அல்முஸ்லிமாத் என்னென்ன விடயங்களைச் செய்கின்றது என விவரமாகக் கேட்டார். விவரம் கொடுத்துவிட்டு, "இதுவெல்லாம் தெரியாமலா நீங்கள் இவ்வளவு பணம் கொண்டு வந்தீர்கள்?" என்று கேட்டேன்.

"ஆம், நான் வெறுமனே அந்தக் கம்பனியில் வேலை செய்யும் ஒரு தொழிலாளி. அவர்கள் உங்கள் விடயங்கள் பற்றி அறிந்திருப்பார்கள் போலும்" என்று கூறிவிட்டு "நீங்கள் இவ்வாறெல்லாம் செய்கிறீர்கள் என்று எனக்கே தெரியாது. இதன் பிறகு நாங்கள் யார் மூலமாகவும் ஸதக்கா செய்யத் தேவையில்லை. உங்களுக்கே வருடா வருடம் எல்லாப் பணத்தையும் அனுப்பி வைப்போம்'' என்று மேலும் பேசிக் கொண்டே போனார்.

**"அவர்கள் அல்லாஹ்வையும் ஈமான் கொண்டவர்களையும் ஏமாற்றுகிறார்கள். (உண்மையில்) அவர்கள் தங்களைத் தாமே தவிர (வேறெவரையும்) ஏமாற்றவில்லை; (இனி) அவர்கள் உணர்ந்து கொள்ளவும் மாட்டார்கள்." (2:9)**

அவரது இந்த பேச்சில் இரண்டு விடயங்கள் எப்போதும் இருக்கும். ஒன்று அல்லாஹ்வின் பெயர்; வசனத்துக்கொரு முறை அல்லாஹ், ரஸூலுல்லாஹ் என்று கூறிக் கொண்டே இருப்பார். மற்றது பேசுபவரைப் பற்றிய புகழ்ச்சி. "நீங்கள் இவ்வளவு செய்கின்றீர்கள், பொய் புரட்டு இல்லாமல் செய்கிறீர்கள், அவ்வளவு செய்கிறீர்கள்'' என்று நாசூக்காக புகழ்ந்து கொண்டே இருப்பார்.

இரண்டு நாட்களில் வருவதாகக் கூறியவர், இரண்டு நாட்களின் பின், ''நான் அநுராதபுரத்தில் இருக்கிறேன். மேலும் பலருக்கு என்னிடம் காசு அனுப்பியிருக்கிறார்கள் அவர்களுக்கும் கொடுத்துக் கொண்டு வருகிறேன். ஒரு கிழமை பொறுத்துக் கொள்ளுங்கள்" என்றார்.

சில சமயங்களில் சிலர் பணம் அனுப்புவதாகச் சொல்வார்கள். கடைசி நிமிடத்தில் ஏதாவது பிரச்சினை ஏற்பட்டு விடும். இப்படி ஓரிரு சமயங்களில் முன்பு நடந்திருப்பதாலும் இது நாம் கனவிலும் எதிர்பாராத ஒரு மிகப் பெரிய தொகை என்பதாலும் அல்முஸ்லிமாத்தின் முக்கியமான செயற்குழு உறுப்பினர்கள் இருவரைத் தவிர வேறு யாரிடமும் நான் இது பற்றிக் கூறவில்லை.

அடுத்து ஒவ்வொரு நாளும் தொலைபேசியில் ஏதாவது ஒரு சாக்குப்போக்கு வந்து கொண்டே இருந்தது. ஒரு கிழமை கழிந்து தான் கண்டியில் இருப்பதாகவும் விரைவில் கொழும்புக்கு வந்து 85 கோடியையும் தந்துவிடுவதாகவும் கூறினார். "85 கோடியா? 225 கோடி என்றல்லவா கூறினீர்கள்?" என்று கேட்க, "இல்லை அநேகமானோர் வந்து வந்து தமது பிரச்சினைகளைக் கூறினார்கள். கொடுக்க நேர்ந்து விட்டது. கவலைப்படாதீர்கள், உங்களுக்கு தொடர்ந்து பணம் வந்து கொண்டிருக்கும்'' என்றார்.

அதன் பிறகுதான் மனதில் ஒரு சிறிய சந்தேகம் தோன்றியது. ஒரு குறிப்பிட்ட அமைப்புக்கு 225 என்ன 1 கோடிதான் அனுப்பினாலும், ஆங்கிலம் தெரியாத, பெரியதொரு பொறுப்பிலில்லாத ஒருவரிடம் கொடுத்தனுப்புவார்களா? அதையும் அவர் இப்படி கேட்பவர்களுக்கெல்லாம் கொடுக்க முடியுமா?

இருந்தாலும், தன்னை ஒரு பெரிய தௌஹீத்வாதி எனவும் தௌஹீத்வாதிகளுக்கு மட்டுமே உதவி செய்வதாகவும்; ஆனால் குறித்த ஒரு நிறுவனத்துக்கு மட்டும் ஒரு நாளும் ஒரு சதமும் கொடுக்க மாட்டார்கள் எனவும் கூறிக் கொண்டே போன இவர், பொய் சொல்கிறாரா என்று தோன்றினாலும், அடிக்கடி அல்லாஹ்வின் பெயரையும் "அல்லாஹ் நம்மை எப்போதும் பார்த்துக் கொண்டிருக்கிறான்.

நீங்கள் கூறுவதெல்லாம் உண்மையா என்று எனக்குத் தெரியாது. ஆனால் அல்லாஹ்வுக்குத் தெரியும். இது பற்றி நீங்கள் அல்லாஹ்வை மிகவும் அஞ்சிக் கொள்ளுங்கள். இது ஸகாத் காசல்ல. ஆகவே நாங்கள் எப்படி வேண்டுமானாலும் செலவழிக்க லாம்- தேவைப்பட்டவர்களுக்கு தேவைப்பட்ட விடயங்களுக்குக் கொடுத்தால் சரி. நீங்கள் போட்டோ, ரிப்போர்ட் எதுவும் தரத் தேவை யில்லை. அவர்கள் உங்கள் மீது நூறு வீத நம்பிக்கை வைத்திருக்கிறார்கள்'' என்றெல்லாம் கூறியதை வைத்து இப்படிப் பேசுபவர், அடிக்கொரு தரம் அல்லாஹ்வை நினைவுபடுத்து கிறவர் பொய் சொல்வாரா என்ற கேள்வியும் எழுந்தது.

தௌஹீத் அமைப்பினர் ஒருவ ருக்கொருவர் அநேகமாக உதவி செய்கின்றவர்கள். ஒரு வாரத்திற்குள் 140 கோடி கொடுக்கப்பட்டிருந்தால் எப்படியும் அந்தச் செய்தி பரவியிருக் கும். பல அமைப்புக்களை விசாரித்துப் பார்த்தேன். அப்படி ஒரு விடயம் நடந்ததாகத் தெரியவில்லை. எனி னும், ஒருவர் பணம் தருவதாகச் சொன்னால் தரட்டுமே; என்ன நட்டம்? என்று வாளாவிருந்தோம்.

பெப்ரவரி 26ஆம் திகதி இன்னு மொரு E-mail வந்தது. உடைந்த ஆங்கிலத்தில், அனேக எழுத்துப் பிழைகளுடன். தனது கம்பனியில் 20 பேருக்கு வேலைவாய்ப்பு இருப்பதா கவும் அவர்கள் ஒரு சதமேனும் செல வழிக்க வேண்டியதில்லை. எல்லாச் செலவுகளுடனும் நல்ல சம்பளத்துக்கு வேலை கொடுக்கப்படும் என்றிருந் தது. அந்தத் தகவலை எனக்கு மட் டுமே அறிவித்திருப்பதாகவும் அப்ப டிப் போக விருப்பமானவர்களின் பெயர்களை அனுப்பி வைக்குமா றும் அவர் கேட்டிருந்தார்.

எனது ஒன்றுவிட்ட சகோதரர் ஒருவர் வெளியூருக்கு ஆண்களை அனுப்பும் ஏஜன்ஸி ஒன்று வைத்தி ருக்கிறார். அவரிடம் இதுபற்றி கூறி யபோது அவரும் குறித்த நபருடன் கதைத்து விட்டு "சும்மாதானே அனுப் புவதாகக் கூறுகிறார். நீங்கள் தெரிந்த வர்கள் இருந்தால் அனுப்புங்கள்'' என்று கூறிவிட்டார்.

இந்த விடயங்கள் எனக்கு அவ்வ ளவு பழக்கமில்லாததால் எனக்குத் தெரிந்த ஒருவரிடம் இதைக் கூறி, இவரது டெலிபோன் நம்பரையும் கொடுத்து விட்டு நான் இருந்து விட்டேன்.

இதற்கிடையில் எங்களது அல் அஸாபீர் பாடசாலைக்கு 10 கம்பி யூட்டர் அனுப்பப் போவதாகக் கூறி பம்பலப்பிட்டியிலுள்ள ஒரு கம்பனி யில் ஆர்டர் கொடுத்திருப்பதாகவும் கூறினார். அங்கு விசாரித்ததில் "ஆம் அப்படி ஒரு ஆர்டர் வந்திருக்கிறது. உங்களுக்கு விருப்பமான எல்லா extra parts உடன் கம்பியூட்டர் தயாரிக்கும்படி கூறியிருக்கின்றார் கள்'' என்று அவர்கள் கூற என்னிட மிருந்த கொஞ்ச நஞ்ச சந்தேகமும் பறந்து விட்டது.

அத்துடன் பேருவளையில் பாதிக் கப்பட்டவர்களுக்கு பணம் கொண்டு வந்திருப்பதாகவும் அவர்களுடன் தனக்குத் தொடர்பு ஏற்படுத்தித் தரும் படி கேட்க, அவர்களின் தொலை பேசி எண்களை நான் கொடுத்தேன். அவர்களுடைய முழுச் செலவையும் தன் கம்பனி பாரமெடுத்துக் கொள் வதாகவும் தற்போது வைத்தியத்துக் காக இந்தியாவுக்குச் சென்றுள்ள அவர்களின் செலவுகள் யாவற்றை யும் அங்கேயே அனுப்பி வைப்பதாக வும் கூறினார். இதுவும் எமது நம் பிக்கையை வளர்த்தது. இந்தியாவுக்கு போன் செய்து அவர்களுடன் நேரடி யாகக் கதைத்து அவர்களுக்கு ஆறுதல் கூறிய காரணத்தால் இத்தனை டெலிபோன் அழைப்புகளுக்கும் செலவழிக்கின்ற மனிதர் ஏன் பொய் சொல்லப் போகிறார் என்று தோன் றியது.

இப்படியே இன்னுமொரு வாரம் கழிந்தது. இவர் வருவதாக இல்லை. "இன்னும் வேலையிருக்கிறது; மாத் தளைக்குப் போக வேண்டும்'' என்று பிற்போட்டுக் கொண்டே வந்தார். சரி வருகிற நேரம் வரட்டும் என்று இருந்தோம்.

ஒரு வாரத்துக்குள் 20 பேர் வெளி நாட்டுக்குப் போவதற்கு பெயர், பாஸ்போட் விவரம் இவற்றை நான் அறிவித்தவர்கள் அனுப்பியிருந்தார் கள். அதன் பிறகு ஒரு நாள் ஒரு கோல் எடுத்து, "எல்லாம் ரெடி. ஒரு பிரச்சி னைதான். சென்ற முறை இப்படி நாங்கள் எல்லாம் ரெடி பண்ணிய பிறகு 2 பேர் வர முடியாது என்று சொல்லி விட்டார்கள். எனவே இவர் களுக்கு ஆளுக்கு ரூபா 14,500 ஐ எங் களது வங்கியில் வைப்பிலடச் சொல் வோம். அவர்கள் விமானம் ஏறியவு டன் இப்பணத்தைத் திருப்பிக் கொடுத்து விடுவோம்'' என்றார்.

அப்போதுதான் எங்களுக்கு சந் தேகம் வந்தது. ஏனென்றால் பணத்தை வைப்பிலிடச் சொன்ன வங்கி விபரம் இவரது சொந்தப் பெயரில் இருந்தது. இதுவரை வெளியூர் செல்ல ஆயத்த மானவர்கள் இப்போது விவரம் கேட் கத் தொடங்கினார்கள். அவனது பதில்: Supply Bording Group- Jeddah Branch, Madeena Road, Bridge of Surey (near to Sawadi, also infront of Saudi Holand Bank (??) என்பதாக இருந்தது.

இப்படி ஒரு கம்பனியே இருக்க முடியாது என்பதை யாராலும் எளி தாகக் கண்டுகொள்ளலாம். 225 மில் லியன் ஸதக்கா கொடுக்கும் கம்பனி, இப்படி முகவரி, விவரம் இல்லாமல் வங்கிக்கு முன்னால், பாலத்தில் உள் ளது என்று முகவரி கொடுக்குமா?

இவன் பொய்யன் என்பது எங்க ளுக்கு விளங்கி விட்டது. ஆயினும், சரி எவ்வளவு தூரம் போகின்றான் என்று பார்க்க, "இவர்கள் யாரும் காசு கட்டப் பயப்படுகின்றார்கள். பரவா யில்லை நாங்கள் உங்களை நம்புகி றோம். நீங்கள் நேரில் வந்து எடுத்துக் கொள்வதாக இருந்தால் அல்முஸ்லி மாத் உங்களுக்கு இந்தப் பணத்தைத் தரும்'' என்று கூற தற்போது கண்டி யில் பெரிய வேலையில் இருப்பதா கவும் 24 மணித்தியாலத்தில் காசைப் போடாவிட்டால் அவர்களுக்கு அந்த சந்தர்ப்பம் இல்லாமல் போய் விடும் என்றும் கூறினான். நாங்கள் ஒருவரை நேரடியாக கண்டிக்கே அனுப்பி வைக்கிறோம் என்று சொல்ல அது சாத்தியப்படாது என்று சாக்குப் போக்கு சொன்னான்.

எனக்குத் தெரியாமல் இரண்டு பேர் மட்டும் அவசரப்பட்டு பணத்தை

கட்டியிருக்கிறார்கள். வைப்புச் செய்த அன்று மாலையே அப் பணத்தை எடுத்திருக்கிறான். பிறகு ஒரு குறிப்பிட்ட ஏஜென்ஸிக்குப் போகுமாறு அவர்களுக்கு அவன் கூற, அங்கு போய்க் கேட்டால் அப் படி ஒரு விடயமே இல்லை என்று கூறப்பட்டிருக்கிறது.

இதன் பிறகும் இவன் என்னுடன் பேசி இந்தப் பணத்தைத் தர குறிப் பிட்ட ஒரு நாளில் வருவதாகக் கூறி னான். நானும் சந்தேகப்படுவதை உணர்த்தாமல் வருமாறு சொன்னேன். அதன்படி அவன் வருவதாகக் கூறிய நேரத்திலிருந்து அதுவரை பேசிக் கொண்டிருந்த தொலைபேசி எண் துண்டிக்கப்பட்டு விட்டது.

இவ்விடயம் பற்றி நாலைந்து பேருடன் பேசிப் பார்த்ததில் இந்த ஏமாற்றுக்காரன் குறைந்தது கடந்த இரண்டு வருடங்களாக, இவ்வாறு பல தாஇகளை ஏமாற்றி வந்த விட யம் தெரிய வந்தது. அவற்றுள் பின் வரும் விடயங்கள் உறுதிப்படுத்தப் பட்டன.

1. சுனாமியின் பெயரில் கோடிக் கணக்கான பணம் வருவதாகக் கூறி அவசரத் தேவைக்கு ரூபா 10,000.
2. 70 பேருக்கு வேலைவாய்ப்பு தரு வதாகக் கூறி சுமார் 2 1/2 இலட்சம்
3. விதவைகளுக்கு உதவி செய்ய இருப்பதாகக் கூறி 35 விதவைகளி டம் தலா ரூபா 1500 கேட்டிருக் கிறான். 8 விதவைகள் கட்டியி ருக்கிறார்கள்.
4. சிறுநீரக மாற்று சிகிச்சைக்காக 1.9 கோடி தருவதாகக் கூறி ஏமாற்றி யிருக்கிறான். இப்படியாக ஏறக்கு றைய ஒரு கோடி ரூபா பணம் எமக்குத் தெரிய பறித்திருக்கி றான். இன்னும் எத்தனையோ?

எனக்குத் தெரிந்த பல மௌலவி மார்கள் ஏஜென்ஸி செய்யப் போய் பெரிய நட்டம் அடைந்ததாகக் கேள்விப்பட்டிருக்கின்றேன். அவர்க ளும் இவனால் ஏமாற்றப்பட்டவர் களோ தெரியாது!

எங்களுக்கு முன் இவனிடம் ஏமாந் தவர்களிடம், "ஏன் இதுபற்றி நீங்கள் ஒருவரிடமும் சொல்லவில்லை?" என்று கேட்டால், "ஒருபுறம் ஏமாந்து விட்டோம் என்ற வெட்கமும் மறு புறம் என்ன செய்து விடலாம்? என்ற இயலாமையும்தான் காரணம்" என் றார்கள்.

இவன் இந்த மனப்பாங்கை அறிந்து நன்றாகவே செயற்படுகின்றான். ஆனாலும் இவன் ஒரு கெட்டிக்கார னல்ல. தான் சொன்ன பொய்கள் அவனுக்கே மறந்து விடுகின்றது. ஒரு பொய்யை நியாயப்படுத்த 9 பொய் சொல்கிறான். எனவே, சற்றே விவேக முள்ளவர்கள் இலகுவில் பொய் என் பதைப் பிடித்துக் கொள்ளலாம். ஆயி னும் அநேகமான தாஇகள் இவனு டைய பேச்சில் மயங்கி ஏமாந்து விடு கின்றார்கள்.

இவனது ஏமாற்று வித்தை என்ன? ஒரு தாஇயிடம் பணம் தருவதாகக் கூறி ஆசைகாட்டி, கடைசியாக வெளியூருக்கு ஆட்களனுப்ப அல்லது பெரிய பணத்தொகையை பெற்றுக் கொள்வற்கான செலவு என்று கூறி ஒரு சிறிய அளவு பணத்தை எடுத்துக் கொண்டு தலைமறைவாகி விடு வதுதான்.

எங்களிடம் தொடர்பைத்துண்டித் துக் கொண்ட அதேவேளை, வேறு சிலருடன் ஷிராஜ் என்ற பெயரில் தொடர்பு கொண்டு இதே வேலை யைச் செய்ய முயற்சித்திருக்கின்றான். இப்போது அந்த எண்ணும் துண்டிக் கப்பட்டு விட்டது. யாரை இப்போது ஏமாற்றிக் கொண்டு இருக்கின் றானோ?

நாம் ஏமாந்து விட்டோம் என்று சிலர் எள்ளி நகையாடினாலும் இந் தக் கட்டுரையை எழுதக் காரணம்:

1. தீயது நடக்கக் கண்டால் தடுத்து நிறுத்துவது நம் ஒவ்வொருவரின தும் கடமை.
2. இவன் தன் கைவரிசையைக் காட் டுவது அல்லாஹ்வின் பாதையில் வேலை செய்யும் தாஇக்களிடம். அவர்களது பேச்சை மக்கள் நம்பி காசைக் கொடுப்பார்கள் என்ற விடயத்தை இவன் நன்றாகவே பயன்படுத்துகிறான்.
3. அல்லாஹ்வின் பெயரை உபயோ கித்து ஏமாற்றுகின்றான். இப்போது யோசித்துப் பார்த்தால் இவன் கிஞ்சிற்றும் அல்லாஹ்வுக்குப் பயந்தவனல்ல; அல்லாஹ்வின் பெயர் சொல்லி ஏமாற்றுகிறான் என்றே சொல்ல வேண்டும். இப் படிப்பட்டவனை அல்லாஹ் நிச் சயமாக தலைகுப்புற விழவைத்து மானபங்கப்படுத்துவான்.
4. இவனைப் பற்றிய விவரங்கள் எவ்வளவுக்கு எவ்வளவு எங்க ளுக்கு கிடைக்கிறதோ அவ்வள வுக்கு இவனைப் பிடிப்பது சுலப மாகும். எனவே, யாராவது இவ னைப் பற்றிய எந்த விவரமும் தெரிந்தால் உடனடியாக அண் மையிலுள்ள பொலிஸ் நிலையத் துக்கோ அல்லது AlMuslimath, 02, Botheju Avenue, School Lane, Station Road, Dehiwala என்ற முகவரிக்கோ எழுத்து மூல மாக அறியத் தரவும். எவ்வளவு காலத்துக்கு முன்பு நடந்திருந்தா லும் என்ன பெயரில் ஏமாற்றியி ருந்தாலும் தயவு செய்து விவரம் தரவும்.

இப்படியான புல்லுருவிகளை விட்டு வைக்க முடியாது. விஷேட மாக அல்லாஹ்வின் பெயரில் அல் லாஹ்வின் நேசர்களை ஏமாற்றியவன். நிச்சயம் சமூகத்தால் அறியப்பட வேண்டும். தண்டிக்கப்பட வேண்டும்.

பல நாள் கள்வன் நிச்சயம் ஒரு நாள் பிடிபடுவான். அதுவும் அல் லாஹ்வை கேலி செய்பவன் நிச்சயம் உருப்பட மாட்டான். அல்லாஹ் அல்குர்ஆனில் இவ்வாறு கூறுகின் றான்:

"அவர்கள் அல்லாஹ்வையும் ஈமான் கொண்டவர்களையும் ஏமாற் றுகிறார்கள். (உண்மையில்) அவர் கள் தங்களைத் தாமே தவிர (வேறெ வரையும்) ஏமாற்றவில்லை; (இனி) அவர்கள் உணர்ந்து கொள்ளவும் மாட்டார்கள்." (2:9)

பொய்யிலேயே ஊறியிருக்கும் இந்த ஏமாற்று வித்தைக்காரன் விரை வில் தன் செயலின் விளைவைக் கண்டு கொள்வான், இன்ஷா அல்லாஹ்.

# அல்ஹஸனாத்

## 40 வருட அழைப்புப் பணியில்...

'அல்ஹஸனாத்'தின் நான்கு தசாப்த பயணத்தை திரும்பிப் பார்க்கும்போது, அதில் ஒரு வரலாற்று ஆவணம் அடங்கியிருப்பதைக் காணலாம்.

ஆரம்பத்தில், (1970) அல்ஹஸனாத்தை அறிமுகஞ் செய்யும் பொழுது, ஏற்பட்ட தடைகள் எதிர்ப்புகள் ஏராளம். அதற்கு முஸ்லிம்களிடையே அப்போது காணப் பெற்ற சடங்கு, மார்க்க, சிந்தனைப் போக்குகளே முதற் காரணியாகும்.

நாளடைவில், அதன் சத்தியக் குரலைக் கேட்ட பின்-முகஞ் சுளித்தவர்கள், முகத்தில் எறிந்தவர்கள் அனைவரும் அல்ஹஸனாத்தைக் கேட்டு வாங்கி வாசிக்கும் அளவுக்கு மாறியது குறிப்பிடத்தக்கது.

அந்த எதிர்ப்புணர்பு இஸ்லாமிய சிந்தனையாளர்களைக் கூட விட்டு வைக்கவில்லை. யூசுப் அல்கர்ளாவி, மௌலானா மௌதூதி, செய்யித் குத்ப் (ரஹிமஹுமுல்லாஹ்) போன்றவர்களை இஸ்லாத்தின் விரோதிகள் என்றும்; கந்தூரி, பாத்திஹா, மௌலூத், ஸியாரம், நேர்ச்சை, கொடி போன்ற கிருத்தியங்களே மார்க்கமென்றும் கருதியோர் மத்தியிலும் தாக்கத்தை ஏற்படுத்தியது அல்ஹஸனாத்.

1970 களில் வெளியான முதற் பக்கத் தலைப்புச் செய்திகள் முஸ்லிம்களின் கவனத்தை ஈர்த்துக் கொள்ளக் கூடியதாகவே அமைந்திருந்தன.

நம்பகத்தன்மையை வெளிப்படுத்துவதே பத்திரிகை தர்மமாகும். அந்த அடிப்படையில், அல்ஹஸனாத் இஸ்லாமிய கொள்கைகளையும் கோட்பாடுகளையும் தெளிவான முறையில் ஆரம்ப முதல் கையாண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

அல்ஹஸனாத்தின் உள்ளடக்கத்தை நோக்கும்போது பலஸ்தீன கொடுமைகள், அமெரிக்க அடாவடித்தனம், அரபு நாடுகளின் கோழைத்தனம், இஸ்லாமிய சிந்தனையாளர்களின் கருத்துக்கள், குர்ஆன்-ஸுன்னா, தஃவா, பெண்ணியல், சிறுவர் பூங்கா, கவிதை, மருத்துவக் குறிப்பு, அரசியல், சிறுகதை முதலிய பல அம்சங்கள் அடங்கிய ஒரு முழுமையான சஞ்சிகையாக அல்ஹஸனாத் அமைந்துள்ளது.

சினிமா, விளையாட்டு, சமையல் குறிப்பு, அலங்காரம், வேடிக்கை போன்ற வர்த்தக சஞ்சிகைகளை வாங்கிப் பெருமைப்பட்டுக் கொண்ட குடும்பங்களின் மத்தியிலும் அல்ஹஸனாத் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது எனலாம்.

மார்ச் 2010 ஆம் இதழ் "40 வருட அழைப்புப் பணியில்..." என்னும் மகுடத்துடன், ஆரம்ப காலந் தொட்டு இன்று வரை வெளியான அல்ஹஸனாத் அட்டைப்படங்களைத் திரட்டி முன் அட்டையை அழகுபடுத்தியிருப்பது கவர்ச்சியாகவுள்ளது.

'அல்ஹஸனாத்' வெளிவருவதற்குப் பலரும் பல வழிகளிலும் பங்களிப்புச் செய்துள்ளதை அவதானிக்கும் பொழுது, 'அல்ஹஸனாத்'தின் தேவை, முக்கியத்துவம் நன்கு பிரதிபலிக்கின்றது.


மதிப்பிற்குரிய மௌலவி ஏ.எல்.எம். இப்றாஹீம் (கபூரி) அவர்கள், ஆரம்ப காலத்தில் அல்ஹஸனாத்தின் வளர்ச்சிக்காக வெளிவருவதற்காகப் பாரிய பங்காளியாக இருந்துள்ளார்கள்.

"முஸ்லிம் நேசனும் தினசரியற்ற முஸ்லிம் சமூகமும்" என்ற கட்டுரையில் "முதலாவது தமிழ் பத்திரிகையை இந்நாட்டிற்குப் படைத்தளித்த நாம், 125 ஆண்டுகள் கால மிக நீண்ட கரைவுக்குப் பின்னும் எமது பிரச்சினையைப் பேசவும் எழுதவும் கருத்துக்களை முன்வைக்கவும் சகோதர சமூகத்தினரால் நடத்தப்படுகின்ற பத்திரிகைகளைத்தான் எதிர்பார்த்திருக்க வேண்டுமா?" என்ற அழுத்தமான கேள்வியை கேட்டுள்ளதை சிந்தித்துப் பார்ப்போர் உண்டா?

பொதுவாக அல்ஹஸனாத் ஒரு களஞ்சியமாகவே திகழ்கின்றதெனலாம். 'அல்ஹஸனாத்' இதழ்களை ஆண்டுவாரியாக 'பைண்ட்' செய்து, ஒவ்வொரு வீட்டிலும் பாதுகாத்து வைப்பது கல்வி பயிலும் குழந்தைகளுக்கும் பெற்றோருக்கும் மிகவும் பிரயோசனமளிக்குமென்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

'அல்ஹஸனாத்' பல்லாண்டு பணியாற்றி, தெளிவான இஸ்லாமிய சிந்தனையை வளர்க்க வேண்டுமென வாழ்த்துகிறேன்.

குறிப்பு: பதுளையில் அல்ஹஸனாத்தை முதலில் அறிமுகஞ் செய்தவர் ஜனாப் பிர்தௌஸ் மாஸ்டர் என்பதை இங்கு நினைவு கூர்தல் பொருந்தும்.



# இளைஞர்கள் சந்தோஷமாக வாழ

அரபு மூலம்: அஷ்ஷெய்க் ஸல்மான் அல்அவ்தா

தமிழில்: மஸ்ஹூர் ஸகரிய்யா

“ எமது இளைஞர்களுக்கு பயிற்றுவிக்கப்பட வேண்டிய சில முக்கிய அம்சங்கள் இருக்கின்றன. இடைநிலைப் பாடசாலை மாணவர்கள் முதல் பல்கலைக்கழக மாணவர்கள் வரை பலரும் இவ்விடயத்தை அலட்டிக் கொள்வதில்லை. அவைதான் இஸ்லாம் அதிகம் வலியுறுத்தும் தூய்மையும் ஒழுங்குமாகும் ”

**இளமைப்** பருவம் என்பது ஒரு மனிதனின் ஆயுளில் முக்கியமான பருவமாகும். இப்பருவத்தில் மனிதனது உடலியல் வளர்ச்சிக் கோலங்கள் முழுமை பெறுவதுடன் சிந்தனா ரீதியான வளர்ச்சியும் அவனில் ஏற்படுகின்றது. இளமைப் பருவத்தின் செயற்பாடுகளே அவனது எதிர்காலத்தைத் தீர்மானிக்கின்ற சக்தியாக உள்ளன.

### இளமைப் பருவத்தில் மன நிம்மதியைப் பெற்றுக் கொள்வதற்கான சில வழிமுறைகள்

### 1. குடும்ப அரவணைப்பு

ஓர் இளைஞனின் ஆளுமை விருத்தியில், அவனது வெற்றி, தோல்வி, மகிழ்ச்சி, கவலை, நிம்மதி, விரக்தி என்பவற்றைத் தீர்மானிப்பதில் அவனது குடும்பத்திற்கு மிகப் பெரிய பங்குண்டு.

‘உஸ்ரா’ என்ற அரபுச் சொல்லே குடும்பத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகிறது. உஸ்ரா என்பதன் நேரடிக் கருத்து பாதுகாப்பான கவசம் என்பதாகும். யுத்தக் களத்தில் நிற்கும் வீரன் தன்னை தற்காத்துக் கொள்ள இத் தற்காப்பு கவசத்தை அணிந்து கொள்வான். உண்மையில் குடும்பமும் இதே பணியைச் செய்கின்றது. ஓர் இளைஞன் தன் குடும்பத்துடன் தொடர்ந்தும் சீரிய உறவைப் பேணுகின்றபோது அவ்விளைஞன் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், அவனது தவறுகள் போன்ற அனைத்தையும் நெறிப்படுத்தி அவனைப் பாதுகாக்கும் அரணாக குடும்பம் தொழிற்படுன்றது. வெளிக் கவர்ச்சிகள், நெறி பிறழ்வுகள், கெட்ட நட்பு மற்றும் இன்னோரன்ன சீர்கேடு களிலிருந்து குடும்பமே அவனைப் பாதுகாக்கின்றது.

‘அஸ்ர்’ என்ற வினையடியிலிருந்தே உஸ்ரா என்ற சொல் பிறந்துள்ளது. அஸ்ர் என்ற சொல்லுக்கு கயிறு, விலங்கு போன்ற கருத்துக்கள் உண்டு. எண்ணற்ற சுதந்திரங்களை இயல்பிலேயே பெற்றுள்ள மனிதன் தான் பிறந்தது முதல் குடும்ப கட்டமைப் பிற்குள் வளர்வதனால் அவனது சுதந்திரம் நெறிப்படுத்தப் பட்டு வரையறுக்கப்படுகின்றது. அவனது சுதந்திரத்திற்கு கட்டுப் போடப்படுகின்றது. அவன் தன் குடும்பத்திற்குச் செய்ய வேண்டிய உரிமைகள், கடமைகள் என்பன அவனை நெறிப்படுத்துகின்றன.

ஒரு மனிதன் தன் குடும்பத்துடன் தொடர்புறுகின்றபோது அவன் தனக்கு முன்னர் வாழ்ந்த ஒரு பரம்பரையுடன் தொடர்புறுகின்றான்.

நான் லண்டனுக்குச் சென்றிருந்தபோது பிரித்தானிய பிரஜை ஒருவரை சந்தித்தேன். நாம் இருவரும் பல்வேறு விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடினோம். எம் உரையாடலின்போதே எமது குடும்ப உறுப்பினர்கள் தொடர்பாகவும் பேசினோம். நான் எனது பரம்பரையினருள் ஐந்துக்கு மேற்பட்ட தலைமுறையினரின் பெயர்களைக் கூற அந்த மனிதர் ஆச்சரியப்பட்டார். ஏனென்றால், அவர் தனது பெற்றோரை மாத்திரமே அறிந்திருந்தார்.

குடும்ப உறுப்பினர்களுக்கிடையிலான தொடர்புகள் ஒருபோதும் அதிகாரத்தின் அடிப்படையில் அமைந்திருக்கக் கூடாது. ஒரு நல்ல குடும்பத்தில் தந்தை குழந்தைகளின் மீது அதிகாரம் செலுத்துபவராக இருக்க மாட்டார். குடும்ப உறுப்பினர்களுக்கு மத்தியில் தீர்மானம் எடுக்கும் விடயத்தில் கலந்துரையாடல்கள் நடைபெற வேண்டும். ஒவ்வொருவரும் பிறரது உணர்வுகளை மதித்து நடந்து கொள்ள வேண்டும்.

எமது இளைஞர்களுக்கு பயிற்றுவிக்கப்பட வேண்டிய சில முக்கிய அம்சங்கள் இருக்கின்றன. இடைநிலைப் பாடசாலை மாணவர்கள் முதல் பல்கலைக்கழக மாணவர்கள் வரை பலரும் இவ்விடயத்தை அலட்டிக் கொள்வதில்லை. அவைதான் இஸ்லாம் அதிகம் வலியுறுத்தும் தூய்மையும் ஒழுங்குமாகும்.

எந்த ஒரு விடயத்தையும் ஒழுங்கு முறைப்படி செய்வது இஸ்லாத்தோடு ஒட்டிப் பிறந்த பண்பாகும்.

❝ எந்த ஒரு விடயத்தையும் ஒழுங்கு முறைப்படி செய்வது இஸ்லாத்தோடு ஒட்டிப் பிறந்த பண்பாகும். அதுபோன்று தூய்மையும் ஈமானுடன் பின்னிப் பிணைந்த ஒன்று. சுத்தம், ஒழுங்கு என்பன இறை நெருக்கத்தைப் பெற்றுக் கொள்வதற்கான அடிப்படைப் பண்புகள். ஒரு மனிதன் வுழூச் செய்கின்றபோது அவனது முகம், கை, கால் என்பவற்றிலிருந்து வழிந்தோடுகின்ற நீருடன் அவனது பாவங்களும் சுத்தப்படுத்தப்பட்டு அகற்றப்படுகின்றன என இறை தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் எமக்குக் கற்றுத் தந்திருக்கிறார்கள். ❞

அதுபோன்று தூய்மையும் ஈமானுடன் பின்னிப் பிணைந்த ஒன்று.

சுத்தம், ஒழுங்கு என்பன இறை நெருக்கத்தைப் பெற்றுக் கொள்வதற்கான அடிப்படைப் பண்புகள். ஒரு மனிதன் வுழூச் செய்கின்றபோது அவனது முகம், கை, கால் என்பவற்றிலிருந்து வழிந்தோடுகின்ற நீருடன் அவனது பாவங்களும் சுத்தப்படுத்தப்பட்டு அகற்றப்படுகின்றன என இறை தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் எமக்குக் கற்றுத் தந்திருக்கிறார்கள்.

அதிகமான இளைஞர்கள் வழி தவறிச் செல்ல இரு முக்கிய காரணிகள் உள்ளன.

1. தமது பிள்ளைகளைச் சரிவரப் புரிந்து அவர்களைக் கட்டுப்படுத்தி நெறிப்படுத்துவதில் பெற்றோரின் இயலாமை.
2. இளைஞர்கள் தங்களைச் சூழ்ந்திருப்பவர்களை திருப்தியுடன் ஏற்றுக் கொள்ளாமை.

நாம் இன்று மேற்குலகில் வன்முறை இயக்கங்கள் பலவற்றைக் காண்கிறோம். சென்ற பல நூற்றாண்டுகளாக மேற்குலகில் 'ஹிப்பிகள்' என்றொரு வன்முறைக் குழு செயற்பட்டு வந்தது. சமூகம் விரும்பாத போதைப் பொருள் பாவனை, வன்முறைக் கலாசாரம் என்பவற்றில் பிரபல்யம் அடைந்திருந்த குழுவே ஹிப்பிகள் ஆவர். (1960களில் இவர்களது செயற்பாடுகள் மேற்கில் உச்சகட்டத்தை எட்டியிருந்தன. இவர்கள் இன்று extasy என்ற பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றனர். சட்ட விரோத போதைப் பொருள்களை பயன்படுத்துவதில் இவர் கள் எல்லை மீறிச் செயற்படுகின்றனர். (Extasy என்பது இளைஞர்கள் மட்டுமே பயன்படுத்தக்கூடிய ஒருவகைப் போதைப் பொருள். மேற்கில் இதனை இளைஞர்கள் அதிகம் பயன்படுத்துவதால் இப்பெயர் கொண்டே அழைக்கப்படுகின்றனர்.)

மேற்கு நாகரிகம் தமது தேவைகளையும் விருப்பங்களையும் பூர்த்தி செய்யவில்லை என இந்த இளைஞர்கள் கருதுகின்றனர். இந்த நாகரிகம் மனிதனை விட கட்டடங்களுக்கே கூடிய முக்கியத்துவம் கொடுக்கின்றது. எனவே, அவர்கள் இந்த நாகரிகத்தையும் சமூகப் பெறுமானங்களையும் ஆட்சேபித்து அநாகரிகமான விடயங்களில் ஈடுபடுகின்றனர். இவர்கள் எப்போதும் ஷைத்தானின் கைப் பாவைகளாகவே இருப்பர் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

ஒரு நாட்டில் பல்வேறு கோத்திரங்கள், இனக் குழுக்கள், பிரதேசங்கள், நகரங்கள் இருக்க முடியும். ஓர் இளைஞன் எந்த இனக் குழுமத்தை அல்லது எந்தப் பிரதேசத்தைச் சார்ந்திருக்கின்றானோ அவன் அந்த இனக் குழுவை அல்லது அந்தப் பிரதேசத்தை நேசிப்பது இயல்பான விடயமே. தனது இனத்தை, தனது நாட்டை, தனது மக்களை அடுத்தவரை விட அதிகமாக நேசிப்பதானது, அனுமதிக்கப்பட்ட மனித இயல்புடன் ஒன்றறக் கலந்த ஒரு விடயமாகும். எனினும், ஓர் இளைஞன் இவ்வுணர்வுகளை வெளிப்படுத்துவதில் தீவிரமாக இருக்கக் கூடாது. பிரதேசவாதம், கோத்திரவாதம் என்பன முற்று முழுதாக தவிர்க்கப்பட வேண்டும்.

மேலும், தனது நலனுக்கு மட்டும் முன்னுரிமை கொடுக்கும் சுய நலப் போக்கு நீங்க வேண்டும். இல்லாதபோது முழு மனித சமூகமும் அதல பாதாளத்தில் விழ இவ்வுணர்வுகள் காரணமாக அமைந்து விடும்.

அன்பு மனிதர்களிடமுள்ள இயல்பான ஓர் உணர்வாகும். குறிப்பாக, இளமைப் பருவத்தில் இவ்வுணர்வின் தாக்கம் சற்று கூடுதலாகவே காணப்படும். இமாம் இப்னு ஹஸ்மிடம் அன்பு தொடர்பாகவும் அன்பு செலுத்துவதன் சட்ட திட்டங்கள் தொடர்பாகவும் கேட்கப்பட்டபோது பின்வருமாறு பதிலளித்தார்.

''அன்பு மனிதனது நாட்டத்துடனோ பலத்துடனோ தொடர்புபட்ட விடயமல்ல. எனவே, அன்பு சட்ட திட்டங்களுக்கு உட்படாத ஒன்று.''

அன்பென்ற உணர்வு ஒரு மனிதன் தான் விரும்பி தெரிவுசெய்து கொள்ளும் ஓர் உணர்வல்ல. அன்பென்பது இயல்பிலேயே ஊற்றெடுக்கக்கூடிய ஓர் உணர்வு. எனவே, இந்த உணர்வுக்கு தீர்ப்புக் கூறிவிட முடியாது. மாற்றமாக இந்த உணர்வின் அடிப்படையில் எழும் செயற்பாடுகளை அனுமதிக்கத்தக்கது, அனுமதிக்க முடியாதது என்று பிரித்தறிய முடியும்.

இளைஞர்கள் பொழுதுபோக்குகளில் ஈடுபடும்போது இஸ்லாமிய வரையறைகளை மீறாதிருத்தல், அல்லாஹ்வின் கோபத்தை பெற்றுத் தரும் நட வடிக்கைகளில் ஈடுபடாதிருத்தல் அவசியம். அவர்கள் தமக்கென்று சில இலக்குகளை வகுத்து அப்பாதையில் பயணிக்க வேண்டும். ஏனெனில், இலக்கற்ற வாழ்க்கை பயனற்றதாகவே அமையும்.

## கல்வி பற்றிய ஹதீஸ்கள்

- கல்வியைத் தேடிக் கற்றுக் கொள்வது ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் கடமையாகும்.
- கற்றதைக் கற்றுக் கொடுப்பவரே உங்களில் சிறந்தவர்.
- அறிவைத் தேடி ஒரு வழியில் செல்பவருக்கு அல்லாஹ் அவருக்கு சுவனத்திற்கான ஒரு வழியை இலகுபடுத்திக் கொடுக்கின்றான்.
- ஒரு மனிதர் மரணித்து விட்டால் அவரது மூன்று கருமங்களைத் தவிர ஏனைய அனைத்தும் முற்றுப் பெற்று விடுகின்றன.

1. நிலையான தர்மம் (ஸதகதுல் ஜாரியா)
2. பயனளிக்கும் கல்வி
3. அவருக்காகப் பிரார்த்திக்கும் ஸாலிஹான பிள்ளை

அய்மா நிஃமதுல்லாஹ்
கமு/ அல்ஹம்ரா வித்தியாலயம், மருதமுனை

## வாழ்க்கை என்பது...

- ஒரு இலட்சியம்– அதனை நீ அடைந்து விடு.
- ஒரு வாக்குறுதி– அதனை நிறைவேற்று.
- ஒரு வாய்ப்பு– அதனை நீ பயன்படுத்திக் கொள்.
- ஒரு பயணம்– அதனை முடித்து விடு.
- ஒரு கடமை– அதனை நீ செய்து விடு.
- ஒரு போராட்டம்– அதனை ஏற்றுக் கொள்.
- ஒரு சவால்– அதனை சமாளித்து விடு.

சுஹைனா ரிழ்வான்
க/ அல்மனார் தேசிய பாடசாலை, ஹந்தஸ்ஸ

## நேரம் ஒதுக்குங்கள்

- வேலை செய்ய நேரம் ஒதுக்குங்கள்;
  அது வெற்றிக்கான விலை.
- சிந்திக்க நேரம் ஒதுக்குங்கள்;
  அது ஆக்கபூர்வமான சக்தி.
- விளையாட நேரம் ஒதுக்குங்கள்;
  அது உடல் ஆரோக்கியத்தின் இரகசியம்.
- படிக்க நேரம் ஒதுக்குங்கள்;
  அது அறிவுக்கான ஊற்று.
- நட்புக்கு நேரம் ஒதுக்குங்கள்;
  அது மகிழ்ச்சியான பாதை.
- நேசிக்க நேரம் ஒதுக்குங்கள்;
  அது உற்சாகமான வாழ்க்கை.
- சுற்றுப் பயணத்துக்காக நேரம் ஒதுக்குங்கள்;
  அது மூளைக்கான ஓய்வு.

பாத்திமா பின்த் பௌஸ், ஜின்தோட்டை

## கூட இருக்கும் நண்பன்– அல்ஹஸனாத்

அல்ஹஸனாத் நீ...
அகிலமெங்கும் சுற்றிவரும் ஆகாயப் பறவை– நீ
வாசிப்போரைக் கவர்ந்திழுக்கும் மந்திரப் பறவை– நீ
அல்லாஹ்வை நினைவூட்டும் அதிசயப் பறவை

எண்ணிலடங்கா வாசகர்களின் அடைக்கலம்– நீ
என் தனிமையை இனிமையாக்கும் உறவு– நீ
என்னோடு கூட இருக்கும் உற்ற நண்பன்– நீ

உன் வாசகங்களில் இன்பத்தை நுகர்கிறேன்
உன் வருகைக்காய் காத்திருக்கிறேன்
உன் வெளியீடுகளை அறிந்திருக்கிறேன்

நீ பிரசவித்து நாற்பது வருடங்கள் கரைந்து விட்டன
ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு சிறகு விரித்து
வானில் சிறகடித்துப் பறக்கிறாய்

உன் மலர்களில் ஓரிரு இதழ்களைத்தான்
நுகர்ந்திருப்பேன்
அவை ஒவ்வொன்றும் என் வாழ்வின் புதிய
திருப்பங்களே!

பாத்திமா பாக்கீர், மூதூர்- 5

# சிகரங்களைத் தொட...

01. எந்தவொரு விடயத்தையும் ஆரம்பிக்கும்போது அல்லாஹ்வின் மீது தவக்குல் வைத்து பிரார்த்திப்போமானால் வெற்றி நிச்சயம்.

02. மற்றவர்களிடமுள்ள நற்பண்புகளைக் கண்டு ஒரு கிண்ணம் அளவேனும் வாழ்த்துச் சொல். உனக்கு நதியளவில் வாழ்த்துக்கள் கிடைக்கும்.

03. மற்றோர் மத்தியில் உரத்துப் பேசுவது பெரியோர் மத்தியில் அது எம்மை கீழ்படச் செய்யும்.

04. நாம் நற்பண்புகளின் இருப்பிடமாக இருக்கும் போது மற்றோர் கண்களில் நாம் ஒரு பூஞ் சோலையாகக் காட்சியளிப்போம். அவர்கள் இவற்றை நுகர எம்மிடம் வருவார்கள்.

05. உங்கள் கைகளில் உள்ள வலிமையை விட உங்கள் சிந்தனைகளில் உள்ள வலிமை மிக அதிகம். எனவே, ஆழ்ந்து சிந்தியுங்கள்.

06. உங்களை நேசிப்பவர்களை விட வெறுப்பவர்கள் இந்த உலகத்தில் அதிகம் வாழ்கின்றனர். எனவே, பொறுமையாய் வாழக் கற்றுக் கொள்ளுங்கள்.

07. என்னதான் விவேகியானாலும் நாளையின் நிலையை உங்களால் சொல்லவோ ஊகிக்கவோ இயலாது. இன்றைய பொழுதை வீணாகக் கழிக்காதீர்கள். அது மீண்டும் திரும்ப வராது.

08. ஒருவன் சோம்பலுடன் நூறு ஆண்டுகள் வாழ்வதைக் காட்டிலும் வீரத்துடன் முயற்சி செய்து ஒரு நாள் வாழ்வது மேலானது.

09. எவரையும் நாம் தெருப் பொருட்களாகப் பார்க்கக் கூடாது. அரும் பொருளாகவே பார்க்க வேண்டும். ஏனெனில், ஒவ்வொரு மனிதனிடமும் பெரும் ஆற்றல்கள் சேமிக்கப்பட்டிருக்கின்றன.

**மரீனா மவ்ஜூத்**
**ஆமினா மகளிர் தேசிய பாடசாலை, மாத்தளை**

# வினா-விடைப் போட்டி-24

**வினாக்கள்**

01. 'ஹிக்மத்தே குர்ஆன்' எனும் சஞ்சிகையை ஆரம்பித்த இஸ்லாமிய அறிஞர் யார்?

02. ஸலபிகளின் அகீதா 'அஸ்லம்' என அழைக்கப்படுவது போல் ஃகலபிகளின் அகீதா எவ்வாறு அழைக்கப்படுகின்றது?

03. மனிதன் ஈடேற்றத்தையும் வெற்றியையும் அடைந்து கொள்வதற்கான வழிமுறைகளை அல்லாஹ் நான்கு வகைப்படுத்தியுள்ளான். அவற்றைக் குறிப்பிடுக.

04. சூடான் நாட்டின் தற்போதைய ஜனாதிபதி யார்?

05. உலகளவில் வருடா வருடம் இடம்பெறும் தற்கொலைகளின் எண்ணிக்கை எத்தனை?

06. இமாம் அபுல் ஹஸன் அஷ்அரி அவர்கள் வபாத்தான ஆண்டு எது?

07. மர்ஹூம் டாக்டர் இஸ்ரார் அஹ்மத் அவர்கள் பிறந்த நாடு எது?

08. 'ஹிப்பிகள்' என்போர் யார்?


09. கடந்த மாதம் அல்ஹஸனாத் அதன் எத்தனையாம் ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடியது?

10. மாலைதீவுக் குடியரசின் இஸ்லாமிய விவகாரங்களுக்கான அமைச்சர் யார்?

(போட்டியில் வெற்றிபெற்றவர்களின் விபரம் பக்கம் 49ல் பார்க்கவும்)

உங்கள் விடைகளை ஏப்ரல் 30ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வையுங்கள்.

**சிறுவர் பூங்கா**
**அல்ஹஸனாத்**
**77, தெமடகொட வீதி,**
**கொழும்பு-09**



# தற்கொலை தீர்வாகுமா?

ஆலிப் அலி
இஸ்லாஹிய்யா வளாகம்

**இன்றைய** சமூகம் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றது. ஒவ்வொரு துறைசார் சமூக ஆர்வலரும் அவரது துறைக்கேற்ப ஒவ்வொரு பிரச்சினையையும் நோக்குகின்றார். எனினும், சமகால தற்கொலைப் பிரச்சினையில் அனைத்து சமூகவியல் அறிஞர்களும் பொது நோக்குடனேயே கவனம் செலுத்துகின்றனர். ஏனெனில் அது ஒரு பாரிய சமூக நோய். தொற்று நோய் என்று கூடக் கூறலாம். தற்கொலை என்பது சமூகப் பிரச்சினைகளின் வேறு ஒரு பரிமாணம். அது தனிப்பட்ட ஒரு நபரின் செயலாயினும், அது ஒரு சமூக நிகழ்வாகவே சமூகவியலாளர்களால் நோக்கப்படுகின்றது.

மனிதர்களை அவர்கள் பிரச்சினைகளை அணுகும் முறைகளின் அடிப்படையில் இரு வகையினராக வேறுபடுத்த முடியும்.

ஒரு சாரார் தாம் தம் வாழ்க்கையை சிறப்புறக் கழிக்க வேண்டும், சமூகத்தில் மதிப்புடன் மிளிர வேண்டும், நீண்ட ஆயுளுடன் ஆரோக்கியமாக வாழ வேண்டும், வாழ்வில் குறுக்கிடும் தடைக்கற்களைத் தம் முன்னேற்றத்தின் படிக்கற்களாக மாற்றிக் கொள்ள வேண்டும், துன்பங்களையும் முரண்பாடுகளையும் துச்சமெனக் கருதி வாழ்க்கையின் நீரோட்டத்தில் எதிர்நீச்சல் போட்டுக் கரைசேர வேண்டுமென வாழ்கின்றனர்.

மற்றுமொரு சாரார் வாழ்க்கை பற்றி பொய்க் கற்பனைகளையும் நீண்ட இலக்குகளையும் வைத்திருப்பர். என்றாலும் முரண்பாடுகள், விமர்சனங்களுக்கு முன்னால் அவர்களால் தாக்குப்பிடிக்க முடியாது போய்விடும். சிறு சிறு பிரச்சினைகளையும் பெரிதாகக் கருதுவர். தனக்கு மட்டுமே பிரச்சினை இருப்பதாக ஒரு விம்பத்தினை மனதில் இருத்திக் கொள்வர். இனி அதனையே நினைத்து நினைத்து மன அழுத்தத்திற்கு உள்ளாகி (Stress) இறுதியில் விரக்தியின் உச்ச கட்டத்தை அடைந்து சமூகத்தை விட்டும் ஒதுங்கி தற்கொலை செய்துகொள்வதுதான் தீர்வெனக் காண்பர். தற்கொலை செய்து கொள்வதன் மூலம் தன்பால் பிறரது அனுதாபத்தைப் பெறவும் அதனையே பிறருக்குப் பாடம் புகட்ட ஒரு வாய்ப்பாகவும் கருதுவர்.

இன்று சமூகத்தில் பல்வேறு காரணங்களுக்காக தற்கொலைகள் நிகழ்கின்றன. உரிமை மீறல், இல்லத்து வன்முறைகள், அடக்குமுறைகள், யுத்தம், துஷ்பிரயோகம், தோல்வி மனப்பான்மை, ஏமாற்றம், பிரிவு, முரண்பாடு, துக்கம், வறுமை, பயங்கர நோய்கள், தவறான பாலியல் தொடர்பினால் ஏற்படும் கர்ப்பம், கடன் சுமை, சீதனக் கொடுமை, காதல் தோல்வி, திருமண பந்தத்தில் ஏற்படும் கருத்து முரண்பாடு, இயற்கை அனர்த்தங்களினால் ஏற்படும் அதிர்ச்சி... என தற்கொலைக்கான காரணிகளைப் பட்டியலிட்டுக் கொண்டே போகலாம். அதுமட்டுமன்றி, தாம் நேசிக்கும் தமது பிரபலங்கள் அல்லது நட்சத்திரங்கள் யாராவது மறைந்தால் அதற்காகத் தற்கொலை செய்பவர்களும் உள்ளனர். அண்மையில் மைக்கல் ஜெக்ஸன் மரணித்தபோது அதற்காக சிலர் தற்கொலை செய்துகொண்டுள்ளனர்.

கிராமம், நகரம் என்ற வேறுபாடுகளின்றி ஒவ்வோர் இடத்திலிலும் அவர்களது நாகரிகத்திற்கும் முன்னேற்

றத்திற்குமேற்ப மக்கள் இச்செயலில் ஈடுபடுகின்றனர். கிராமங்களில் நச்சு விதை உண்பதில் ஆரம்பித்து கிருமி நாசினிகளை அருந்துதல், தனக்குத் தானே தீவைத்துக் கொள்ளுதல், நீர்நிலைகளில் மூழ்குதல், மலைகளிலி ருந்து குதித்தல், கழுத்தில் சுருக்கிடல், வாகனங்களுக்கு முன்னால் பாய்தல் என்றும்; தற்போது வளர்ச்சியடைந்த முறையில் மாத்திரைகளை அதிகமாக உட்கொள்ளுதல், ஊசி மூலம் நச்சு மருந்துகளை உடலில் ஏற்றுதல், துப் பாக்கியால் தன்னைத்தானே சுடுதல்... என பல்வேறு பரி மாணங்களில் மனிதன் தன்னுயிரை மாய்த்துக் கொள் கின்றான்.

தற்கொலை என்பது ஒரு தனிநபர் செயலாயினும் அது சமூக நிகழ்வாக, சமூகச் சிக்கலாகவே நோக்கப்படுகின் றது. சமூகவியல் ஆய்வாளர் எமில் டெர்ஹாம் (Emile Durham) ''மனிதனின் தற்கொலைக்கு சமூகச் சூழ் நிலைகளும் உணர்வுகளும்கூட காரணமாகின்றன'' என்கிறார். சமூகத்தில் நிகழும் தற்கொலைகளை இவர் மூன்று வகைக்குட்படுத்துகிறார்.

1. தன்னலம் கருதிய அல்லது தன்முனைப்புத் தற்கொலை (Egoistic Suicide)
2. நியம மறு தற்கொலை (Anomic Suicide)
3. உன்னத அல்லது பொதுநலத் தற்கொலை (Altruistic Suicide)

### 1. தன்னலம் கருதிய அல்லது தன்முனைப்புத் தற்கொலை

ஒருவர் சமூகத்தை விட்டொதுங்கி தனித்து நின்று தனக்காக, தனது நலனுக்காக எனக் கருதி ஏற்படுத்திக் கொள்ளும் தற்கொலையே இதுவாகும். பரீட்சையில் தோல்வி, காதலில் தோல்வி, திருமண பந்தத்தில் பிரச் சினை, நிம்மதியின்மை... என தமது வாழ்வில் எதிர்ப் படும் சவால்களை உடைத்தெறிய முடியாதவர்களால் மேற்கொள்ளும் தற்கொலையை இது குறிக்கின்றது.

### 2. நியம மறு தற்கொலை

இது சமூகத்தில் ஏற்படும் எதிர்பாராத, தாங்கொணா மாற்றங்களினால் செய்துகொள்ளப்படும் தற்கொலை. இயற்கை அனர்த்தங்கள், யுத்தம், புலம்பெயர்வு, அகதி வாழ்வு என்பவற்றால் தமது எதிர்பார்க்கைகள், கற்ப னைக் கோட்டைகள், அபிலாஷைகள் யாவும் தம் கண் முன்னாலேயே துவம்சமாவதைத் தாங்க இயலாது செய்துகொள்ளும் தற்கொலைகளை இது குறிக்கின்றது.

### 3. பொதுநலத் தற்கொலை

இது தனது இனத்துக்காக அல்லது தனது தேசத்திற் காக, கலாசாரத்திற்காக வேண்டி செய்யப்படுகின்றது. இவை அரிதாகவே நிகழ்கின்றன. இச்செயல் தன் சமூகத் தின் உரிமைகளை மீட்டெடுப்பதற்காக எதிர்த் தாக்குதல் நடத்தி எதிரியைக் கதிகலங்கச் செய்கிறது. இது புனிதம் வாய்ந்தது, நன்மை தரக்கூடியது என்ற உணர்வில் செய் யப்படுவதாகும்.

தற்கொலையில் ஈடுபடும் ஒருவர் முழுமையான சுய உணர்வுடனும் புத்திசுவாதீனத்துடனுமே தன் உயிரை மாய்த்துக் கொள்கிறார். இன்றளவில் மேற்குலகில் தற்கொலை என்பது தவிர்க்க முடியாத ஒரு பிரச்சி னையாக தலைதூக்கியுள்ளது. உலகளவில் வருடா வருடம் பத்து இலட்சம் தற்கொலைகள் இடம்பெறு வதாக (WHO) உலக சுகாதார அமைப்பின் அறிக்கை சுட்டிநிற்கின்றது. அதாவது, ஒரு வருடத்தில் ஓர் இலட்சம் பேரில் 16 பேர் தற்கொலை புரிகின்றனர். உலகளவில் 40 செக்கன்களுக்கு ஒரு தற்கொலைச் சம்பவம் பதிவாகிறது.


உலக சுகாதாரம் தொடர்பான தேசிய சபையினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சர்வதேச மாநாட்டில் வெளியிடப்பட்ட அறிக்கையின்படி, உலகளவில் அதிகமாகத் தற்கொலை இடம்பெறும் நாடுகளின் வரிசையில் இலங்கை முதலிடத்தில் நிற்கின்றது. இலங்கை சனத்தொகையில் ஓர் இலட்சம் பேருக்கு 47 பேர் தற்கொலை செய்து கொள்கின்றனர். கொங்கோ சனத்தொகையில் ஓர் இலட்சம் பேருக்கு 38.6 என்ற அடிப்படையில் இரண்டாம் இடத்தில் உள்ளது. சீனா மூன்றாம் இடத்தில் உள்ளது. இந்தியாவில் 2008ஆம் ஆண்டு தேசிய குற்றப் பதிவகம் மேற்கொண்ட ஆய்வின் படி, அவ்வாண்டில் மாத்திரம் ஓர் இலட்சத்து 25 ஆயிரத்து 17 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். இவ்வாறு நாடுகளின் தரவரிசை தற்கொலை நிகழ்வுக ளின் எண்ணிக்கைக்கேற்ப அதிகரித்துக் கொண்டே செல்கின்றது.

சுதந்திர சிந்தனையுடையவர்களும் படிப்பறிவுடை யோருமே தற்கொலைகளில் அதிகம் ஈடுபடுவதாக ஆய் வுகள் சுட்டிக்காட்டுகின்றன. வரலாற்றில் சர்வாதிகாரம் புரிந்த முஸோலினி, ஹிட்லர் போன்றோரின் முடிவு கூட தற்கொலையிலேயே முற்றுப்பெற்றது. அது மட்டுமல்ல, தற்கொலை பற்றி ஆய்வுகள், நூல்கள் எழுதியவர்களில் சிலர்கூட தற்கொலை செய்து கொண் டுள்ளனர். இதற்குக் காரணம் ஒரு சில நிமிடங்களுக்கு உந்தப்படும் உணர்ச்சி வயப்படுதலை பொறுமையுடன் அடக்கியாளத் தெரியாமையாகும்.

தற்கொலை முயற்சியில் ஈடுபடுபவன் ஒரு கோழை, ஒரு சுயநலமி என்றுதான் கூற வேண்டும். தான் அல்லது தனது குடும்பம் எதிர்கொண்ட ஒரு பிரச்சினையை சுமுகமாகத் தீர்த்துக் கொள்ள முடியாமல் மற்ற அனைவரது தலைகளிலும் அச்சுமையைப் போட்டு விட்டு தப்பினேன், பிழைத்தேன் என்று அவன் மட்டும் போய்ச் சேர்வது எந்த விதத்தில் நியாயம்? இதனால் அக்குடும்பமே சமூக ஒதுக்கல், புறந்தள்ளல், இழிநிலை என்பவற்றுக்கு ஆட்படுகின்றது. சிலவேளை ஏனையோ ரும் இதனை முன்னுதாரணமாகக் கொள்ளும் நிலையும் உருவாகின்றது. எனவேதான் தற்கொலை ஒரு சமூகம் சார் சிக்கலாக நோக்கப்படுகின்றது.

(தற்கொலை குறித்த இஸ்லாத்தின் பார்வையை அடுத்த இதழில் நோக்குவோம், இன்ஷா அல்லாஹ்)

# நாம் தவறி விட்டோமே



# ஹேரத் ஸேர்...!

ஆஇஷா அஸ்கா ஹஸன், மாவனல்லை

**எங்கள்** 'ஹேரத் சேரின்' மரணச் செய்தி உண்மையில் எங்களை இவ்வளவு கவலையில் ஆழ்த்திவிடுமென்று நாங்களே எதிர்பார்க்கவில்லை. அவரை ஓர் ஆளுமை மிக்க ஆசிரியர், கலகலப்பானவர் என்றெல்லாம் கூற முடியாவிட்டாலும் கூட நிச்சயமாக அவர் ஒரு நல்ல மனிதர் என்று நாம் ஒருமித்த குரலில் கூறுவோம்.

எங்கள் பாடசாலை மிகப் பெரியது. அதன் ஆசிரியர் குழாமும் அதற்கேற்பவே பெரியது. அவர்களுள் எண்ணி வைத்தாற் போலிருக்கும் ஓரிரு பிற மதத்தவருள் எங்கள் ஹேரத் ஸேரும் ஒருவர். அவர் வருவதும் போவதும் யாருக்குமே தெரியாது.

வகுப்பறைக்குள் வந்தால் கூட நாம் அவர் பற்றி அலட்டிக் கொள்வதில்லை. குரலை உயர்த்தி அவரால் பேச முடியாது என்பதால் அவர் நடத்தும் பாடம் எங்களது காதுகளுக்குள் நுழைவதும் கிடையாது. "பாவம் இவர். வெகு நேரமாக ஏதோ பேசிக் கொண்டிருக்கிறார்" என்று சிலபோது நாம் நினைப்பதும் உண்டு. ஆனால் அப்போது கூட அவர் சொல்வதைக் கேட்க வேண்டும் என்று நாம் நினைப்பதில்லை.

உண்மையில் நாம் அவ்வளவு மோசமான மாணவர்களாக இருக்கவுமில்லை. ஸேர் ஒரு சிங்களவர் என்பது எம்மைப் பாதிக்கவேயில்லை. அவரது பலவீனம் எம்மைப் பலப்படுத்தியது. அது ஸேருக்கும் தெரியும் என்பதால் அவரும் எங்களை வெறுக்கவில்லை. அதற்காக நாம் எம்மை நியாயப்படுத்த மாட்டோம். ஸேரை நாங்கள் மதிக்காமலுமில்லை. ஆனால் அவர் படிப்பிப்பது ஆங்கிலம் என்பதுதான் பிரச்சினையாக இருந்தது.

"ஆங்கிலம் என்றால் இவரிடமா படிக்க வேண்டும்? வகுப்பில் எல்லோரும் O/L ஆங்கிலத்தில் சித்தியடைந்து வந்திருக்கிறோம். போதாக் குறைக்கு ஆங்கிலக் கோஸ்கள் வேறு குவிந்திருக்கின்றன."

எமது இந்த நிலைப்பாடு குறித்து அரசாங்கத்துக்கே தெரியும் என்பதாலோ என்னவோ எமது ஆங்கிலப் புத்தகம் வெகு கவர்ச்சியாக இருக்கும். சிறுவர்களுக்கு அகராதி சொல்லித் தரும் புத்தகம் போல வண்ணப் படங்களும் பாடல்களும் இளமை குறித்த பகுதிகளும் ஆங்காங்கே படர்ந்திருக்க இடையில் கொஞ்சம் இலக்கணமும் இருக்கும். ஆனாலும் நாம் அவற்றை ஏறெடுத்துப் பார்ப்பதில்லை, அவர் சொல்வதைக் கேட்பதில்லை என்று கோபப்படவும் மாட்டார்.

"இன்று மட்டுமாவது இந்தப் பயிற்சியைக் கொஞ்சம் செய்ய முடியுமா?" என்று ஓரிரு தடவைகள் அவர் கேட்டுக் கொண்டதால்தான் எங்கள் ஆங்கிலக் கொப்பிகளின் ஓரிரு பக்கங்களாவது நிறைந்திருக்கின்றன. ஸேருடன் சிங்களத்தில் கதைத்தால் அவர் பதில் சொல்ல மாட்டார் என்பதால், எம்முள் சிலர் அவ்வப்போது ஆங்கிலத்தில் canteenக்குச் செல்லவா? என்றோ, இடையில் வீடு செல்ல கையொப்பமிட்டுத் தரலாமா என்றோ கேட்டிருப்போம். அல்லது "ஸேர், பாடம் தவிர வேறு எது வேண்டுமானாலும் சொல்லுங்கள்" என்று கூறியிருப்போம்.

உண்மையில் ஆங்கிலப் பாடவேளை எமக்கு ஓய்வு வேளை போன்றது. ஸேர் வகுப்பிலிருக்க நாமோ மற்றைய பாடங்களின் ஹோம் வர்க், நேற்றைய கதைகளின் சாராம்சம் என்பன குறித்து நீண்ட நேரம் பேசுவோம். பகுதித் தலைவர் வருவதாக இருந்தால் மட்டும் எங்கிருந்தாவது ஓரிரு ஆங்கிலப் புத்தகங்களைத் தேடிப் பெற்று அவற்றைப் பிரித்து வைத்துக் கொண்டு கதைகள் பேசுவோம்.

சிலபோது எங்களது எல்லா முயற்சிகளையும் மீறி

ஆங்கிலப் பாடம் நடைபெறுவதுமுண்டு. ஆனாலும் நாம் துவண்டு விடாது அடுத்த நாளைக்கான பாடத்தை நடத்த முடியாமல் போவதற்கான சில வேலைத் திட்டங்களில் ஈடுபடுவோம். வகுப்பிலிருக்கும் துடுக்கான மாணவர்களின் Plan களுக்கு பூரண ஒத்துழைப்பை வழங்குவதுடன் எல்லோரும் இவற்றில் பங்கு கொள்வோம்.

எங்களுக்கு இருந்த ஒரே நல்ல பழக்கம் (ஆங்கிலப் பாடவேளையைப் பொறுத்தமட்டில்) யாரும் யாரையும் காட்டிக் கொடுக்காததுதான். அன்றும் அப்படித்தான் எம்மில் ஒருவர் ஸேர் வருமுன் வகுப்பின் main switch ஐ off செய்து விட்டார். வகுப்புக்கு வந்த சேரிடம் light இல்லாமல் படிக்க முடியாதென்று வருத்தத்துடன் தெரிவித்துக் கொண்டோம். ஸேர் நினைத்திருந்தால் அன்று எழுத்து தவிர்ந்த ஏனைய எத்தனையோ பயிற்சிகளை செய்திருக்கலாம். நாங்கள் எங்கே விடப் போகிறோம்! இதே போல சிலபோது கரும்பலகையில் முன்னைய பாடவேளையின் விடயங்களை அப்படியே அழிக்காது விட்டு விடுவோம். பின்னர் ஸேரிடம் இந்த Biology படத்தை நாம் எல்லோரும் வரையவேண்டியிருப்பதால் இன்று கரும்பலகையைப் பயன்படுத்த முடியாதென்று கூறி அந்தப் பாடவேளையை நாம் பயன்படுத்திக் கொள்வோம்.

இது அந்தந்த சந்தர்ப்பங்களில் எமக்குத் தவறாகவே படவில்லை. பாவத்துக்குரிய செயலாகத் தெரியவில்லை.

ஆனால் ஒரு நாள் ஸேர் வகுப்புக்கு வரவில்லை. ஸேர் இருந்திருந்தால் இன்னும் வினோதமாக ஓய்வெடுத்திருக்கலாம். இப்போது பதிலாசிரியர் ஒருவர் Physics வந்து சொல்லிக் கொடுக்கப் போகிறார். அந்த இரண்டு நாட்களும் ஸேர் வராமல் போக ஸேருடன் நாம் கோபப்பட்டுக் கொண்டோம். அத்துடன் மூன்று நாள் விடுமுறை விடப்பட்டது.

ஸேர் திடீரென்று மரணித்து விட்டார் என்ற செய்தி எனக்குத்தான் முதலில் எட்டியது. ஹேரத் ஸேரா? என்னால் நம்பவே முடியவில்லை.

அவரது தலையில் ஒரு வெள்ளை முடிகூட இருக்கவில்லை! நாம் கடைசியாக அவரிடம் மன்னிப்புக் கேட்கவென்று இருந்தோம்! நான்தானா கண்ணீர் விடுகின்றேன் என்று என்னாலே உணர முடியவில்லை. வகுப்பில் அனைவரும் இப்படித்தான் அழுதிருப்பார்கள்.

ஸேரின் மையித்தைக் காணச் சென்றிருந்தோம். 'எம்பார்ம்' பண்ணப்பட்ட அவரது உடலைக் காணவென்று எங்களை உள்ளே அனுப்பி வைத்தார்கள். எங்களால் எப்படிப் பார்க்க முடியும்? உயிருடன் இருக்கும் பொழுது என்றாவது அவரை கண்ணியப் படுத்தியதுண்டா?

அவர் போன்ற நல்ல உள்ளங்கள் நரகில் கஷ்டப் படுமா? எங்களது 'தீன்' குறித்த செய்தியை நேரடியாக இல்லாவிட்டாலும் நன்நடத்தைகள் மூலமாவது சொல்லியிருக்கலாம். ஆனால் கடைசி காலத்தில் சில மாதங்களாக ஸேர் குர்ஆனை வாசித்துக் கொண்டிருந்தார் என்ற செய்தியை அவர் மனைவி சொன்னது சற்று நிம்மதியைக் கொடுத்தது. நிச்சயமாக அதற்குக் காரணம் நாமல்ல.

கடைசி ஓரிரு நாட்களிலாவது அவர் இறைவனை ஏற்றிருக்க வேண்டுமே என என் குற்றமுள்ள மனம் ஏங்குகிறது.

அதன் பின்னர் இறுதிப் பரீட்சை வரை நாம் ஸேரே இல்லாமல் ஆங்கிலம் படித்தோம். ஸேரின் இழப்பு எங்களை இனிமேல் தவறிழைக்காமல் பார்த்துக் கொள்ளும். எங்களால், எத்தனையோ அந்நிய சமூகத்தினர் இஸ்லாத்தைத் தேட வேண்டும், இன்ஷா அல்லாஹ்.


## மணமகன் தேவை

கொழும்பைச் சேர்ந்த தகுந்த காரணங்களுக்காக விவாகரத்துப் பெற்ற மார்க்கப்பற்றும் நல்லொழுக்கம் உள்ள பெண்ணுக்கு (வயது 43, பிள்ளைகள் இல்லை) பொருத்தமான மணமகன் தேவை. தகுந்த காரணங்களுக்காக விவாகரத்துப் பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு: 0713115212, 0777307622

---

கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த B.A (Eng) படித்த மார்க்கப்பற்றுள்ள மணமகளுக்கு (வயது 25, உயரம் 5') பொருத்தமான மணமகனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். அரசாங்கத் தொழில் அல்லது சொந்த தொழில் புரிவோர் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு: 0728417633, 0717678588

---

களுத்துறை மாவட்டத்தைச் சேர்ந்த 27 வயதுடைய இஸ்லாமிய இயக்க ஈடுபாடுடைய குர்ஆன் மத்ரஸாவின் தலைமை ஆசிரியையாகப் பணிபுரியும் மணமகளுக்கு பொருத்தமான மணமகன் தேவை. மணமகளின் மணமகன் இஸ்லாமியப் பணிகளுக்கு ஒத்தாசை வழங்குபவராக இருக்க வேண்டும்.

தொடர்புகளுக்கு: 0772930618

# சப்ரகமுவ பல்கலை முஸ்லிம் மாணவர்களின் முன்மாதிரி

எஸ்.எம். ஹிஷாம், சப்ரகமுவ பல்கலைக்கழகம்

**பல்கலைக்கழக** முஸ்லிம் மாணவர்கள் தமது இஸ்லாமிய பாரம்பரிய தனித்துவத்தை கட்டிக்காத்து, ஏனைய இன மாணவர்கள் இஸ்லாத்தைப் பற்றி கொண்டிருக்கும் தப்பெண்ணங்களைக் களையும் வகையில் பண்பாடாக நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பல்கலைக்கழகங்களின் போக்கைத் தீர்மானிக்கும் சக்தியாக விளங்குவது அந்தந்த பல்கலைக் கழகங்களிலுள்ள மாணவ ஒன்றியங்களே. இவ்வொன்றியங்களே பல்கலைக்கழக மாணவர்களை நடத்தை ரீதியாகவும் சிந்தனா ரீதியாகவும் பயிற்றுவித்து அவர்களின் ஆளுமை விருத்திக்கு களம் அமைத்துக் கொடுக்கின்றன. அவ்வப் பல்கலைக்கழக ஒன்றியங்கள் வருடாந்தம் பெருந்தொகையான பணத்தை செலவளித்து பாரிய கலை, கலாசார விழாக்களையும் பல்வேறு போட்டி நிகழ்ச்சிகளையும் நடத்தி வருகின்றன.

அந்த வகையில், இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழக முஸ்லிம் மஜ்லிஸ் அமைப்பும் வரலாற்றில் முதல் தடவையாக தனியான இஸ்லாமிய கலாசார விழாவையும் இஸ்லாமிய கலாசார பாரம்பரியங்களை காட்சிப் படுத்தும் வகையிலான மாபெரும் கண்காட்சியையும் வெற்றிகரமாக நடத்தியது. அந்த வகையில் இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழக முஸ்லிம் மஜ்லிஸ் பல்கலைக் கழக வரலாற்றில் புதியதோர் அத்தியாயத்தை படைத்துள்ளது எனலாம், அல்ஹம்துலில்லாஹ்.

இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் 8 ஆவது தடவையாக ஏற்பாடு செய்த 'பிரிஹிபினி தியவர' கலை நிகழ்வுகள் கடந்த மார்ச் மாதம் நடைபெற்றன. அதில் பல்கலைக்கழகத்தில் உள்ள ஐந்து பீடங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தி ஐந்து வகையான காட்சிக்கூடங்கள் அமைக்கப்பட்ட அதேநேரம், முஸ்லிம் மஜ்லிஸ் தனியானதொரு கண்காட்சிக்கூடத்தை பாரிய செலவில் அமைத்தது. பிரதான மாணவர் ஒன்றியம் பௌத்த கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் வகையில் பல்வேறு கலை நிகழ்ச்சிகளை அரங்கேற்றிய அதேவேளை, முஸ்லிம் மஜ்லிஸும் இஸ்லாமிய கலாசாரத்தை பிரதிபலிக்கும் வண்ணம் மாபெரும் விழாவொன்றை ஏற்பாடு செய்தது.

இவ்விழாவில் பெரும்பான்மைச் சமூக மாணவர்களிடையே இஸ்லாம் தொடர்பில் காணப்படும் சந்தேகங்களுக்கு விளக்கமளிக்கப்பட்டதுடன் இஸ்லாமிய கலாசாரம் தொடர்பான பகிரங்க கேள்வி-பதில் நிகழ்ச்சியும் இடம்பெற்றது. பல மாற்றுமத மாணவர்கள், விரிவுரையாளர்கள் தமது சந்தேகங்களை நிவர்த்தி செய்து கொண்டு இஸ்லாத்தைப் பற்றிய நல்லபிப்பிராயத்தை பெற்றுக் கொண்டமையும் குறிப்பிடத்தக்கது. மேலும் இஸ்லாமியக் கலைகளைப் பற்றிய ஒரு விரிவுரையும் இடம்பெற்றது. மட்டுமன்றி, பல்கலைக் கழகத்தை அண்டியுள்ள முஸ்லிம் பாடசாலை மாணவர்களுக்கிடையே போட்டி நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வெற்றிபெற்றோருக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன. அனைத்து நிகழ்ச்சிகளும் சிங்கள மொழியில் இடம்பெற்றமையே இவ்விழாவின் சிறப்பம்சமாகும்.

கண்காட்சியில் இஸ்லாமிய அரபு எழுத்தணிக் கலை தொடர்பான காட்சிப் பொருட்கள் வைக்கப்பட்டதோடு தொழுகை, ஹஜ் கிரியை, ஜனாஸா நல்லடக்க முறை தொடர்பான விளக்கவுரைகளுடன்கூடிய காட்சிக்கூட அமைப்புகளும் அமைக்கப்பட்டிருந்தன. இவை பௌத்த மத குருமார்கள், பெரும்பான்மையின மாணவர்கள், விரிவுரையாளர்கள் ஏனைய பொதுமக்கள் என பலரது வரவேற்பையும் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

அத்தோடு ஹிரா தகவல் நிலைய அனுசரணையில் இஸ்லாமிய புத்தகக் கண்காட்சி ஒன்றும் நடைபெற்றது.

அந்த வகையில் சப்ரகமுவ பல்கலைக்கழக முஸ்லிம் மஜ்லிஸின் முன்மாதிரியை உதாரணமாகக் கொண்டு இஸ்லாத்தின் தனித்துவத்தைப் பாதுகாத்து இஸ்லாத்தின் தூதை எத்திவைக்கின்ற பணிகளில் ஏனைய பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் முஸ்லிம் மாணவர்களும் ஈடுபட வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

## நிகாஹ் சேவையில் விளம்பரம் செய்வோர் கவனத்திற்கு

நிகாஹ் சேவையில் தமது விளம்பரங்களை இடம்பெறச் செய்வோர், அல்ஹஸனாத் பகுதியால் வழங்கப்படும் படிவத்தை பூர்த்தி செய்து அனுப்புமாறு வேண்டப்படுகிறீர்கள். எம்மால் வழங்கப்படும் படிவத்தை பூர்த்தி செய்யாத விளம்பரங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டது. படிவத்தைப் பெற்றுக் கொள்ள விரும்புவோர் 0777874984 அல்லது 0713280568 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம். (ஆசிரிய பீடம்)

## நான் பெற்றுக் கொண்ட ஈமானிய உறவு

எல்லா விடயங்களும் நினைவில் இருந்தாலும் சில விடயங்கள் மட்டும் பிரத்தியேக நினைவுகளில் இடம்பிடித்து விடுகின்றன. அவை மேகத்தில் உறைந்த பனித்துளி போல வாழ்வில் கலந்து விடுகின்றன. பூவோடு சேர்ந்துள்ள வாசம்போல உள்ளத்தில் கரைந்து விடுகின்றன. அவ்வாறு என் வாழ்வில் கலந்த, உள்ளத்தில் கரைந்த, உணர்வுகளில் உறைந்த ஓர் ஈமானிய உறவுதான் இந்த 'அல்ஹஸனாத்' சஞ்சிகை.

என் வாழ்வில் மட்டுமல்ல இன்னும் எண்ணற்ற உள்ளங்களிலும் உயிரிலும் கலந்துவிட்ட 'அல்ஹஸனாத்' சிறந்தொரு நண்பனுக்கான தகுதிகளை தன்னகத்தே கொண்டுள்ளது. நான் பெற்ற இந்த ஈமானிய உறவைப் பார்க்கும் போதும் கூட ஈமானிய வசந்தம் வீசுவதை உணர்கிறேன்.

எவ்வாறாயினும் என் உள்ளக் கடலில் ஈமானிய அலைகளை மூழ்கச் செய்ததில் அல்ஹஸனாத்துக்கும் பங்குண்டு, அல்ஹம்துலில்லாஹ்! நல்ல நண்பர்களை நபிகளார் கஸ்தூரி வியாபாரிக்கு ஒப்பிட்டார்கள். அந்த வகையில் நானும் அகமகிழ்கின்றேன்- அல்ஹஸனாத்தை ஓர் ஈமானிய உறவாய்ப் பெற்றமைக்கு. வெறும் மணல் சிதறிக் கிடந்த பாலை நிலத்தில் இஸ்லாம் எனும் குளிர்ந்த நீரூற்று பிரவாகித்தபோது... மனித இதயங்களில் மொட்டு விட்ட காட்சி வரலாற்றின் ஏடுகளில் பசுமையாக தவழ்கின்றது! அவ்வாறான இன்பமிகு இஸ்லாத்தின் தூதை எடுத்துச் செல்லும் அல்ஹஸனாத்தின் இலட்சியப் பணி தொடர நீடித்த பிரார்த்தனைகளுடன் வாழ்த்துக்களும் உரித்தாகட்டும்.

**ரூமி ரிஷானா**
**ப/அல்முர்ஷித் ம.வி, சில்மியாபுர**

## பன்முகப் பணி கொண்ட தூய பணி தொடரட்டும்

நன்மையையும் சேவையையும் மாத்திரம் கருத்திற் கொண்டு 40 வருடங்களாக அச்சு ஊடகத்தில் தடம் பதித்துள்ள அல்ஹஸனாத்தின் பணி அனைத்துத் தடைகளையும் தாண்டி வெற்றி நடைபோட இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

40 வருடப் பூர்த்தியையிட்டு வெளியிடப்பட்ட விஷேட இதழின் அனைத்து அம்சங்களும் மிகவும் சிறப்பாக இருந்தன. குறிப்பாக, அல்ஹஸனாத்தின் வரலாறு, அது பயணித்த பாதை என்பவை எம்மைப் போன்றவர்களுக்கு, அல்ஹஸனாத்தின் பணியை இலங்கையின் மூலை முடுக்கெங்கும் கொண்டு செல்ல வேண்டும் என்ற உத்வேகத்தை தந்துள்ளதோடு படித்தவர்கள் பாமர மக்கள் என்ற எந்த வேறுபாடும் இன்றி அனைத்துத் தரப்பினருக்கும் இன்னும் இன்னும் அறிமுகப்படுத்த வேண்டும் என்ற ஆர்வத்தையும் ஊட்டியுள்ளது. அதன் வளர்ச்சிக்கு எம்மாலான சகல உதவிகளையும் இறுதிவரை நல்குவதற்கு அல்லாஹ் அருள்பாலிப்பானாக!

**இப்னு யூஸுப்**


### மணமகள் தேவை

இறை திருப்தியையும் இஸ்லாமிய பிரசாரப் பணியையும் இலக்காகக் கொண்ட எளிமையாக வாழ விரும்பும் 25 வயதுடைய மணமகனுக்கு 18-22 வயதுக்கிடைப்பட்ட தகுந்த மணமகள் தேவை. மணமகள் அல்குர்ஆனை மனனமிட்டவராகவும் (ஹாபிழ்) மௌலவியாவாகவும் இருக்க வேண்டும்.

தொடர்புகளுக்கு:
0779005490


## சிறுவர் பூங்கா

**முதல் பரிசுக்குரியவர்:**
**ரீ.எப். அஃப்ரா**
**இல: 20 A, தர்கா மாவத்தை**
**இஹல கொட்டாரமுல்லை**

மே மாத அல்ஹஸனாத் இதழை பரிசாகப் பெறுவோர்

**கரீமா தாஹிர்**
அரநாயக்க

**எம். ஸரூஸ்கான்**
மருதமுனை

**எம்.எம். அப்துஸ் ஸலாம்**
வாழைச்சேனை

**எம்.ஏ. ஸப்னா அஸ்மி**
வெலிமடை

**பாத்திமா நஸீஹா**
காலி

**எம்.எம். ஹஸீர்**
திருகோணமலை

**எம்.ஆர். நஜ்முத்தீன்**
ஓட்டமாவடி

**இஸ்ஸதீன்**
அகுரணை

**ஸஹ்ஹானா ஸாதிக்**
பண்ணவ

**எம்.எப்.எப். ஹிமாஷா**
உலப்பனை

**குறிப்பு:**
விடைகளை தபால் அட்டையில் (Post Card) எழுதி அனுப்புவது வரவேற்கத்தக்கது.

# நிகாஹ் சேவை

## மணமகன் தேவை

மாவனல்லையைச் சேர்ந்த 35 வயதுடைய மார்க்கப்பற்றுள்ள க.பொ.த. உயர்தரம் கற்ற மணமகளுக்கு (உயரம் 5') இஸ்லாமிய சூழலில் வசிக்கும் மார்க்கப்பற்றுள்ள 40 வயதுக்குட்பட்ட மணமகனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

தொடர்புகளுக்கு: 0712222320

---

கேகாலை மாவட்டத்தைச் சேர்ந்த சிங்கள மொழி மூலம் G. A.Q. படித்த மணமகளுக்கு (வயது 37) படித்த அல்லது சொந்த தொழில்புரிகின்ற மணமகன் தேவை. மணமகள் 10, 11 ஆம் ஆண்டு பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு சிங்கள, ஆங்கில டியூஷன் வகுப்பு நடத்துகின்றவர். சொந்த வீடும் உண்டு.

தொடர்புகளுக்கு: 0779171678

---

திருமணமாகி 15 நாட்கள் மாத்திரம் வாழ்ந்து தகுந்த காரணங்களுக்காக விவாகரத்துப் பெற்ற கொழும்பைச் சேர்ந்த நல்லொழுக்கமுள்ள 23 வயதுடைய தையல் கலைத் துறையில் பயிற்சி பெற்ற மணமகளுக்கு (உயரம் 5' 1") 28-32 வயதுக்கிடைப்பட்ட Professional Job செய்கின்ற மார்க்கப்பற்றுள்ள மணமகனை அவரின் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். வெளிநாட்டில் தொழில் புரிவோரும் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு : 0758055603, 0758055602

---

கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்த B.Sc. Real Estate Mgt & Valuation (special) பட்டப் படிப்பை பூர்த்தி செய்துள்ள 25 வயதுடைய மணமகளுக்கு (உயரம் 5') படித்த மார்க்கப்பற்றுள்ள மணமகனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். வெளிநாட்டில் தொழில் புரிவோரும் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு: 0718202718

---

கேகாலை மாவட்டத்தைச் சேர்ந்த க.பொ.த. உயர்தரம், Nursing Diploma முடித்துவிட்டு Health Care வில் பணிபுரியும் மணமகளுக்கு (வயது 22, உயரம் 5' 2") படித்த மார்க்கப்பற்றுள்ள தொழில் புரியும் மணமகனை குடும்பத்தினர் எதிர்பார்க்கின்றனர்.

தொடர்புகளுக்கு: 0776230109

---

கேகாலை மாவட்டத்தைச் சேர்ந்த 28 வயதுடைய ய.பு பட்டப் படிப்பை முடித்துவிட்டு ஆசிரியையாகக் கடமை புரியும் மார்க்கப்பற்றுள்ள மணமகளுக்கு மார்க்கப்பற்றுள்ள மணமகனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். கேகாலை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு: 0715119316

---

கேகாலை மாவட்டத்தைச் சேர்ந்த க.பொ.த. உயர்தரம் படித்த 26 வயதுடைய மார்க்கப்பற்றுள்ள மணமகளுக்கு சிறந்த மார்க்கப்பற்றுள்ள மணமகனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். மேல் மாகாணத்தைச் சேர்ந்தோர் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு: 0715119316

---

கேகாலை மாவட்டத்தைச் சேர்ந்த விஞ்ஞான பட்டதாரி ஆசிரியையாக கடமையாற்றும் மணமகளுக்கு (வயது 26) பெற்றோர் பொருத்தமான மார்க்கப்பற்றுள்ள மணமகனை எதிர்பார்க்கின்றனர்.

தொடர்புகளுக்கு: 0773786127

---

கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த க.பொ.த. உயர்தரம் கற்ற E-Commerce மற்றும் கணனி கற்கைநெறிகளை கற்றுள்ள மணமகளுக்கு (25 வயது 5' 3") பொருத்தமான மணமகனை அவரின் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

தொடர்புகளுக்கு: 0777783203

---

கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த க.பொ.த. சாதாரண தரம் கற்ற மார்க்கப்பற்றுள்ள மணமகளுக்கு (வயது 26) கண்டி அல்லது மாத்தளை மாவட்டத்தைச் சேர்ந்த மார்க்கப்பற்றுள்ள மணமகனை அவரின் குடும்பத்தினர் எதிர்பார்க்கின்றனர்.

தொடர்புகளுக்கு: 0726705136

---

ஆஇஷா சித்தீக்கா கலாபீடத்தில் கல்வி கற்ற மார்க்கப்பற்றுள்ள மணமகளுக்கு (வயது 27, உயரம் 5' 2") கேகாலை பிரதேசத்தைச் சேர்ந்த மார்க்கப்பற்றுள்ள மணமகனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

தொடர்புகளுக்கு: 0728376192

---

கொழும்பு பிரதேசத்தைச் சேர்ந்த க.பொ.த. சதாரண தரம் கற்ற 35 வயதுடைய மணமகளுக்கு பொருத்தமான மார்க்கப்பற்றுள்ள மணமகனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

தொடர்புகளுக்கு: 0777339557

---

கேகாலை மாவட்டத்தைச் சேர்ந்த நல்லொழுக்கமுள்ள, இஸ்லாமிய குடும்பப் பின்னணியில் வளர்ந்த 28 வயதுடைய மணமகளுக்கு (உயரம் 5' 3") தகுந்த நல்லொழுக்கமும் மார்க்கப்பற்றுமுள்ள மணமகனை அவரின் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

தொடர்புகளுக்கு: 0729776797

# 1 லட்சம் ரூபாய் பரிசுப் போட்டி!

உலகம் போற்றும் உத்தமர்

## நபிகள் நாயகம் (ஸல்)

வாழ்வு • வாக்கு • வரலாறு

குறித்து நல்ல தமிழில், ஆய்வு நடையில், ஆதாரங்களின் அடிப்படையில், தமிழ் மொழிக்கு அணிசேர்க்கும் விதம் படைப்புகளை அனுப்பலாம். போட்டியில் கலந்துகொள்ளும் படைப்பாளர் ஒருவருக்கு முதல் பரிசாக ரூபாய் ஒரு லட்சமும், விருதும் வழங்கப்படும். சிறப்புத் தகுதி பெறும் மற்ற படைப்புகளுக்கு ஆறுதல் பரிசுகளும் உண்டு. நூல் எழுத நினைப்போர் Haykal எழுதிய The Life of Mohamed என்ற நூலை ஆதாரமாகக் கொள்ளலாம். இந்நூல் அரபியிலும் (ஹயாத்து முஹம்மது) வெளிவந்துள்ளது.

**அனைத்து சமய அன்பர்களும் போட்டியில் பங்கேற்கலாம்!**

**நிபந்தனைகள் :** உங்கள் படைப்பு A4 தாளின் ஒரு பக்கத்தில், 450 பக்கங்களுக்குக் குறையாமல், கணினி தட்டச்சு செய்யப்பட்டிருக்க வேண்டும். • நல்ல தமிழில் அனைத்து சமயத்தாருக்கும் எளிதில் புரியும் வண்ணம் எழுதப்பட வேண்டும். • ஓய்வு பெற்ற நீதிபதி, சமய அறிஞர் மற்றும் தமிழறிஞர் ஆகியோர் அடங்கிய குழு சிறந்த படைப்பைத் தேர்வு செய்யும். • நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது. • தேர்ந்தெடுக்கப்படும் நூல், சென்னை ரஹ்மத்அறக்கட்டளையின் பதிப்புரிமைக்கு உரியது. • படைப்புகள் வந்து சேர வேண்டிய கடைசித் தேதி 31.12.2010

afigrafik

சென்னை ரஹ்மத் அறக்கட்டளை

**ரஹ்மத் பதிப்பகம்**

*(இது ஒரு சென்னை ரஹ்மத் அறக்கட்டளை நிறுவனம்)*

6, இரண்டாவது பிரதான சாலை, சி.ஐ.டி காலனி,
மயிலாப்பூர், சென்னை - 600 004,
தொலைபேசி : 044-2499 7373 கைபேசி : 94440 25000
Pleas Visit : www.rahmath.net, E-mail : buhari@rahmath.net

மேலதிக விபரங்களுக்கு,

**M.A. முஸ்தபா**

(நிறுவனர், சென்னை ரஹ்மத் அறக்கட்டளை)

**கைபேசி : 95000 37000**


E-mail : musthafa@agccapital.com.sg

# MITT

## Mawanella Institute Of Technical Training

## MITT வழங்கும் தொழில் நுட்ப பயிற்சி நெறிகள்

**தொழில்நுட்பக் கற்கைநெறி வரலாற்றில் புதிய பரிணாமம்!**
**மிகச் சிறந்த முறையில் வடிவமைக்கப்பட்ட மற்றும் வாழ்க்கையை வளமாக்கக் கூடிய தொழில்நுட்ப பயிற்சிநெறியை தெரிவு செய்யுங்கள்!!**
**நாளை நீங்களும் ஒரு தொழில்நுட்பவியலாளராகலாம்!!!**



### Courses

| Courses | Details |
| --- | --- |
| - Auto Mobile Repairing | Monthly 5000/= One Year Course Weekly 5 Day Classes |
| - Air Conditioning and Refrigeration<br>- Electrical Wiring- Domestic<br>- Auto Electrical Repairing<br>- Electronics (TV, Radio) | Monthly 5000/= 6 Month Course Weekly 5 Day Classes |
| - Plumbing - Welding<br>- Tailoring - Masonry | Monthly 5000/= , 3 Month Course Weekly 5 Day Classes |
| - Mobile Phone Repairing | 2 Month Course , Course Fee 12,000/= |
| - Fiber Glass Technology | One Week Course , Course Fee 3,000/= |

### இப்பயிற்சி நெறி.......

- தமிழ் மொழி மூலம் நடத்தப்படும்
- கோட்பாடுகள் மற்றும் செயல் முறைப் பயிற்சியும் கொண்டது
- தேர்ச்சியும் அனுபவமும் வாய்ந்த விரிவுரையாளர்களை உள்ளடக்கியுள்ளது

தேவையானோருக்கு விடுதி மற்றும் உணவு வசதிகள் செய்து கொடுக்கப்படும்

ஸகாத் பெறத் தகுதியான மாணவர்களுக்கான புலமைப் பரிசில் வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

நேர்முகப் பரீட்சை மே மாதம் 22, 23ஆம் திகதிகளில் காலை 8.30 முதல் MIIT இல் நடைபெறும். தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு உங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளவும்

### தொடர்புகளுக்கு

**COORDINATOR**
**M.H.M Muhallis-**
071- 6263606, 077- 8329553, 077- 7412097

**THE DIRECTOR**
**MAWANELLA INSTITUTE OF TECHNICAL TRAINING**
NO. 57, Hemathagama Road, Mawanella, Sri Lanka.
Tel : 071- 6263606, 0777 412097, 077 2992133, 035 4905533
E-mail : techmaw@gmail.com

# GCE O/L மற்றும் A/L இன் பின்னர்

## வெளிநாட்டு உயர்கல்வி மற்றும் உடனடித் தொழில் வாய்ப்பை உத்தரவாதப்படுத்தும் British College




- Computing
- Software Engineering
- Business IT
- Business Management
- Quantity Surveying
- Hospitality Management
- CAD & BS, Land Surveying
- International Engineering Foundation
- Law
- Teacher Training
- MCP/MCSA/MCSE
- Human Resource Management
- IELTS

O/L, A/L தகைமைகளுடன் மாத்திரம் வெளிநாட்டு உயர்கல்வியினைப் பெற முயற்சி செய்கின்ற மாணவர்கள் அநேகமானோர் பிரபல பல்கலைக்கழகங்களில் அனுமதி பெறுவதிலும் (Admission) உயர் கல்விக்கான Visa க்களைப் பெறுவதிலும் தவறிவிடுகின்றனர். British College of Applied Studies (BCAS) வழங்கும் கவனமாக வழவமைக்கப்பட்ட ACCESS Programme எனும் Degree Foundation பாடநெறி மாணவர்கள் கனணி, ஆங்கிலப் புலமை, பொதுத் திறன்கள் என்பவற்றை குறுகிய காலத்தில் விருத்தி செய்வதோடு வெளிநாட்டு உயர்கல்விக்குத் தேவையான அடிப்படைத் தகைமைகளாக 6 சான்றிதழ்களையும் பெற்றுக் கொடுக்கிறது.

சர்வதேச அங்கீகாரம் பெற்ற Edexcel UK நிறுவனத்துடன் இணைந்து BCAS வழங்கும் BTEC HND தகைமை உலகின் பிரசித்தி பெற்ற 105 பல்கலைக்கழகங்களில் BSc (Hons) பட்டப்படிப்பின் இறுதி ஆண்டிற்கான நேரடி அனமதியைப் பெற்றுத் தருவதோடு உயர்கல்விக்கான Visaக்களையும் உறுதி செய்கிறது. இலங்கையில் Computing, Software Engineering, Quantity Surveying, Business Management, Hotel Management, BIT, Telecommunication Engineering, Law ஆகிய பல்வேறு துறைகளில் BCAS மாத்திரம் BTEC HND தகைமைகளுக்கான பாடநெறிகளை வழங்குகிறது. கடந்த 10 ஆண்டுகளில் Access Programme மற்றும் BTEC HND பாடநெறிகள் மூலமாக ஆயிரத்துக்கும் அதிகமான மாணவர்களுக்கு வெளிநாட்டு உயர்கல்வி வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுத்த BCAS கடந்த ஆண்டில் மாத்திரம் 101 மாணவர்கள் UK பல்கலைக்கழகங்களில் உயர்கல்விக்கான Visa பெறுவதற்காக வழிகாட்டியுள்ளது.

இலங்கையில் BCAS மாத்திரமே வழங்கும் CAD & BS, HND in Quantity Surveying பாடநெறிகள் கட்டட நிருமாணத் துறையில் அதிகூடுதல் வருமானம் தரும் உடனடி தொழில் வாய்ப்புகளை உத்தரவாதப்படுத்துகிறது.

**BSc (Hons)/BEng (Hons)**
10 Months at leading Universities in UK, USA, Australia, Canada etc.,

**BTEC HND 16 Months - Full Time**

| | | |
|---|---|---|
| Computing<br>Software Engineering<br>BIT | Quantity Surveying<br>Telecommunication Engineering | Business Management<br>Law |

**GCE A/L** | Access Programme / International Engineering Foundation

**GCE O/L**

**British College of Applied Studies**

32, Dharmarama Road, Colombo 06.
Tel: 2559255, 2501145, 773114105
344, Peradeniya Road, Kandy.
Tel: 812204388, 777634508

**www.bcas.lk**

HOTLINE
**2 55 92 55**

**Hi-Tech Computer Training & Consulting Center**

# WinSYS NETWORKS

*The network security training provider of the nation*

No: 14, Schofield Place, Kollupitiya, Colombo-03, Sri Lanka.
Tel: 011-2589567/8, 011-4340666, 0777 259927

# E-win NETWORKS

*No: 223, D.S. Senanayaka Street, Kandy, Sri Lanka.*
Kandy:- 081-2203785/6, 0777 04 77 08

www.winsysnetworks.net info@winsysnetworks.net

## Get a Double Diploma
**In Hardware & Networking**
**Just for 4000/=**

## Get a Special Diploma In
**Network Administration**
**Just for 7000/=**

**Another First Time in Sri Lankan HISTORY**
**Join for CCNA/MCP/MCSA and Get Your 4000/=Rs FREE Hardware Voucher**
and It can be TRANSFERABLE for anyone you like
Conditions Apply

## MCTS
*Microsoft Certified Technology Specialist*
070-680 MCTS: Windows 7 Configuring
**Windows 7 Configuring Only 8000/=**

| | | |
|---|---|---|
| CCNA | Exam 640 - 802 | 12,000/= Conditions Apply |
| CCNA Security | Exam 640 - 553 | 15,000/= |
| CCNA VOICE (CVOICE) | Exam 642 - 436 | 40,000/= |
| CCNP | (PER MODULE) Exam (642-901 BSCI /642-812 BCMSN /642-825 ISCW /642-845 ONT) | 15,000/= |
| CCSP | (PER MODULE) Exam (642-504 SNRS /642-524 SNAF /642-533 IPS 642-591 CANAC OR 642-545 MARS OR 642-515 SNAA) | 25,000/= |
| CCVP | (PER MODULE) Exam (642-436 CVOICE /642-446 CIPT1 /642-642 QoS /642-456 CIPT2 /642-426 TUC /642-642 QoS /642-436 CVOICE (CVOICE v6.0) OR (CVOICE v5.0) AND (CVF v1.0) /642-426 TUC /642-444 CIPT 4.1(CIPT1 4.1) AND (CIPT2 4.1) 642-453 GWGK) | 40,000/= |
| MCP | Exam Pay For One 70-270 Get One Free 70-290 | 12,000/= Conditions Apply |
| MCSA | Exam Pay For One 70-291 Get One Free 70-284 | 15,000/= |
| MCTS | Exam 70-640 Active Directory Configuration | 12,000/= |
| | 70-643 Approbations Infrastructure | 12,000/= |


**Those Who Succeed Microsoft & CISCO Last Week.**

Prasanga Jayawardana



910/1000 CCNA

Anuruddika Peranauna



949/1000 CCNA

Raihan Ameer



960/1000 MCP

## இலங்கை கணணி வரலாற்றில் முதல் முறையாக

| | | |
|---|---|---|
| **CCIE** Cisco Certified Internetwork Expert Routing and Switching | **CCIE** Cisco Certified Internetwork Expert Voice | **CCDA** Cisco Certified Design Associate 640-863 DESIGN Designing for Cisco Internetwork Solutions |

இலங்கையில் 100 க்கும் மேற்பட்ட Cisco Routers மற்றும் Switch களை உள்ளடக்கிய ஒரே Network பயிற்சி நிலையம்.

கடந்த 7வருடங்களில் 4000க்கும் மேற்பட்ட மாணவர்கள் நம்பி வந்த ஒரே இடம்.

1000/1000 என்ற சாதனைகள் ஒன்றல்ல இரண்டல்ல பல மாணவர்களை உருவாக்கிய பெருமை WinSYS Network நிறுவனத்திற்கு உள்ளது. சாதனைகள் தொடரும்...

பயிற்சி மட்டும் அல்லாது அதனை இயல் வாழ்க்கையில் உபயோகிக்கும் முறையான இடங்களை சரியான முறையில் மாணவர்களுக்கு தெளிவு படுத்தும் ஒரே இடம்.

தலைநகர் கொழும்புக்கு வெளியே Cisco பயிற்சியை Kandy (e-win Networks) & Jaffna (mcs) Batticaloa: Cims என எடுத்து சென்ற ஒரே பயிற்சி நிலையம்.

ஆரம்பம் முதல் இன்று வரை இலங்கை அரசாங்கத்தால் நம்பத்தகுந்த நிறுவனம் என்பதால் அரச ஊழியர்களை பயிற்றுவிப்பதற்காக WinSYS நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அனுபவம் வாய்ந்த Network மற்றும் Security பயிற்சிகளை உங்களுக்கு பயிற்றுவிக்கும் ஆசிரியர்களை உள்ளடக்கிய இலங்கையின் ஒரே தலை சிறந்த நிறுவனம்.

**Visit us or Call for More Details**

CISA CISM (CISSP) C|EH C|HFI Linux ubuntu php MySQL

**BRANCHES**
(MCS Institute) No. 324 Palaly Road, Jaffna.
Batticaloa: (CIMS) No. 04, Sir Razeek Fareed Mw, Kattankudy.
Galle: (GOLBAL SLUTIONS TECHNOLOGY) No. 443/1 Wackwella Road, Galle.

Registered as a News Paper in Sri Lanka QD/42/News /2010
Printed By: A.J. Prints (Pvt) Ltd. Dehiwala (0112723205)